




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:80 | 05-10-2025 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

05.10.2025 புரட்டாசி 19
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.02

திதி:
இன்று பிற்பகல் 1.24 வரை திரயோதசி பின்பு சதுர்த்தசி.

நட்சத்திரம்:
இன்று காலை 6.58 வரை சதயம் பின்பு பூரட்டாதி.

யோகம் :
இன்று மாலை 4.24 வரை கண்டம் பின்பு விருத்தி.

கரணம் :
இன்று அதிகாலை 2.01 வரை கௌலவம் பின்பு பிற்பகல் 1.24 வரை தைதுலம் பின்பு கரசை

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.01 வரை அமிர்த யோகம் பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று காலை 6.58 வரை பூசம் பின்பு ஆயில்யம்.

நல்ல நேரம்
காலை 7.45 – 8.45 .
மாலை 3.15 – 4.15.
இராகு காலம்
மாலை 4.30 – 6.00.
எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று சனி
மஹா பிரதோஷம் நாள்.
ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# பிற்போக்குத்தனத்தை புகுத்த நினைப்பதை தடுக்கும் அரண்தான் திராவிட மாடல்

## முதல்வர் ஸ்டாலின் விளக்கம்!



**செங்கல்பட்டு, அக்.5:** திராவிட மாடல் பெயர்க்காரணம் எதற்காக வந்தது என்பதை முதல்வர் மு.க. ஸ்டாலின் விளக்கியுள்ளார்.

செங்கல்பட்டு அருகேயுள்ள மறைமலை நகரில் சனிக்கிழமை(அக். 4) மாலை திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு பேசினார்.

இவ்விழாவில், சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு மாநாட்டுக்கான நினைவு கல்வெட்டை திறந்து வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியிருப்பதாவது:

“சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழா மாநாட்டில் மானமிகு சுயமரியாதைக்காரன் என்ற உணர்வுடன் பங்கெடுப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். திராவிடர் கழகத்தின் நீட்சிதான் திராவிட முன்னேற்ற கழகம்(திமுக).

பெரியாரின் சிந்தனைகள் ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் வரை பேசப்படுகிறது. இது பெரியார் கொள்கைக்கும், திராவிட சிந்தனைக்கும் கிடைத்த வெற்றி!

திருச்சியில் உருவாகி வரும் பெரியார் உலகம் பணிகளுக்காக திமுக எம்.பி, எம்.எல்.ஏ.,க்களின் ஒரு மாத ஊதியத் தொகை வழங்கப்படும். பெரியார் உலகமயமாக வேண்டும்; உலகம் பெரியார்மயமாக வேண்டும்.

இந்த 100 ஆண்டுகளில் நாம் மாற்றத்திற்கான விதைகளை மட்டும்தான் விதைத்திருக்கிறோம். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நாங்கள் உருவாக்கி உள்ள கட்டமைப்புகளை உங்களால் உடைக்க முடியவில்லை. அவர்களுக்கு எரியட்டும் என்றுதான் திரும்பத்திரும்ப திராவிட மாடல் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறேன். என்னுடைய செயல்களால் மட்டும் பதிலடி கொடுத்துக் கொண்டிருக்கிறேன். எதுவுமே மாறக் கூடாது என சதித்திட்டம் தீட்டுபவர்களின் எண்ணத்தை மக்கள் பார்க்க வேண்டும்.

சிலர் திமுகவை பிடிக்காது என்பார்கள்; இடஒதுக்கீடு, சமத்துவம், சமூக நீதி பிடிக்காதது என்பதன் பொருள்தான் அது. பிற்போக்குதனத்தை தூக்கிப் பிடிப்பதற்கான சூழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. பிற்போக்குத்தனத்தை புகுத்த நினைப்பதை தடுக்கும் அரண்தான் திராவிட மாடல். தமிழினம் தன்னை காத்துக் கொள்ளக் கூடிய சமுதாய தேர்தல்தான் 2026-ஆம் ஆண்டு தேர்தல்” என்றார்.

# ஜப்பானின் முதல் பெண் பிரதமராகிறார் சனே தகைச்சி

**டோக்கியோ, அக்.5:** ஜப்பானின் ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவராக தேர்வாகியுள்ள சனே தகைச்சி, இம்மாத மத்தியில் அந்நாட்டின் பிரதமராக பதவியேற்க உள்ளார்.

ஜப்பானின் ஆளும் கட்சியாக லிபரல் டெமாக்ரடிக் கட்சி உள்ளது. இக்கட்சியின் தலைவராகவும் ஜப்பானின் பிரதமராகவும் இருந்த ஷிகெரு இஷிபா, ஓராண்டு பதவிக்காலத்துக்குப் பிறகு பதவி விலகப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். இதையடுத்து, லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் சனே தகைச்சி வெற்றி பெற்றதாக இன்று அறிவிக்கப்பட்டது.

முதல் கட்ட வாக்குப்பதிவில், மொத்தமுள்ள 589 வாக்குகளில் 183 வாக்குகளை சனே தகைச்சி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கொய்சுமி 164 வாக்குகளைப் பெற்றார். மற்ற மூன்று போட்டியாளர்கள், போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இரண்டாவது சுற்றில் கட்சி எம்பிக்கள் வாக்களித்தனர். இதில், சனே தகைச்சியைவிட கொய்சுமி அதிக வாக்குகளைப் பெற்றார். எனினும், இரண்டாவது சுற்றுக்குப் பிறகு நடத்தப்பட்ட தீர்க்கமான சுற்று வாக்கெடுப்பில் சனே தகைச்சி வெற்றி பெற்றார். இதையடுத்து, லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவராக சனே தகைச்சி முறைப்படி பொறுப்பேற்றார். அவருக்கு கட்சியின் மூத்த தலைவர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர். இதையடுத்து, அவர் நாட்டின் பிரதமராக இம்மாத மத்தியில் பதவியேற்க உள்ளார். 64 வயதாகும் வலதுசாரி தலைவரான சனே தகைச்சி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி இருக்கும். லிபரல் டெமாக்ரடிக் கட்சி தலைமையிலான கூட்டணி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கவில்லை. எனினும், நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெறுவார் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 70 ஆண்டுகளாக ஜப்பானின் ஆளும் கட்சியாக லிபரல் டெமாக்ரடிக் கட்சியே பெரும்பாலும் இருந்து வருவது குறிப்பிடத் தக்கது.




பல லட்சம் வாசகர்களை கொண்ட தமிழ்நாடு இ-பேப்பரை https://epaper.tamilnaduepaper.com/ இணையதளத்தில் படித்து பயன்பெறுங்கள்


# அடுத்த வாரம் இந்தியா வருகிறார் இங்கிலாந்து பிரதமர்



**புதுடெல்லி,அக்.5:** இங்கிலாந்து பிரதமராக கெய்ர் ஸ்டார்மர் பதவி வகித்து வருகிறார். அவர் கடந்த ஆண்டு இங்கிலாந்து பிரதமராக பொறுப்பேற்றார்.

இந்நிலையில், பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் 2 நாள் அரசுமுறை பயணமாக அடுத்த வாரம் இந்தியா வர உள்ளார்.

வரும் 8-ம் தேதி இந்தியா வரும் கெய்ர் ஸ்டார்மர் பிரதமர் மோடியைச் சந்திக்கிறார். இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

கெய்ர் ஸ்டார்மரும், மோடியும் 9-ம் தேதி மும்பையில் நடைபெறும் நிகழ்ச்சியில் தொழிலதிபர்களுடன் ஆலோசனை நடத்த உள்ளனர் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா, அமெரிக்கா இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில் இங்கிலாந்து பிரதமரின் இந்திய வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

பிரதமராக பதவியேற்றபின் கெய்ர் ஸ்டார்மர் மேற்கொள்ளும் முதல் இந்திய பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# காஸா அமைதி முயற்சியில் முன்னேற்றம்: டிரம்ப் பணிகளுக்கு மோடி வரவேற்பு

**புது டில்லி,அக்.5:** காஸாவில் அமைதி கொண்டும் வரும் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை வரவேற்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, இதற்காக அமெரிக்க அதிபர் டிரம்ப் மேற்கொண்ட பணிகளை வரவேற்று பாராட்டியுள்ளார்.

காஸா போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள 20 அம்ச திட்டத்தை ஹமாஸ் அமைப்பினா ஞாயிற்றுக்கிழமைக்குள் (அக். 5) ஏற்காவிட்டால், இதுவரை யாருமே காணாத அளவுக்கு மிக மோசமானபேரழிவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று எச்சரித்ததுடன், ஒரு வழி அடைக்கப்பட்டால்இன்னொரு வழியைப் பயன்படுத்தி மத்தியக் கிழக்கு பகுதியில் அமைதியை நிலைநாட்டியே தீருவோம் என்று அமெரிக்க அதிபா டொனால்ட் டிரம்ப் சூளுரைத்துள்ளாா்.

டிரம்ப்திட்டத்தைஏற்பதாக ஏற்பதாக இஸ்ரேல் பிரதமா பெஞ்சமின் நெதன்யாகு ஏற்கெனவே அறிவித்துவிட்ட நிலையில், இது தொடா்பாக ஹமாஸ் அமைப்பினா தொடா்ந்து மௌனம் காத்துவரும் சூழலில் டிரம்ப் இந்தக் கெடுவை விதித்துள்ளாா்.

இந்நிலையில், காஸாவில் அமைதி கொண்டும் வரும் முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை வரவேற்றுள்ள பிரதமர் நரேந்திர மோடி, இதற்காக அமெரிக்க அதிபர் டிரம்ப் மேற்கொண்ட பணிகளை வரவேற்று பாராட்டியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் மோடி வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளதாவது:

காஸாவில் அமைதி கொண்டு வருவதற்கான முயற்சிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வரும் நிலையில், அதற்கு தலைமை வகித்து அதிபர் டிரம்ப் மேற்கொண்டு வரும் பணிகளை நாங்கள் வரவேற்கிறோம்.

பிணைக் கைதிகள் அனைவரையும் விடுவிக்கும் முடிவு, மோதலை முடிவுக்கு கொண்டு வருவதில் ஒரு குறிப்பிடத்தக்கமுன்னேற்றத்தை குறிக்கின்றன.

நியாயமான முறையில், அமைதியை நோக்கி எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளையும் இந்தியா தொடர்ந்து ஆதரிக்கும் என்று மோடி கூறியுள்ளார்.

டிரம்பின் 20 அம்ச திட்டத்தை ஏற்பது குறித்து பரிசீலித்துவருவதாக ஹமாஸ் அமைப்பு கூறியது. கத்தாரில் நடைபெறும்தீவிர ஆலோசனைக் கூட்டத்துக்குப் பிறகு இந்த வரைவு ஒப்பந்தத்தை ஏற்பதா, வேண்டாமா என்ற முடிவை ஹமாஸ் அமைப்பு எடுக்கும் என்று எதிா்பாா்க்கப்பட்டது.

இருந்தாலும், நான்கு நாள்களாகியும் ஹமாஸிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை என்று சூழலில், வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் போா் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மேற்கொள்ள வேண்டும் என்று டிரம்ப் தற்போது கெடு விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2023 அக். 7-ஆம் தேதி இஸ்ரேலுக்குள் நுழைந்த ஹமாஸ் படையினா சுமாா் 1,200 பேரை படுகொலை செய்தது, 200-க்கும் மேற்பட்டவா்களை பிணைக் கைதிகளாக கடத்திச் சென்றதற்கு பதிலடியாக, காஸாவில் இஸ்ரேல் ராணுவம் தொடா்ந்து தாக்குதல் நடத்திவருகிறது. இதில் இதுவரை 66,288 போ் உயிரிழந்துள்ளனா். அவா்களில் மிகப் பெரும்பாலானவா்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள்.

போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில், அந்த நாடு மற்றும் அமெரிக்காவின் கடும்எதிா்ப்பை மீறி பாலஸ்தீனத்துக்கு தனி நாடு அந்தஸ்து வழங்குவதாக பிரிட்டன், ஆஸ்திரேலியா, பிரான்ஸ் உள்ளிட்ட முக்கிய நாடுகள் அண்மையில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபையின் 80-ஆவது அமா்வில் அறிவித்தன. இதனால் உலக அரங்கில் இஸ்ரேல் இதுவரை இல்லாத அளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா வந்த நெதன்யாகு, அதிபா டிரம்ப்பை வெள்ளை மாளிகையில் கடந்த திங்கள்கிழமை சந்தித்துப் பேசினாா்.

அப்போது, ஒப்பந்தம் அமலுக்கு வந்ததும் உடனடி போா் நிறுத்தம், 72 மணி நேரத்துக்குள் அனைத்து பிணைக் கைதிகளும் விடுவிக்கப்படுவது, அதற்கு பதிலாக இஸ்ரேல் சிறைகளில் உள்ள 250 பாலஸ்தீன ஆயுள் தண்டனை கைதிகள் மற்றும் 2023 அக். 7 முதல் கைது செய்யப்பட்ட சுமாா் 1,700 காஸா மக்கள் விடுவிப்பு, இஸ்ரேல் படையினரின் படிப்படியான வெளியேற்றம், ஆயுதங்களைக் கைவிடும் ஹமாஸ் அமைப்பினருக்கு பொதுமன்னிப்பு, காஸாவுக்கு முழு நிவாரண உதவிகள், காஸாவில் டிரம்ப் தலைமையிலான சா்வதேச குழுவின் மேற்பாா்வையில் பாலஸ்தீன குழுவின் இடைக்கால நிா்வாகம் (அதில் ஹமாஸ் பங்கேற்காதது), அண்டை நாடுகளுக்கு ஹமாஸால் இனியும் அச்சுறுத்தல் இல்லை என்ற உத்தரவாதம், காஸாவில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவதற்கான சா்வதேச படை, காஸாவை இஸ்ரேல் ஆக்கிரமிக்காது என்று உறுதிமொழி, பாலஸ்தீன தேசம் அமைவதற்கான வாய்ப்பு உள்ளிட்ட 20 அம்சங்கள் நிறைந்த புதிய செயல்திட்டத்தை டிரம்ப் முன்வைத்தாா்.

இந்த திட்டத்தை ஏற்பதாக அறிவித்த பெஞ்சமின் நெதன்யாகு, இது இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்; ஹமாஸிடம் இருந்து காஸாவுக்கு விடுதலை பெற்றுத் தரும் என்று பாராட்டினாா்.

இந்த வரைவு திட்டத்தை இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள், பாகிஸ்தான், சவூதி அரேபியா உள்ளிட்ட முஸ்லிம் நாடுகள் வரவேற்றுள்ளன.









## திருக்குறள் குறள்-400

**கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு மாடல்ல மற்றை யவை**



ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

## சிந்திக்க ஒரு நொடி



பணக்காரன் மகன் செலவாளி
செலவாளி மகன் கடனாளி
கடனாளி மகன்
பொறுப்பாளி
பொறுப்பாளி மகன்
பணக்காரன்
இது தான் வாழ்க்கை

**ராஜகோபாலன்.J**
சென்னை 18

## முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டி தூத்துக்குடி வீரர் – வீராங்கனைகளை அமைச்சர் கீதாஜீவன் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னையில் நடக்கும் முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் தூத்துக்குடி வீரர் – வீராங்கனைகளை அமைச்சர் கீதாஜீவன் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

## இந்து சமய அறநிலையத்துறையின் மண்டல இணை ஆணையர் அலுவலகம் திறப்பு



திருவள்ளூரில் இந்து சமய அறநிலையத்துறையின் மண்டல இணை ஆணையர் அலுவலகத்தை அமைச்சர் நாசர் திறந்து வைத்தார்.கலெக்டர் பிரதாப்,எம்எல்ஏக்கள், வி.ஜி. ராஜேந்திரன், சந்திரன், ஆ. கிருஷ்ணசாமி, கோவிந்தராஜன் உள்பட பலர் பங்கேற்றனர்.

## 14 வழித்தட பேருந்து



திருவாரூர் பேருந்து நிலையத்தில்", 14 வழித்தட பேருந்துகளை அமைச்சர்கள் நேரு, டிஆர்பி ராஜா கொடி அசைத்து துவக்கி வைத்தனர்.

## பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலில் சிறப்பு பிரசாதம்



சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோவிலில் புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமையையொட்டி உதயநிதி ஸ்டாலின் அறக்கட்டளை சார்பாக அமைச்சர் சேகர்பாபு நேற்று சிறப்பு பிரசாதம் வழங்கினார்.

## அண்ணாமலையார் மலை கிரிவலம்



**திருவண்ணாமலை, அக்.5:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் கிரிவலம் செல்ல உகந்த நேரம் புரட்டாசி மாதம் பௌர்ணமி அக்டோபர் -6 ஆம் தேதி காலை 11:49 மணிக்கு தொடங்கி மறுநாள் காலை 7 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 9:53 மணிக்கு நிறைவடைகிறது. இந்த நேரத்தில் கிரிவலம் செல்லலாம் என்று கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை.**

## திமுக நிர்வாகிகளுடன் ஆலோசனைக் கூட்டம்



உசிலம்பட்டி சட்டமன்ற தொகுதி திமுக நிர்வாகிகளுடன் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி பேசினார்.

## வன பாதுகாப்பு விழாவில் மாணவ, மாணவிகள் உறுதி மொழி



பெரம்பலூரில் வன பாதுகாப்பு விழாவில் மாணவ, மாணவிகள் உறுதி மொழி எடுத்தனர்.

## சொர்ண அலங்காரத்தில் அலமேலு மங்கை தாயார் சமேத ஸ்ரீசீனிவாச பெருமாள்



திண்டுக்கல் மலையடிவார சீனிவாசப் பெருமாள் கோவிலில் நேற்று புரட்டாசி சனிக்கிழமை அன்று சொர்ண அலங்காரத்தில் அலமேலு மங்கை தாயார் சமேத ஸ்ரீசீனிவாச பெருமாள் அருள் பாலித்தனர்.

## மகிஷாசுரவர்த்தினி அலங்காரத்தில் கன்யகா பரமேஸ்வரி அம்மன்



கடலூர் மாவட்டம் புவனகிரி வாசவிஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி 11-ஆம் நாள் உற்சவம் மகிஷாசுரவர்த்தினி அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. இவ் விழாவினை ஏற்பாடு செய்தவர்கள் ஆர்ய வைசிய சமாஜம் புவனகிரி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**


## உச்சனிமாகாளியம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா





அருப்புக்கோட்டை நகராட்சி வெள்ளைக்கோட்டையில் உச்சனிமாகாளியம்மன் கோவில் முளைப்பாரி திருவிழாவில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் பங்கேற்றார்.

## அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நெய் குளம் தரிசனம்



**கடலூர், அக்.5:**

கடலூர் மாவட்டம் மேல் புவனகிரி அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி விஜயதசமியை முன்னிட்டு நெய் குளம் தரிசனம் மற்றும் படையல் சர்க்கரைப் பொங்கல், வடை, வண்ணக் கலவை சாதங்கள் வைத்து படையல் செய்யப்பட்டது. ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார்கள். வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பிரம்மபுரம் ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் மூன்றாவது சனிக்கிழமையையொட்டி சிறப்பு வழிபாடு









**வேலூர், அக். 5:**

வேலூர் மாவட்டம், காட்பாடி அடுத்த பிரம்மபுரம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

பிரம்மபுரம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் மூன்றாவது சனிக்கிழமையை முன்னிட்டு காலை நான்கு மணி அளவில் நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடந்தது. இதை தொடர்ந்து ஸ்ரீபிரசன்ன வெங்கடேச பெருமாள் வெள்ளிக் கவசத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

பக்தர்கள் நீண்ட கியூ வரிசையில் காத்திருந்து ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாளை தரிசனம் செய்தனர். கோவிலில் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாளை தரிசனம் செய்த பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

பூஜைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் பிரம்மபுரம் ஊராட்சி மன்ற தலைவர் ராதாகிருஷ்ணன், அறங்காவலர் குழு தலைவர் வெங்கடேசன், திருப்பணி குழு செயலாளர் டீக்காராமன், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ரகுராமன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் தனசேகரன், கபில்தேவ் ஆகியோர் வெகுவிமரிசையாக செய்திருந்தனர்.

காட்பாடி 1வது மண்டல குழு தலைவி புஷ்பலதா வன்னியராஜா தனது குடும்பத்தினருடன் வந்து ஸ்ரீ பிரசன்ன வெங்கடேச பெருமாளை தரிசித்தார்.

## புனித பாத்திமா லூர்து அன்னை ஆலய 71-வது ஆலய பெருவிழா கொடியேற்றம்



புதுச்சேரி தட்டாஞ்சாவடி புனித பாத்திமா லூர்து அன்னை ஆலய 71-வது ஆலய பெருவிழா கொடியேற்றம் நேற்று நடந்தது.

# சென்னை-நெல்லை வந்தே பாரத் ரெயில் கோவில்பட்டியில் நின்று செல்லும்

**தூத்துக்குடி, அக்.5:**

சென்னை எழும்பூர்-திருநெல்வேலி வந்தே பாரத் ரெயில் தினமும் சென்னை எழும்பூரிலிருந்து காலை 6.05 மணிக்கு புறப்பட்டு, மதியம் 1.50 மணிக்கு நெல்லை சந்திப்பை அடைகிறது. மறுபுறம் நெல்லையிலிருந்து மதியம் 2.50 மணிக்கு புறப்படும் இந்த ரெயில், அன்று இரவு 10.40 மணிக்கு சென்னை எழும்பூர் வந்து சேரும். தற்போது இந்த ரெயில் 20 பெட்டிகளுடன் இயக்கப்படுகிறது.

சென்னை-நெல்லை வந்தே பாரத் ரெயில் கோவில்பட்டியில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள், பயணிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் சோதனை அடிப்படையில் சென்னை எழும்பூர்-நெல்லை வந்தே பாரத் ரெயில் கோவில்பட்டி ரெயில் நிலையத்தில் நின்று செல்லும் என்று மத்திய ரெயில்வே வாரியம் அறிவித்துள்ளது.

# வீட்டில் நிறுத்தியிருந்த காருக்கு டோல் கட்டணம்: வாகன உரிமையாளர் அதிர்ச்சி




**தூத்துக்குடி, அக்.5:**

தூத்துக்குடியில் வீட்டில் நிறுத்தியிருந்த காருக்கு டோல் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக குறுஞ்செய்தி வந்து வாகன உரிமையாளருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக தூத்துக்குடி தமிழ்ச்சாலையைச் சேர்ந்த கைலாசம் என்பவர் கூறுகையில், "எனக்கு இன்று அதிகாலை 4.13க்கு ஒரு எஸ்.எம்.எஸ். வந்தது. அதில் உங்களது வாகனம் (எண் XXXX) வாகைகுளம் டோல் கேட்டில் கடந்ததற்காக ரூ.80.00 எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்று காலையில் வீட்டில் எனது காரை நிறுத்தி இருந்த நிலையில் எப்படி எனது காருக்கு டோல்கட்டணம் வசூலித்தனர் என தெரியவில்லை. இதுகுறித்து டோல் பிளாசாவுக்கு போன் செய்தபோது, அவர்கள் போனை எடுக்கவில்லை. எனவே இது தொடர்பாக மாவட்ட கலெக்டரிடம் மனு அளிக்க உள்ளேன்" என்றார்.

# ஆதவ் அர்ஜுனா மீது நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, அக்.5:**

கரூரில் தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் தேர்தல் பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, தனது சமூக வலைதள பக்கத்தில், 'இலங்கை, நேபாளம் போல புரட்சி வெடிக்கும்' என கருத்து பதிவிட்டிருந்தார். பின்னர் அந்த பதிவு நீக்கப்பட்டது.

தேச பாதுகாப்புக்கும், நல்லிணக்கத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலும், வன்முறையை தூண்டும் வகையிலும் கருத்து பதிவிட்ட ஆதவ் அர்ஜுனா மீது நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு உத்தரவிடக் கோரி, சென்னை அண்ணாநகரை சேர்ந்த எஸ்.எம்.கதிரவன் என்பவர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு, நீதிபதி என்.செந்தில்குமார் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆதவ் அர்ஜுனா மீது ஏற்கெனவே வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால், இந்த மனு செல்லத்தக்கதல்ல என காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஆதவ் ஆர்ஜுனாவின் எக்ஸ் தள பக்க பதிவுகளும் நீதிபதியிடம் காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து நீதிபதி பிறப்பித்த உத்தரவு: 'ஒரு சின்ன வார்த்தையும் பெரிய பிரச்சினையை ஏற்படுத்திவிடும். இவர்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களா ? நடவடிக்கை எடுக்க நீதிமன்ற உத்தரவுக்காக காவல்துறை காத்திருக்கிறதா? புரட்சி ஏற்படுத்துவதுபோல கருத்துகளை பதிவிட்டு ள்ளார். இதன் பின்புலத்தை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொறுப்பற்ற பதிவுகள் மீது காவல் துறை கவனத்துடன் வழக்குப் பதிவு செய்து, அனைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, வழக்கை முடித்து வைத்தார்.

# குலசேகரன்பட்டினம் தசரா திருவிழா: புதிய செயலி மூலம் காணாமல் போன 12 குழந்தைகள் மீட்பு






**தூத்துக்குடி, அக்.5:**

குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்காரம் நேற்றும் (2.10.2025), காப்பு தரித்தல் நிகழ்வு இன்றும் (3.10.2025) நடைபெற்றது.

தசரா திருவிழாவை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் கோவிலுக்கு வந்த நிலையில் அங்கு காணாமல் போன குழந்தைகளை மீட்டு பெற்றோரிடம் ஒப்படைக்க உதவும்பொருட்டு தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் முன்னெடுப்பின்படி PROJECT GUARDIAN எனும் புதிய செயலி காவல்துறை சார்பாக உருவாக்கப்பட்டது.

இந்த செயலியை கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 9 காவல் உதவி மையம் (MAY I HELP YOU) மற்றும் காணாமல் போன குழந்தைகளை மீட்கும் 8 காவல் குழுவினர் ஆகியோரின் செல்போனில் நேரடியாக பயன்படுத்தினர்.

அதன்படி கோயில் அல்லது அதன் சுற்றுவட்டார பகுதிகளில் ஏதேனும் குழந்தை தனித்து நின்றால் அந்த குழந்தையை உடனடியாக காவல்துறையினர் மீட்டு மேற்சொன்ன காவல் உதவி மையத்திலோ அல்லது குழந்தைகள் மீட்பு காவல் குழுவினரிடமோ ஒப்படைத்து விடுவர்.

உடனடியாக அந்த காவல்துறையினர் மீட்கப்பட்ட குழந்தையின் புகைப்படம் மற்றும் சிறு குறிப்புடன் அந்த செயலில் பதிவேற்றம் செய்துவிடுவர். இது உடனடியாக நிகல் நேரத்தில் அந்த செயலியை பயன்படுத்தும் அனைத்து காவல்துறையினருக்கும் தெரியவரும்.

அதன்படி குழந்தையை தவறவிட்ட பெற்றோர் அருகில் உள்ள எந்த காவல் உதவி மையத்தையும் அல்லது காணாமல் போன குழந்தைகளை மீட்கும் காவல் குழுவினரிடமோ புகார் அளித்து அந்த குழந்தை குறித்து தகவல்களை கூறினால் உடனடியாக ஏற்கெனவே காணாமல் போன குழந்தைகள் குறித்த பதிவுகளுடன் ஒப்பிட்டு பார்த்து அந்த குழந்தையை பெற்றோரிடம் ஒப்படைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த செயலியின் மூலம் மொத்தம் 12 காணாமல் போன குழந்தைகள் மீட்கப்பட்டு பாதுகாப்பாக அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் PROJECT GUARDIAN செயலியை காவல்துறையினருடன் இணைந்து உருவாக்க உதவிய கோவில்பட்டி நேஷனல் இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை மெட்ரோவில் செப்டம்பர் மாதத்தில் 1.01 கோடி பேர் பயணம்



**கோவை, அக்.5:**

மெட்ரோவில் கடந்த மாதம் 4-ந்தேதி 3.97 லட்சம் பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சென்னைமெட்ரோரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், சென்னையில் உள்ள மக்களுக்கும், மெட்ரோ ரெயில் பயணிகளுக்கும் போக்குவரத்து வசதியை அளித்து வருவதோடு நம்பக தன்மையான பாதுகாப்பான வசதியை வழங்கி வருகிறது. அந்த வகையில் செப்டம்பர் மாதத்தில் 1,01,46,769 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணித்துள்ளனர்.

நடப்பாண்டு ஜனவரி மாதத்தில் 86,99,344 பயணிகளும், பிப்ரவரி மாதத்தில் 86,65,803 பயணிகளும், மார்ச் மாதத்தில் 92,10,069 பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் 87,59,587 பயணிகளும், மே மாதத்தில் 89,09,724 பயணிகளும், ஜூன் மாதத்தில் 92,19,925 பயணிகளும், ஜூலை மாதத்தில் 1,03,78,835 பயணிகளும், ஆகஸ்ட் மாதத்தில் 99,09,632 பயணிகளும் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். அதிகபட்சமாக கடந்த மாதம் 4-ந்தேதி 3,97,217 பயணிகள் மெட்ரோ ரெயில்களில் பயணம் செய்துள்ளனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருச்செந்தூர் கோவிலில் குவிந்த பக்தர்கள்

**தூத்துக்குடி, அக்.5:**

*திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். குறிப்பாக பண்டிகை காலம், விடுமுறை நாட்கள், சுபமுகூர்த்த தினங்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதும். தற்போது தொடர் விடுமுறையால் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் திருச்செந்தூர் கோவிலுக்கு வருகின்றனர்.*



*இன்று அதிகாலை முதலே கோவிலுக்கு வந்த பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறு தீர்த்தத்தில் புனித நீராடினர். இதனால் கடற்கரையில் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. புனித நீராடிய பிறகு பக்தர்கள் நீண்ட வரிசையில் சுமார் 5 மணி நேரம் காத்து நின்று சாமி தரிசனம் செய்தனர். குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழாவிற்காக வந்திருந்த பக்தர்கள் பலரும், சூரசம்ஹாரம் முடிந்த பிறகு அங்கிருந்து புறப்பட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குவரத்தொடங்கினர்.*

*இதனால் கோவில் வளாகத்தில் ஏராளமான வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன.*

*பக்தர்கள், சுற்றுலா பயணிகள் அதிகளவில் வாகனங்களில் வந்ததால் திருச்செந்தூர் நகர் பகுதி முழுவதும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. குறிப்பாக திருச்செந்தூர்-தூத்துக்குடி சாலையில் சுமார் 4 கிலோமீட்டர் தூரத்துக்கு வாகனங்கள் வரிசையில் நின்று ஊர்ந்தபடியே சென்றதை பார்க்க முடிந்தது.*

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

## நலம் தரும் மருத்துவம்



### மாதுளை ஜூஸ் குடிக்கக் கூடாதவர்கள்



மாதுளை ஜூஸ் (POMEGRANATE JUICE) அதன் அதிகப்படியான ஆக்ஸிஜனேற்றிகள் (ANTIOXIDANTS), வைட்டமின் சி உள்ளடக்கம் காரணமாக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது, கொலஸ்ட்ரால் அளவைக் குறைப்பது, மற்றும் இரத்த அழுத்தத்தை (BP) பராமரிப்பது போன்ற பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குவதில் சிறந்து விளங்குகிறது. இருப்பினும், இந்த சக்திவாய்ந்த பழச்சாறு அனைவருக்கும் உகந்தது அல்ல.

குறைந்த இரத்த அழுத்தம் உள்ளவர்கள், ஒவ்வாமை இருப்பவர்கள், சர்க்கரை நோயாளிகள், சில மருந்துகளை உட்கொள்பவர்கள், மற்றும் இரைப்பை குடல் கோளாறுகள் (GASTROINTESTINAL DISORDERS) கொண்டவர்கள் மாதுளை ஜூஸை உட்கொள்வதில் கவனமாக இருக்க வேண்டும் அல்லது முற்றிலும் தவிர்க்க வேண்டும். ஏனெனில், சில சமயங்களில் இதன் நுகர்வு எதிர்பாராத அல்லது தீங்கு விளைவிக்கும் உடல்நலப் பிரச்னைகளை ஏற்படுத்தலாம்.

மாதுளை ஜூஸ் குடிக்கக் கூடாதவர்கள்:

1. குறைந்த இரத்த அழுத்தம் இருப்பவர்கள்: மாதுளை சாறு இரத்த அழுத்தத்தை குறைக்கும். இது உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் ஒருவருக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருந்தால், அவர்கள் மாதுளை சாறு குடிக்கக் கூடாது. இது தலைசுற்றல் மற்றும் மயக்கம் போன்ற பிரச்னைகளை ஏற்படுத்தும்.

2. ஒவ்வாமை இருப்பவர்கள்: பலருக்கு மாதுளை அல்லது மாதுளை சாறு எடுத்துக்கொள்வது ஒவ்வாமை பிரச்னையை ஏற்படுத்தும். அத்தகைய சூழ்நிலையில் அரிப்பு, வீக்கம், சுவாசிப்பதில் சிரமம் போன்ற ஒவ்வாமையை ஏற்படும். மாதுளை ஜூஸை குடித்த பிறகு இதுபோன்ற அறிகுறிகள் தென்பட்டால், மாதுளை சாற்றை தவிர்க்க வேண்டும்.

3. சர்க்கரை நோய் இருப்பவர்கள்: பொதுவாக, சர்க்கரை நோயாளிகள் மாதுளை ஜூஸில் கிளைசெமிக் இன்டெக்ஸ் குறைவாக இருப்பதாக நினைத்துக் குடிப்பார்கள். ஆனால், அதில் இயற்கை சர்க்கரை உள்ளது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். எனவே, சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மாதுளம் பழச்சாறு அருந்தும்போது சர்க்கரை அளவை பரிசோதிக்க வேண்டும்.

4. மருந்து எடுத்துக் கொள்பவர்கள்: மாதுளை சாறு பல வகையான மருந்துகளுடன் தொடர்பு கொள்கிறது. இந்தத் தொடர்பு இரத்தத்தில் இந்த மருந்துகளின் அளவை அதிகரிக்கலாம். இது எதிர்மறையான எதிர்வினையை ஏற்படுத்தும். உதாரணமாக, நீங்கள் இரத்த அழுத்த மருந்துகளை எடுத்துக்கொண்டால், அவற்றின் விளைவை அதிகரிக்கலாம். ஆகவே, மருந்து உட்கொள்பவர்கள் மாதுளை ஜூசை தவிர்க்கலாம்.

5. இரைப்பை குடல் கோளாறுகள் இருப்பவர்கள்: இவர்கள் மாதுளை சாற்றை அதிகமாக உட்கொண்டால், அது சில சமயங்களில் வயிற்றுப்போக்கு போன்ற செரிமான பிரச்னைகளை ஏற்படுத்தும். எனவே, யாரேனும் எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி இருந்தால், அவர்கள் மாதுளை சாற்றைத் தவிர்க்க வேண்டும். மருத்துவர் ஆலோசனையின் பேரிலேயே இதனை உட்கொள்ள வேண்டும்.

# அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க ரூ.1 கோடி செலவில் முன்னோடித் திட்டம்

**சென்னை, அக்.5:**

தமிழ்நாடு அரசு ரூ.1 கோடி செலவில் அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க முன்னோடித் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இது தொடர்பாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்நாடு அரசு அழிவின் விளிம்பில் உள்ள சிங்கவால் குரங்கு, சென்னை முள்ளெலி, வரிக் கழுதைப்புலி மற்றும் கூம்பு-தலை மஹ்சீர் மீன் ஆகிய உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக 1 கோடி ரூபாய் செலவில் ஒரு முன்னோடித் திட்டத்தை தொடங்குகிறது. மார்ச் 2025-ல் சட்டமன்றத்தில் வனத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்ட இந்த திட்டம், தமிழ்நாட்டின் பல்லுயிர் பாதுகாப்பு உத்தியின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைக் குறிக்கிறது, பெரிய உயிரினமான யானைகள் மற்றும் புலிகள் போன்றே சுற்றுச்சூழல் சமநிலையை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் அழிவின் விளிம்பில் உள்ள உயிரினங்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது. இது தொடர்பாக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை



அரசாணை வெளியிட்டுள்ளது.

மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளைக் கொண்ட தமிழ்நாடு, உலகளவில் பல்லுயிர் பெருக்க மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு முயற்சிகள் வரலாற்று ரீதியாக உயிரினங்களில் கவனம் செலுத்தியுள்ளன, ஆனால் விளிம்பின் நிலையில் அறியப்பட்ட உயிரினங்கள் வாழ்விட இழப்பு, வேட்டையாடுதல், சாலை இறப்பு, சுற்றுச்சூழல் புறக்கணிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அழுத்தங்கள் காரணமாக தொடர்ந்து அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. இந்த இனங்கள் ஒவ்வொன்றும், எப்போதும் பொதுமக்களின் பார்வையில் இல்லாவிட்டாலும், மகரந்தச் சேர்க்கை, விதை பரவல், நோய் கட்டுப்பாடு மற்றும் நீர் அமைப்பு மறுசீரமைப்பு போன்ற செயல்பாடுகள் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாத பங்களிப்பை வழங்குகின்றன. இந்தத் திட்டம் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த நான்கு இனங்களை இலக்காகக் கொண்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் அழிந்து வரும் விலங்கினமான சிங்கவால் குரங்குகள் வரையறுக்கப்பட்ட வனப்பகுதிகளில் வாழ்கிறது. இரவு நேர மற்றும் மறைவு வாழ்க்கை முறை கொண்ட சென்னை முள்ளெலி, தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவின் வறண்ட நிலப்பரப்புகளில் காணப்படுகிறது, இருப்பினும் இது போதுமான அளவு ஆய்வு செய்யப்படாமலும் பாதுகாப்பின்றியும் உள்ளது.

கிட்டத்தட்ட அச்சுறுத்தலுக்கு உள்ளான இனமாகவும் இயற்கை தோட்டியாகவும் இருக்கும் வரிக் கழுதைப்புலி, நோய்களைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது, ஆனால் முதுமலை புலிகள் காப்பக நிலப்பரப்பில் விரைவான சரிவை எதிர்கொள்கிறது. மோயார் ஆற்றில் ஒரு காலத்தில் ஏராளமாக இருந்த கூம்பு-தலை மஹ்சீர் இப்போது அணை கட்டுமானம், அழிவுகரமான மீன்பிடி நடைமுறைகள், மாசுபாடு மற்றும் ஆக்கிரமிப்பு காரணமாக மிகவும் அழியும் நிலையில் உள்ளது.

சிங்கவால் குரங்கு பாதுகாப்புக்காக மொத்தம் ரூ. 48.50 லட்சம், மெட்ராஸ் முள்ளம்பன்றிக்கு ரூ.20.50 லட்சம், வரி கழுதைப்புலிக்கு ரூ.14 லட்சம், மற்றும் கூம்புத் தலை மஹ்சீருக்கு ரூ.17 லட்சம் என மொத்தம் ரூ.1 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி வாழ்விட கண்காணிப்பு, நீண்டகால மக்கள் தொகை ஆய்வுகள், பாதுகாப்பு இனப்பெருக்க மையங்களை அமைத்தல் மற்றும் சிங்கவால் குரங்குகளை பாதுகாக்க சுற்றுச்சூழல் ஆய்வுகள், வன இணைப்பை உறுதி செய்வதற்கான பாலங்கள், பள்ளிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மற்றும் கல்வித் திட்டங்கள், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் அறிவிப்பு பலகைகள் மற்றும் முன்னணி வன ஊழியர்களுக்கான பயிற்சி ஆகியவை அடங்கும். கூம்புத் தலை மஹ்சீருக்கு, ஆற்றங்கரை மீன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அவற்றின் வசிப்பிடத்திலேயே வளர்ப்பு, இனப்பெருக்கம் மற்றும் விடுவிப்பு திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இந்த முயற்சியின் விளைவுகள் தொலைநோக்குடையதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள்தொகை நிலை, அச்சுறுத்தல்கள் மற்றும் வாழ்விடத் தரம் குறித்த அடிப்படைத் தரவு முறையாக உருவாக்கப்படும், இது நீண்டகால உத்திகளுக்கு அறிவியல் அடித்தளத்தை வழங்கும். பாதுகாப்பு நடவடிக்கைகள் மனித-வனவிலங்கு மோதலைக் குறைக்கும், சுற்றுச்சூழல் மீள்தன்மையை மேம்படுத்தும், மேலும் முக்கிய முயற்சிகளில் பெரும்பாலும் அழிந்து வரும் உயிரினங்களைப் பாதுகாக்க மாநிலத்தின் தயார்நிலையை வலுப்படுத்தும். இந்த முயற்சி குன்மிங்-மாண்ட்ரீல் உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பின் 30x30 இலக்குகளுடன் ஒத்துப்போகிறது, இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஒரே இடத்தில் 14 தேர்கள்... கிருஷ்ணகிரியில் நவராத்திரி நிறைவு விழா கோலாகலம்



**கிருஷ்ணகிரி, அக்.5:**

நவராத்திரி திருவிழா கடந்த மாதம் 22-ந் தேதி தொடங்கி விமரிசையாக நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கோவில்களில் நவராத்திரியை முன்னிட்டு கொலு பொம்மைகள் வைத்து தினமும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. நவராத்திரி விழாவின் நிறைவாக கிருஷ்ணகிரி பழையபேட்டை காந்திசிலை அருகில் வன்னி மரம் வெட்டும் நிகழ்ச்சி நடந்தது.

இதையொட்டி நேற்று இரவு பழையப்பேட்டை பகுதியில் உள்ள லட்சுமி நாராயண சுவாமி கோவில், சீனிவாச பெருமாள் கோவில், அங்காளபரமேஸ்வரி அம்மன் கோவில், தஞ்சாவூர் மாரியம்மன் கோவில், கவீஸ்வரர் கோவில், சோமேஸ்வரர் கோவில், காட்டிநாயனப்பள்ளி முருகர் கோவில், புதுப்பேட்டை கிருஷ்ணன் கோவில், பட்டாளம்மன் கோவில், படவட்டம்மாள் கோவில், காமாட்சியம்மன் கோவில், ஞான விநாயகர் கோவில், கல்கத்தா காளி கோவில், மேல்தெரு மாரியம்மன் கோவில் என 14 கோவில்களில் இருந்து உற்சவமூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் தேர்களில் எழுந்தருளி பவனி வந்தனர்.

அனைத்து தேர்களும் காலை 7 மணிக்கு பழைய ப்பேட்டை காந்திசிலை அருகில் ஒரே இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு வன்னி மரம் வெட்டும் நிகழ்ச்சி நடந்தது. வன்னி மரத்தின் இலைகளை வீட்டில் வைத்தால் செல்வம் செழிக்கும் என்பது ஐதீகம். எனவே, வன்னி இலைகளைப் பெற கூட்டம் அலைமோதியது.

தொடர்ந்து உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பூஜைகள் செய்து பக்தர்கள் வழிபட்டனர். இதில், கிருஷ்ணகிரி மாவட்டம் மட்டுமின்றி, சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்தும், ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதையொட்டி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## காலையில் குறைந்து, மாலையில் உயர்ந்த தங்கம் விலை: ஒரு பவுன் ரூ.87,200-க்கு விற்பனை

கடந்த மாதம் 26-ம் தேதி முதல் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வந்தது. அக்.1-ம் தேதி அன்று தங்கம் விலை ஒரு பவுன் ரூ.87,600 என்ற வரலாறு காணாத உச்சத்தை எட்டியது. இந்நிலையில், இன்று காலை 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.110 குறைந்து, ஒரு கிராம் ரூ.10,840-க்கு விற்பனை ஆனது. அதேபோல, பவுனுக்கு ரூ.880 குறைந்து, ஒரு பவுன் தங்கம் ரூ.86,720-க்கு விற்பனை ஆனது. இதேபோல 24 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.960 குறைந்து ஒரு பவுன் ரூ.94,608-க்கு விற்பனை ஆனது.

இதனைத்தொடர்ந்து, சென்னையில் மாலை நிலவரப்படி தங்கம் பவுனுக்கு ரூ.480 அதிகரித்துள்ளது. கிராமுக்கு ரூ.60 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.10,900-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு பவுன் ரூ.87,200-க்கு விற்பனையாகிறது. காலையில் பவுனுக்கு ரூ 880 குறைந்த நிலையில், மாலையில் ரூ.480 அதிகரித்திருப்பது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## ஒரே நாளில் கிளியர் ஆக உள்ள காசோலைகள் - ரிசர்வ் வங்கி நடவடிக்கை

**மும்பை:** இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய வழிகாட்டுதல்களின்படி, அக்.4 முதல் அனைத்து வங்கிகளும் காசோலைகளை ஒரே நாளில் கிளியர் செய்ய வேண்டும். இது, காசோலைகள் மூலம் பணம் செலுத்துவதை விரைவானதாகவும், எளிதானதாகவும் மாற்றும். தற்போது காசோலைகள் கிளியர் ஆக இரண்டு நாட்கள் வரை ஆகிறது.

ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலை அடுத்து, நாளை முதல் காசோலைகள் ஒரே நாளில் கிளியர் ஆகும் என தங்கள் வாடிக்கையாளர்களுக்கு HDFC, ICICI உள்ளிட்ட வங்கிகள் தெரிவித்துள்ளன. காசோலைகள் டெபாசிட் செய்யப்பட்ட ஒருசில மணிநேரங்களில் அவை கிளியர் ஆகும். இந்த புதிய நடைமுறை இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள ரிசர்வ் வங்கி, அக்டோபர் 4 முதல் அடுத்த ஆண்டு ஜனவரி 3 வரை முதல் கட்டமும், ஜனவரி 3-க்குப் பிறகு இரண்டாம் கட்டமும் செயல்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ், காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை காசோலைகளுக்கு பணம் வழங்குவதற்கான உறுதிப்படுத்துதல் பணிகள் நடைபெறும். காசோலையைப் பெற்ற வங்கி, அதனை ஸ்கேன் செய்து கிளியரிங் மையத்துக்கு அனுப்ப வேண்டும். பின்னர், கிளியரிங் மையம் காசோலையின் படத்தை பணம் செலுத்தும் வங்கிக்கு அனுப்பும். பணத்தை வழங்கும் வங்கி காசோலையில் பணத்தை வழங்கலாம் அல்லது கூடாது என்ற உறுதிப்படுத்தலை வழங்க வேண்டும். இதற்கு காலாவதி நேரம் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

# விஜய்க்கு ‘இசட்’ பிரிவு பாதுகாப்பு வழங்க பரிந்துரை

**சென்னை, அக்.5:**

மக்கள் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு உளவுத் துறையின் அறிக்கை அடிப்படையில், எஸ்பிஜி, இசட் பிளஸ், இசட், ஒய் பிளஸ், ஒய், எக்ஸ் என பல்வேறு வகையான பிரிவுகளின்கீழ் மத்திய உள்துறை அமைச்சகம் பாதுகாப்பு வழங்கி வருகிறது.

அதன்படி நடிகரும், தவெக தலைவருமான விஜய்க்கு கடந்த மார்ச் மாதம் முதல் மத்திய அரசின் ‘ஒய்’ பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது. 8 முதல் 11 பேர் வரையிலான துப்பாக்கி ஏந்திய போலீசார் மற்றும் கமாண்டோக்கள் அவரது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சூழலில், கரூர் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற தவெக பிரசார கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர்.

மேலும், விஜய் மீது காலணி வீசப்பட்டதாக காணொளியும் வெளியானது. இதனால், விஜய் பாதுகாப்பில் குறைபாடு இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, விஜய்யின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள ‘ஒய்’ பிரிவு அதிகாரிகளிடம் உள்துறை அமைச்சகம் விளக்கம் கேட்டது. விஜய்க்கு போதுமான பாதுகாப்பு வழங்கப்படுகிறதா? குறிப்பாக கரூர் பிரசார கூட்டத்தின் போது எந்த அளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன? அப்போது விஜய்க்கு முழு பாதுகாப்பு வழங்கப்பட்டதா? என்று பல கேள்விகளை உள்துறை அமைச்சகம் எழுப்பி இருந்தது. இதற்கு ‘ஒய்’ பிரிவு அதிகாரிகள் அளிக்கும் பதில் அடிப்படையில், விஜய்க்கான பாதுகாப்பு போதுமா அல்லது அதிகரிக்கப்பட வேண்டுமா என்று முடிவெடுக்கப்படும் என்று தகவல் வெளியாகி இருந்தது.

இந்நிலையில் விஜய்க்கு இசட் (z) பிரிவு பாதுகாப்பு வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விஜய்க்கு Y+ அல்லது அதற்கு மேலான Z பிரிவு பாதுகாப்பாக அதிகரிக்க சி.ஆர்.பி.எப். தரப்பிலிருந்து பரிந்துரைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கரூர் சம்பவம் தொடர்பாக உள்துறை அமைச்சகம் அறிக்கை கேட்டிருந்த நிலையில், இத்தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

## சேவைக் குறைபாடு: மின் நுகர்வோருக்கு மின்வாரியம் ரூ.62 ஆயிரம் வழங்க உத்தரவு

**தூத்துக்குடி, அக்.5:**

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியைச் சேர்ந்த பிச்சம்மாள், அய்யனேரி கிராமத்தில் உள்ள தனது நிலத்தின் மேல்பகுதியில் செல்லும் உயர் அழுத்த மின்கம்பி வடத்தை மாற்றுவதற்காக, தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளரிடம் விண்ணப்பித்தார். அந்த இடத்தை அலுவலர்கள் பார்வையிட்டு, மின்கம்பி வடத்தை மாற்றுவதற்கான செலவு குறித்து கூறினர். பிச்சம்மாள் பணத்தை செலுத்தியதையடுத்து, மின்கம்பி மாற்றப்பட்டுள்ளது.

ஆனால் தவறான கணக்கீட்டின் அடிப்படையில் அதிக பணம் பெறப்பட்டதாகத் தெரியவந்ததால், பிச்சம்மாள் வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பினார். ஆனால் உரிய பதில் கிடைக்காததால், அவர் தூத்துக்குடி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

ஆணையத் தலைவர் சக்கரவர்த்தி, உறுப்பினர்கள் சங்கர், நமச்சிவாயம் ஆகியோர், மனுதாரர் செலுத்திய மொத்தத் தொகையில் மீதித் தொகையான ரூ.27,152, சேவைக் குறைபாடு, மன உளைச்சலுக்கு நஷ்ட ஈடாக ரூ.25 ஆயிரம், வழக்கு செலவுத் தொகை ரூ.10 ஆயிரம் என மொத்தம் ரூ.62,152-ஐ 6 வாரத்துக்குள் வழங்குமாறும், இல்லையெனில் தொகையை செலுத்தும் தேதிவரை 9 சதவீத வட்டியுடன் வழங்குமாறும் மின்வாரியத்துக்கு உத்தரவிட்டனர்.

# சென்னை கலைவாணர் அரங்கில் “தேசிய கைத்தறி கண்காட்சி 2025” - அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்

**சென்னை, அக்.5:**

கைத்தறி துணி வகைகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு ஏதுவாக கைத்தறி துறையால் “தேசிய கைத்தறி கண்காட்சி 2025” நடக்கிறது.

தமிழ்நாடு முதல்-அமைச்சரின் ஆணைப்படி கைத்தறி துணி வகைகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு ஏதுவாக கைத்தறி துறையால் “தேசிய கைத்தறி கண்காட்சி 2025” சென்னை கலைவாணர் அரங்கில் காலை 10 மணியளவில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது. இக்கண்காட்சி வருகிற 17-ந்தேதி வரை நடைபெறவுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ்நாட்டில் கைத்தறி தொழில், நாட்டின் கலாசாரம், பொருளாதாரம் மற்றும் பாரம்பரியத்தின் ஒரு அங்கமாக உள்ளது. இத்தொழில் குறிப்பாக கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் வாழும் லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வாதாரமாக



உள்ளது. இத்தொழில் பழமையான பாரம்பரியங்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், உலகளவில் அதன் தரம் மற்றும் கைவினைத் திறனுக்காக அங்கீகரிக்கப்பட்ட மிகுந்த அழகான கைத்தறி பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் புதுமையான கொள்கைகள் மூலம் இத்துறையை மேம்படுத்துவதில் தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது.


இதன் ஓர் அங்கமாக கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் துணி ரகங்களின் அழகியல் வடிவமைப்புகள் மற்றும் அதன் வண்ணங்கள் பொதுமக்களை கவரும் வண்ணம் உள்ளதை அனைவரும் பார்வையிடவும் தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு கைத்தறி துணி ரகங்களின் கண்கவரும் கண்காட்சியினை, மத்திய அரசின் நிதியுதவியுடன் கைத்தறி துறையால் “தேசிய கைத்தறி கண்காட்சி2025” சென்னை கலைவாணர் அரங்கில் 03.10.2025 முதல் 17.10.2025 முடிய 15 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இக்கண்காட்சியினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார்.

மேலும், இக்கண்காட்சியில் கைத்தறி நெசவாளர்களின் கைவண்ணங்களால் தனித்துவத்துடன் நெசவுசெய்யப்பட்ட பேஸ்டல் கலெக்ஷன்ஸ் (Pastel collection), பூம்பட்டு (Floral sarees), புதுமணப்பட்டு/மாங்கல்யா கலெக்ஷன்ஸ் (New Wedding sarees collections), பட்டு நூல் டிசைனர் சேலைகள் (Silk Thread Designer sarees), கட்டம் பட்டு (Checked sarees), வெண்ணிலா கலெக்ஷன்ஸ் (Ivory sarees), அனுதினப்பட்டு (Daily wear silk), பருத்தி நூல் யோகா மேட் (cotton yoga mats), தர்ப்பை புல் யோகா மேட் (Tharpai pull yoga mat), தாய்-சேய் பெட்டகம் (Thai sei pettagam) போன்ற புதிய வடிவமைப்பு ரகங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், அறிமுகம் செய்து வைத்தார். இவ்விழாவின் முதல் விற்பனையினை இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே. சேகர் பாபு துவக்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் கைத்தறி துறையின் கீழ் இயங்கி வரும் 300-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், வெளிமாநில தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுடன் மத்திய / மாநில சிறப்பு முகமை நிறுவனங்களும் பங்கு பெற்றுள்ளன.

இக்கண்காட்சியில் உலகப் பிரசித்தி பெற்ற காஞ்சிபுரம் பட்டு, திருபுவனம் பட்டு, ஆரணி பட்டு சேலைகள், சேலம் வெண்பட்டு வேட்டிகள், அருப்புக்கோட்டை, நெகமம், செட்டிநாடு, கோரா காட்டன், செடிபுட்டா, மதுரை சுங்குடி, கூரைநாடு, காஞ்சி காட்டன், பரமக்குடி புதினம் மற்றும் ஆர்கானிக், டைடை சேலைகள், மென்பட்டு சேலைகள், சென்னிமலை பெட்சீட், கரூர் பெட்சீட் மற்றும் ஏற்றுமதி ரகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வெளிமாநிலங்களின் பிரசித்தி பெற்ற பனாராஸ், டசர், பைத்தானி, போச்சம்பள்ளி, மைசூர் பட்டு சேலைகளும், பெங்கால் காட்டன், வெங்கடகிரி காட்டன், ஒடிசா இக்கட், சந்தேரி, தந்துஜா, மிருக்னாயினி சேலைகளும், ஜம்மு காஷ்மீர் சால்வைகளும் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

# தீர்வு.!



காலை நேரம்.. கடை திறக்க வேண்டிய பரபரப்பில் குளித்து தலை துவட்டியபடியே ..காலை சிற்றுண்டிக்கான அழைப்புக்கு காத்திருந்தான் மதி. சுரத்தையே இல்லாமல் சட்னி தாளித்தபடியே முகம் வாடி நிற்கும் மனைவியைப் பார்த்து துனுக்குற்றான். கல்யாண மெருகு குலையாத ரதி..'இந்த வீட்டுக்கு வலதுகால் எடுத்து வைத்த ஒருமாத காலமாக இந்த குடும்பமே இவளை தலையில் வைத்து தாங்குகிறது...அதிகாலை எழும்வரை கலகலப்பாக இருந்தவள் இப்போது சோகமுகம் காட்டும் காரணம் என்னவோ.?' இப்போது எதையும் கேட்டு தனது மனநிலையையும் விரக்திக்கு உள்ளாக்கிக் கொள்ளாமல்..கடமையென சாப்பிட்டு கடைக்குச் சென்றான் மதி. காலை நேர வியாபார பரபரப்பு அடங்கியவுடன்..அலை பேசியில் தொடர்பு கொண்டவனுக்கு சிக்கல் புரிந்தது ..அதற்கான தீர்வுதான் தெளிவாக தெரியவில்லை. அதாவது மதியின் மனைவி ரதி.. கிராமத்தில் பிறந்து வளர்ந்தவள்..வீட்டில் ஆடு..மாடு..தோட்டம்.. தொரவு என ஒட்டமான விவசாயக் குடும்பம்.. மதியின் குடியிருப்போ வாடகைவீடு..சொந்த மனை வாங்கி இருந்தாலும்.... கிணற்றில் விழுந்த பாறாங்கல்லாய் பணத்தை முடக்க அவனது வியாபார மூளை ஒத்துழைக்காததால் வீடு கட்டும் வைபவத்தை சற்றே தள்ளிப்போட்டு இருக்கிறான்...ரதியோ 'கரவைச்சாணி கூட கைகூசாமல் எடுத்துவர முடியல.. சொந்தமாக ஒரு கன்றுக்குட்டி யாவது வாங்கிக்கொடுங்க.. உங்க முதலை காவந்து பண்ணி பால் மாடாக்கி காட்டறேன்'னு மல்லுக்கு நிற்க..வீட்டு உரிமையாளரோ..நாய். பூனைக்கூட என்ன கிளி.. புறா கூட வளர்க்க ஆசைப்பட்டா இப்பவே காலிபண்ணிகிட்டு போகலாம் எனும் கறார் பார்ட்டி...இப்பிரச்சினையை எப்படி தீர்ப்பது என மண்டையை குடைந்து கொண்டவன்..ஒரு வழியாக இரவு பிளாஸ்டிக் குடத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றான். மாடு வளர்க்க யோசனை ஏதாவது சொல்வான் என சாப்பாட்டை எடுத்து வைத்து முகத்தைப் பார்த்தபடியே நின்ற மனைவியிடம்.."ரதி.. இன்னும் ரெண்டு வருசத்துல நம்ம பேங்க் டெபாசிட் ரெட்டிப்பாகி பணம் கைக்கு வந்திடும்.. உடனே சொந்த வீட்டை கட்ட ஆரம்பிச்சுடுவோம்... உனக்கு பிடிச்ச மாதிரி தோட்டம்..மாடு வளர்க்க கொட்டகை எல்லாம் அமைச்சுக்க...இப்போ இந்த குடத்துல வீட்டுல மிஞ்சுற பழையசாதம்.. நீச்சுத்தண்ணீ.. உளுந்துத்தோல்... எல்லாத்தையும் சேர்த்துக்க. நான் நம்ம கடையில இருந்து தவிடு புண்ணாக்கு கொடுத்தனுப்பறேன். தலைச்சுமை கிழவிகிட்ட வழமையாக கீரை வாங்குப்போது.. அகத்திக்கீரை வாங்கிக்க... தினம் ஒருதடவை நீயே கொண்டுபோயி...சாணி எடுக்குற தோட்டவீட்டு தொட்டியில சேர்த்துடு.. உன் கையாலயே கீரைக்கட்டை கொடுத்துட்டு கொஞ்ச நேரம் அங்க இருந்துட்டு வாயேன்.. ஓசிச்சாணி எடுத்து வாசல் தெளிக்கறோமேங்கற குற்ற உணர்வும்..போகும்.. பசுக்களுக்கு பசியாத்துன திருப்தியும் கிடைக்கும்.. கணவனின் அறிவிப்பில் மன அழுத்தத்திற்கான தீர்வு கிடைத்ததில் நிம்மதி அடைந்தாள் ரதி.!

**-அரும்பூர். க.குமாரகுரு**
மயிலாடுதுறை

# இருபது ரூபாய்



வழக்கமான பாதையில் மணி நடந்துவந்தான். யாரென்று தெரியாத ஒருவர் இருகை குவித்து 'வணக்கம்' என்று சொன்னதும் சற்று நிதானித்து நின்றான் மணி. கைக்குட்டையால் நெற்றியை துடைத்துக்கொண்டே அவரைப் பார்த்தான். மணிக்கு அடையாளம் தெரியவில்லை. 'எப்படி இருக்கிங்க ? என விசாரித்தவரை நோக்கி சின்னதாய் சிரித்துவிட்டு நகர முயன்றான்.

'அப்பா எப்படி இருக்காறு '? என விசாரித்ததும், சற்று நின்று பதில் சொல்லலாமா வேண்டாமா என யோசித்தான் மணி. சிறிது நேரம் கழித்து, மெல்லிய குரலில் 'அப்பா இல்ல இறந்துட்டார்'எனக் கனத்த இதயத்தோடு முகம் சுருக்கி சொன்னவுடன் 'அம்மா இருப்பாங்களே' என அனுசரனையுடன் பேச்சைத் தொடர்ந்தான் எதிரில் நின்றவன்.

அவனின் பேச்சு மணியை மையப்படுத்துவது போலவும், மணியைச் சரியாய் தெரிந்து கொண்டு விசாரிப்பது போலவும் இருப்பதாய் உணர்ந்தான். இருந்தும் மணிக்குள் ஒரு எச்சரிக்கையுணர்வு அவனைத் தட்டிக்கொடுத்து 'நீ கொஞ்சம் தள்ளி நில்லு' என்று சொன்னது அவனது உள்மனது . ஒரு அடி பின் நோக்கி நகர்ந்ததும்,

'நான் மேஸ்திரி, உங்கவீட்ல வேலை செய்திருக்கேன்' எனக் கடந்தகால நிகழ்வில் மறக்கமுடியாத நினைவுகளை ஞாபகப்படுத்தி, ஏதோ சொல்ல வருகிறார் என ஆர்வமாய்ச் சொல்வதை கவனித்தான் மணி.

இருந்தும் தனக்கு முன்னால் நின்று பேசுவது யாரென மணிக்கு இந்த நிமிடம் வரை தெரியவில்லை. படப் படவெனப் பேசிக்கொண்டே சென்றார் அந்த மனிதர்.

மடித்துக்கட்டிய லுங்கி, கட்டம்போட்ட சட்டை, மழிக்கப்படாத முகம். சோர்வுடையந்த கண்கள். ஏதோ மணியிடமிடம் எதிர்பார்க்கிறான் என்பதை அவன் பேச்சு வெளிப்படுத்தியது.

"சார், ஒரே பையன். சென்னை பிரைவேட் ஆஸ்ப்பிட்டலில் ஒரு வருடம் வைத்திருந்தேன். மோசமான வைரஸ் ரத்தத்துல கலந்திடுது -முடியாதுன்னு சொல்லிட்டாங்க. பக்கத்துல இருக்கிற ஆஸ்பிட்டலுக்கு மாத்திட்டாங்க. பசி, கையில காசு இல்ல. கடுமையான வைரசுல இருக்கிறவங்க நல்லா சாப்பிடனுமாம். இதோ... பக்கத்துல இருக்கிற கடையில இடியாப்பம் இருக்கு. ஒரு செட்டு இருபது ரூபாய். காசு இல்ல. வாங்கிக் கொடுத்தா நல்லா இருக்கும். எல்லாத்தையும் இழந்துட்டேன். ஒரே புள்ள" என பேசி முடித்து, மணியைப் பார்த்தான்.

எப்போது பேசி முடிப்பான் என மணி இருக்க,

மணி யோசித்தது போலக் கடைசியாக 'தம்பி இருபது ரூபாய் இருந்தா கொடுப்பா' என அவன் கேட்டவுடன்,

அவனின் கடந்த காலச் சோக நிகழ்வுகளையும், நிகழ்காலச் சோதனையின் மிச்சங்களையும் கேட்டு இறக்கப்பட்டவனாய், மணி தன் முகத்தை இயல்புக்கு மாறாய் மாற்றிக்கொண்டான்.

மணி யூகித்தது சரியாக இறுக்க, அவனின் பித்தலாட்டத்துக்கு எப்படிப் பதில் சொல்வது என யோசித்தவன், சட்டைப் பாக்கட்டிலிருந்து ஏதோ ஒன்றை தேடுவது போலப் பாவனைச் செய்தான்.

ஆவலோடு மணியின் சட்டைப்பையை அவன் பார்க்க, மணி மெல்ல பேச ஆரம்பித்தான். ' உணக்கு இறுபது ரூபா, எனக்கு இறுபதணாயிரம் ரூபா தேவப்படுது. நீ சுலபமா என்ன பாத்துக் கேட்டுட்ட. நான் யோசிச்சுகிட்டு இருக்கன். யாருகிட்ட கேட்கலாமுன்னு' மணியின் பதிலைக் கேட்ட அடுத்த நொடி அவன் முகம் அப்படியே மாறியது.

இருந்தும் அவன் விடவில்லை 'அஞ்ஜோ, பத்தோ இருக்கிறத கொடுங்க சார் ' எனப் பாவமாய்க் கை நீட்டி கெஞ்சிய கேட்டபோது, அவன் கை உதர ஆரம்பித்தது.

இவனுக்கு இறக்கப்பட்டு உதவி செய்ய இவன் ஒன்னும் சரியானவன் இல்லை என்பதை உணர்ந்துகொண்ட மணி, அவ்விடத்தை விட்டு மெல்ல நகர ஆரம்பித்தான்.

'இவன்கிட்ட இருந்து எதையுமே கரக்க முடியலயே' எனச் சோகம் கலந்த முகத்தோடு, நீட்டிய கையோடு மணியின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான் நலம் விசாரித்தவன்.



**- கயப்பக்கம் இரா.இரமேஷ்**

# கள்ளப்பா


## 10-ஆம் நாள்



■கயப்பக்கம் இரா.இரமேஷ்

## கலைந்த கோலங்கள்..

காலம் ஓடியது ரவியின் கைக்கு ஒரு கடிதம் கிடைத்தது படித்து முடித்து வெற்றியடைந்த பிறகு, வெட்டியாக இருப்பதைவிட, கிடைத்த வேலையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு மூட்டைக் கட்டிக்கொண்டு சென்னைப் பக்கம் சென்றான். அவளையும் மனதிற்குள் சுமந்துகொண்டு. அங்கு இருக்கின்ற சூழலுக்குத் தகுந்தாற்போல் எல்லாவற்றையும் அனுசரித்து வாழப் பழகிக்கொண்டான். வேலை செய்யும் இடத்தில் தங்க இடமும், சாப்பாடும் கிடைக்க, எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு. நாட்கள் போனதே தெரியவில்லை. தொடர்ச்சியான வேலையில் கடிதப் போக்குவரத்து மட்டுமே அவனுக்கும் வீட்டிற்கும் இருந்தது. சம்பாதிக்கும் பணத்தை மணியார்டர் செய்துவிடுவான். நல்ல நாட்களில் இங்கு வருவதற்கு விருப்பம் இல்லாமல் போனது. ஏன் இந்த மனமாற்றம்? தெரியவில்லை. ஆனால் அவனுக்குள் நம்பிக்கை இருந்தது. அவள் காத்துக்கொண்டிருப்பாள் என்று. ஒரு நாள். அவனுக்குள் இருந்த ஏக்கம், தவிப்பு, அவளைப் பற்றிய சிந்தனை, அவள் முகம் பார்க்க வேண்டும் என்ற ஆசை, அதிகமானதால், திடீரெனப் புறப்பட்டான். இங்கிருந்து வேலை பார்த்த ஆறு வருடங்களாக அவனுக்கும் அவன் கிராமத்திற்கும் இருந்த இணைப்புத் துண்டிக்கப்பட்டிருந்தது. ஆறு வருடத்தில் என்னென்ன மாற்றங்கள் நடந்தன என்பதெல்லாம் ரவிக்குத் தெரியாது. எதிர்பார்ப்போடு வீடு வந்து சேர்ந்தான். அன்று இரவு தூக்கம் இல்லை. ஏனென்றால் மறுநாள் அந்த ஒற்றையடிப்பாதை, மலையடிவாரம், ஏரிக்கரை வயல்வெளி இவற்றையெல்லாம் பார்த்து ரசிக்க வேண்டும் என்றும். அதோடு அவளையும் பார்க்க வேண்டும் என்றும் மனசு துடித்தது. கொஞ்சம் முன்னதாகவே வீட்டிலிருந்து ஒற்றையடிப் பாதையில் ஏரிக் கரையை நோக்கி நடந்தான். எல்லாமே மாறி இருந்தது, பசுமையான மலை வசந்தகாலத்திற்குப் பிறகு இலை உதிர்ந்து மொட்டையாய்க் காட்சியளித்தது. அறுவடைக்குத் தயாரான நிலையில் நிலங்கள். ஒரு சில இடங்களில் மூன்றாம் போகம் பயிர் வேலை மும்முரமாக நடைபெற்றது. ஆள் நடமாட்டம் இல்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக மனித நடமாட்டம். பார்த்து ரசித்துக்



கொண்டே வந்தான். மலை அடிவாரத்தில், எல்லம்மாளின் வீட்டில் ஆரவாரமும், சத்தமும் எதுவுமில்லை. மாடுகள் இல்லை. ஆடு மாடுகளின் சாணத்தின் நாற்றமும் இல்லை. பொருட்கள் சிதறிக் கேட்பாரற்றுக் கிடந்தது. கள்ளப்பா இல்லை. கள்ளப்பாவின் கட்டில் இல்லை. கள்ளப்பா இருக்கிறாரா என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அவர் பயிர் செய்த கழனிகாடெல்லாம் கரம்பாகக் கிடந்தது. முத்தம்மாள் மட்டும் இடுப்பில் கூடையைச் சுமந்து கொண்டு ரவிக்கு முன்னால் நடந்து வந்தாள்.

'என்னம்மா எப்படி இருக்கீங்க' என்று ரவி கேட்க.

'ஏதோ இருக்கேன் பா" என்று சலிப்பாகச் சொல்லிவிட்டு, கடக்க முயன்றாள். 'கள்ளப்பா எப்படி இருக்காரு" என்று கேட்டவுடன், சட்டென நின்று ரவி பக்கம் திரும்பியவள், 'அவர் இறந்து ஆறு மாசம் ஆகுதுப்பா' என்று சோகமாகச் சொன்னாள்.

அவளுக்குள் இருந்த பாரங்களையெல்லாம் வார்த்தைகளாகக் கொட்டினாள். 'இந்த ஆறு வருடத்துல எவ்வளவோ நடந்திருச்சு. எல்லம்மா வாழ்க்கப்பட்டுப் போன இடத்துல நிலைச்சு வாழல. கள்ளப்பா அதே கவலையில கண் மூடுனது, இப்படிச் சொல்லிக்கிட்டே போகலாம்' என்று பேசிக்கொண்டே போனாள். 'எல்லம்மாவும் பாவம், என்ன மாதிரியே அவளுக்கும் நிம்மதி இல்லை. வாக்கப்பட்டவன் குடிகாரன். மனசுலப் பாரம் அதிகமா இருக்கு.நீ எப்படிப்பா இருக்க?' என்று ரவியைக் கேட்டுவிட்டு, 'சரிப்பா, சீக்கிரமாக வீடு போய்ச் சேரு' என்று சொல்லிக் கூடையை இடுப்பில் சுமந்துகொண்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

நிலைகுலைந்து போனான். அவனால் நடக்க முடியவில்லை. மனதுக்குள் பாரம் அதிகரித்தது. 'நம்பிக்கை வீணானது. வேதனையை, வருத்தத்தை யாரிடம் சொல்வது? ஏன் இப்படி நடந்தது? தன்னை அவனே கேள்வி கேட்டுக்கொண்டான். அவள் இல்லாத வாழ்க்கை. அவள் முகம் பார்க்காத வாழ்க்கை. அவளோடு பேசாத வாழ்க்கை. நான் வாழும் வாழ்க்கையும் இலக்கு இல்லாதது'என்று அவனுக்குள்ளேயே பேச ஆரம்பித்தான்.

நாட்கள் நகர்ந்தன. அவனது ஏக்கம், அவனது தவிப்பு, அவனது ஆசை, அவனது பாசம், அவனுடைய எதிர்பார்ப்பு எல்லாமே என்றாவது ஒருநாள் நடக்கும் என்று நம்பிக்கையில் இந்த ஒற்றையடிப்பாதையில் தினமும் நடந்தான்.

- தொடரும்

# மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள்?




தினசரி காலண்டரில் மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள் என்று போட்டு இருக்கிறதே, அது என்னவென்று தெரியுமா ?

தினசரி நாட்காட்டியில் உள்ள ஒருசில விஷயங்கள் நமக்கு எளிதில் புரிவதில்லை. அதில் மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் என்பவை. நாம் அதை பொதுவாக, "மேல்நோக்கு" என்றால் நல்ல நாள் என்றும், "சமநோக்கு" என்றால் சுமாரான நாள் எனவும், "கீழ்நோக்கு" என்றால் கெடுதலான நாளாகவும் எண்ணுகிறோம்.

மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் இவை மூன்றும் அன்றைய தின நட்சத்திரத்தின் அடிப்படையில் அமைகின்றன.

நட்சத்திரங்கள் மொத்தம் 27.

இவற்றை நம் முன்னோர்கள் ராசி மண்டல அடிப்படையில் மூன்றாகப் பிரித்தனர்.

"ஊர்த்துவமுக" நட்சத்திரம். "அதோமுக" நட்சத்திரம். "த்ரியமுக" நட்சத்திரம்.

1. ரோகிணி,
2. திருவாதிரை,
3. பூசம்,
4. உத்திரம்,
5. உத்திராடம்,
6. திருவோணம்,
7. அவிட்டம்,
8. சதயம்,
9. உத்திரட்டாதி

ஆகிய ஒன்பதும் "ஊர்த்துவமுக" நட்சத்திரங்கள். இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்கள் "மேல்நோக்கு நாட்கள்" எனப்படும். மேல்நோக்கி வளர்கின்ற பயிர் களுக்கான விதை விதைத்தல், மரங்களை நடுதல், மேல் நோக்கி எழும் கட்டிடங்கள் (வீடு), உயரமான மதில் சுவர் கட்டுதல் போன்றவற்றை ஆரம்பிக்க உகந்த நாட்கள் ஆகும்.


இரண்டாவதாக,

1. பரணி,
2. கிருத்திகை,
3. ஆயில்யம்,
4. மகம்,
5. பூரம்,
6. விசாகம்,
7. மூலம்,
8. பூராடம்,
9. பூரட்டாதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் "அதோமுக" நட்சத்திரங்கள் எனப்படும் .அதாவது, இவை "கீழ்நோக்கு நாள்" எனப்படுகிறது.

இந்த நாட்களில்... கிணறு வெட்டுதல், புதையல் தேடுதல், சுரங்கப் பணிகள், பூமிக்கடியில் வளரும் கிழங்கு வகைச் செடிகளைப் பயிரிடுதல் முதலான பணிகளைச் செய்வது நல்லது.

மூன்றாவதாக




1. அஸ்வினி,
2. மிருகசீரிஷம்,
3. புனர்பூசம்,
4. ஹஸ்தம்,
5. சித்திரை,
6. சுவாதி,
7. அனுஷம்,
8. கேட்டை,
9. ரேவதி

ஆகிய ஒன்பது நட்சத்திரங்களும் "த்ரியமுக" நட்சத்திரங்கள் ஆகும். இந்த நட்சத்திரங்கள் கொண்ட நாட்கள் "சமநோக்கு" நாட்கள் எனப்படும் இந்த நாட்களில் வாகனங்கள், கார், பைக் வாங்குதல், செல்லப்பிராணிகள், ஆடு, மாடு, காளை வாங்குதல், சாலை அமைத்தல், வாசற்கால் வைத்தல், வயல்(ஏறு) உழுதல் ஆகிய பணிகளைச் செய்வது உத்தமம்.

நமது முன்னோர் பல விஷயங்களை மிக நுணுக்கமாக அலசி ஆராய்ந்து அனுபவப் பூர்வமாக விளக்கி வைத்துள்ளனர். ஆனால் நாம் அதை சரியாக பயன் படுத்தாமல், அலட்சியமாக விட்டு விட்டோம்.

இதுபோன்ற நல்ல சிறு தகவல்களை நமது சந்ததியினர் களுக்கு எடுத்து உரைத்தால் அவர்களின் தொழிலுக்கும், வாழ்க்கைக்கும் உறுதுணையாக இருக்கும்.

தினம் ஒரு தலைவர்கள்

# சரோஜினி நாயுடு வரலாறு

சரோஜினி நாயுடு அல்லது சரோஜினி சட்டோபத்யாயா (பிப்ரவரி 13,1879, ஐதராபாத் - மார்ச் 2,1949, லக்னோ) இவர் பாரத்திய கோகிலா (இந்தியாவின் நைட்டிங்கேல்) என்றும் அழைக்கப்படுகிறார். இவர் ஒரு பிரபலமான சிறுமுது அறிஞர், கவிஞர், எழுத்தாளர் , சுதந்திரப் போராளி மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது பெண் தலைவரும்[ உத்தரப்பிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுனரும் ஆவார். அவரது பிறந்த நாள் இந்தியாவில் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இளமைக் காலம்

சரோஜினி சட்டோபாத்தியாயா, பின்னாளில் சரோஜினி நாயுடு, இந்தியாவின் ஹைதாராபாத் மாநிலத்தில் ஒரு வங்காள குலின் பிராமணக் குடும்பத்தில் மூத்த மகளாக 13 பிப்ரவரி 1879 அன்று பிறந்தார். இவர் இவரது குடும்பத்தின் 8 குழந்தைகளில் மூத்தவராவார். இவரது தந்தை விஞ்ஞானியும் தத்துவவியலாளரும் கல்வியாளராகவும் விளங்கிய அகோரநாத் சட்டோபத்யாயா. இவரது தாய் வரதா சுந்தரி ஒரு பெண் கவிஞர் ஆவார். இவரது தந்தை நிசாம் கல்லூரியின் நிறுவனர் ஆவார். மேலும் இவரது நண்பர் முல்லா அப்துல் காமுடன் இந்திய தேசிய காங்கிரசின் முதல் உறுப்பினராக விளங்கினார். அவர் பின்னர் அரசியலில் ஈடுபட்டதற்காக அவரது தலைமை ஆசிரியர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார்.

### கல்வி

12 ஆவது வயதில் சரோஜினி நாயுடு அவரது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தேர்ச்சி பெற்றார். அவர் மாநில அளவில் முதலிடம் பெற்றார். 1891 முதல் 1894 வரை அவர் தன்னுடைய படிப்பில் சிறு இடைவெளி விட்டு, பல்வேறு தலைப்பிலான புத்தகங்களைப் படித்தார். 1895 ஆம் ஆண்டு, பதினாறு வயதில் முதன் முதலாக நிஜாம் அறக்கட்டளையின் உதவித்தொகை லண்டனிலுள்ள கிங்ஸ் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் கிர்டன் கல்லூரியில் மூலம் படிப்பதற்காக சென்றார். உருது, தெலுங்கு, ஆங்கிலம், பாரசீகம், பெங்காலி ஆகிய மொழிகளைப் பேச சரோஜினி நாயுடு கற்றுக்கொண்டார். அவருக்கு பிடித்தமான கவிஞர் பெர்சி பைஷ் ஷெல்லி ஆவார்.

### திருமணம்

இங்கிலாந்தில் தங்கியிருந்த போது தனது 17 வயதில் முத்யாலா கோவிந்தராஜுலு நாயுடு என்ற ஒரு பிராமணர் அல்லாத தொழில்ரீதியான ஒரு மருத்துவரை சந்தித்து, அவரைக் காதலித்து தனது 19வது வயதில் திருமணம் செய்து கொண்டார். 1898 ஆம் ஆண்டு சட்டப்படி சென்னையில் அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். சாதியிடை திருமணங்கள் அனுமதிக்கப்படாத காலகட்டத்தில் அவரை திருமணம் செய்து கொண்டார். அதற்கு முற்போக்கு சிந்தனையுள்ள அவரது தந்தையின் ஒப்புதலும் கிடைத்தது. அவரது திருமண வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக இருந்தது.

இவர்களது திருமணம் சென்னையில் டாக்டர் நஞ்சுண்டராவ்வின் 'சசி விலாஸ்' இல்லத்தில் நடைபெற்றது.அவர் சாதீயக் கட்டுப்பாடுகளின் தீவிர எதிர்ப்பு அலைகளைத் தாண்டி இத்திருமணத்தை நடத்தி வைத்தார்.

ஜெயசூர்யா, பத்மஜா, ரந்தீர், லீலாமணி என அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர். பின்னர் அவரது மகள் பத்மஜா மேற்கு வங்காளத்தின் ஆளுனர் ஆனார்.

### அரசியல் வாழ்க்கை

மகாத்மா காந்தியுடன் சரோஜினி நாயுடு

இந்திய சுதந்திர போராட்டம் 1905 ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார். 1903-17 காலகட்டத்தில் சரோஜினி அவர்கள் கோபால கிருஷ்ண கோகலே, ரபீந்திரநாத் தாகூர்,



முகம்மது அலி ஜின்னா, அன்னி பெசண்ட், சி.பி.ராமஸ்வாமி ஐய்யர், மோகன்தாஸ் காந்தி, ஜவஹர்லால் நேரு ஆகியோரின் அறிமுகத்தைப் பெற்றார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து தண்டி யாத்திரையில் ஈடுபட்டார். காந்தி, அப்பாஸ் தியாப்ஜி மற்றும் கஸ்தூரி பாய் காந்தி ஆகியோர் கைதுக்குப் பின் தர்சண சத்தியாகிரகத்தில் துடிப்புடன் பங்கேற்றார்.



1915 முதல் 1918 ஆண்டுகளுக்கிடையில் அவர் இந்தியா முழுவதும் இளைய சமுதாயத்தினரின் நல்வாழ்வு, பணியாளர் நலன், பெண் கொடுமை மற்றும் தேசியப் பற்று குறித்து பல்வேறு சொற்பொழிவுகளை மேற்கொண்டார். ஜவகர்லால் நேருவை 1916 ஆம் ஆண்டு சந்தித்ததற்குப் பின் அவர் சம்பரன் இன்டிகோ பணியாளர்கள் பிரச்சினையைக் கையில் எடுத்தார். 1925 ஆம் ஆண்டில் அவர் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்கு தேந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவரே ஆவார்.

1919 ஆம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் ரௌலெட் சட்டத்தினைப் பிறப்பித்தது. இதன் வழியாக விழிப்புணர்வு ஆவணங்களை வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப்பட்டது; மோகன் தாஸ் காந்தி அவர்கள் எதிர்த்துப் போராட ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார், இதில் முதலில் இணைந்தவர் சரோஜினி நாயுடு ஆவார்.

ஜூலை 1919 ஆம் ஆண்டு சரோஜினி அவர்கள் இங்கிலாந்திற்கான ஹோம் ரூல் லீக்கின் தூதர் ஆனார். ஜூலை 1920 இல் அவர் இந்தியாவிற்கு திரும்பினார். ஆகஸ்ட் 1 அன்று மகாத்மா காந்தி அவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தைத் துவக்கினார். 1924 ஆம் ஆண்டு, கிழக்கு ஆப்பிரிக்க இந்திய காங்கிரசில் பங்கேற்ற இரண்டு இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்களுள் ஒருவராக சரோஜினி அவர்கள் திகழ்ந்தார்.

அக்டோபர் 1928 ஆம் ஆண்டு நாயுடு நியூ யார்க்கிற்கு சென்றார். அங்கு நிலவிய ஆப்ரிக்க அமெரிக்க மற்றும் அமெரிக்க இந்திய இனப் பாகுபாடுகளைக் கண்டு கவலையுற்றார். அங்கிருந்து திரும்பிய பின்னர் காங்கிரஸ் காரிய கமிட்டியின் உறுப்பினரானார்.

ஜனவரி 26, 1930 இல் தேசிய காங்கிரஸ் பிரித்தானிய ஆட்சியிடமிருந்து சுதந்திரம் கோரியது. மே 5, அன்று மோகன் தாஸ் காந்தி கைது செய்யப்பட்டார். அதன் பின் சில நாட்களிலேயே நாயுடு அவர்களும் கைது செய்யப்பட்டு பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டார். காந்தி அவர்களுடன் ஜனவரி 31, 1931 இல் அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த ஆண்டின் பிற்பகுதியில் அவர்கள் மீண்டும் கைது செய்யப்பட்டனர். மோசமான உடல் நிலை காரணமாக நாயுடு உடனடியாகவும் காந்தி 1933 ஆம் ஆண்டும் விடுதலை செய்யப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு அவர் காந்திஜி மற்றும் பண்டிட் மாலவியாஜி ஆகியோருடன் இணைந்து வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார். அக்டோபர் 2, 1942 ஆம் ஆண்டு அவர் வெள்ளையனே வெளியேறு போராட்டம் காரணமாக கைது செய்யப்பட்டார். அவர் காந்திஜியுடன் 21 மாதங்கள் சிறையில் இருந்தார். மோகன் தாஸ் காந்தி அவர்களுடன் நாயுடு அவர்கள் ஒரு பாசமான உறவினைக் கொண்டிருந்தார். காந்தி அவரை செல்லமாக "மிக்கி மவுஸ்" என்று அழைப்பார்.

1947 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஆசிய உறவுகள் மாநாட்டில் நாயுடு பங்கேற்றார்.

### இந்தியாவின் முதல் பெண் ஆளுனர்

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு அவர் யுனைட்டட் ப்ரொவின்சஸ் (தற்போது உத்தரப்பிரதேசம் என்று அழைக்கப்படுகிறது) ன் ஆளுநராக பதவியேற்றார். இதன் வழியாக இந்தியாவின் முதல் பெண் ஆளுநரானார். மார்ச் 2, 1949 அன்று மாரடைப்பால் அவர் மரணமடைந்தார்.

கவிதைத் துறை

அவரது முக்கிய பங்களிப்பும் ஆர்வமும் கவிதை துறையில் இருந்தது. சரோஜினி நாயுடு கவிதைத் துறைக்காக பல பாராட்டுகளைப் பெற்றுள்ளார். இவரது கவிதைகளில் அழகான வார்த்தைகள் இருக்கும், மேலும் அது பாடக் கூடிய வகையிலும் இருக்கும். 1905 ஆம் ஆண்டு அவரது முதல் பாடல்கள் தொகுப்பு தி கோல்டன் த்ரெஷோல்டு என்னும் பெயரில் வெளியிடப்பட்டது . மேலும் இரண்டு பகுதிகள் வெளியிடப்பட்டது: தி பேர்ட் ஆ்ப் டைம் (1912) மற்றும் தி புரோக்கன் விங் (1917). 1918 ஆம் ஆண்டு, பீஸ்ட் ஆப் யூத் வெளியிடப்பட்டது. பின்னர் அவரது தி விஸார்டு மாஸ்க் மற்றும் எ டிரஷரி ஆ்ப் போயம்ஸ் ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன. 1961 ஆம் ஆண்டு அவரது மகள் பத்மஜா தனது தாயின் வெளியிடப்படாத கவிதைகளை தி ்பெதர் ஆ்ப் டான் என்னும் தலைப்பில் வெளியிட்டார்.

# ராஷ்மிகா- விஜய் தேவரகொண்டாவுக்கு திருமண நிச்சயதார்த்தம்?



தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகர், நடிகையாக வலம் வருபவர்கள் விஜய் தேவரகொண்டா மற்றும் ராஷ்மிகா மந்தனா. இவர்கள் இருவரும் இணைந்து நடித்திருந்த 'கீதா கோவிந்தம்', 'டியர் காம்ரேட்' ஆகிய படங்கள் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இருவரின் காம்போவும், இவர்கள் நடித்த காதல் காட்சிகளும் ரசிகர்களை பெரிதும் கவர்ந்தது.

இதனிடையே, இவர்கள் இருவரும் ஒன்றாக வெளியே சென்ற புகைப்படங்களும், இருவரும் திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் சமூக வலைத்தளங்களில் தகவல் வெளியானது. இதற்கு இருதரப்பில் இருந்து பதில் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. தொடர்ந்து, இவர்களின் திருமணம் தொடர்பான செய்திகள் வெளியாகியது. மேலும், இவர்கள் இருவரும் மீண்டும் இணைந்து நடிக்கப்போவதாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில், ஐதராபாத்தில் உள்ள விஜய் தேவரகொண்டாவின் இல்லத்தில் விஜய் தேவரகொண்டா- ராஷ்மிகா ஆகிய இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்து முடிந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. நேற்று நடைபெற்ற திருமண நிச்சயதார்த்ததில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டதாக கூறப்படுகிறது. அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் திருமணத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், இவர்களின் புகைப்படம் ஒன்றும் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

நடிகை தமன்னா கவர்ச்சி உடையில் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட ஸ்டில்கள். அழகிய புகைப்படங்கள் இதோ.



# மீண்டும் வருகிறார்கள் Peaky Blinders.. புதிய சீசன்கள் அறிவிப்பு



உலகெங்கிலும் கேங்ஸ்டர் கதைக்கு என்று என்றுமே தனி மவுசு உள்ளது. அந்த வகையில் இங்கிலாந்தின் புகழ் பெற்ற கேங்ஸ்டர் கதை பீக்கி 'பீக்கி பிளைண்டர்ஸ்' (Peaky Blinders). இணைய தொடராக வெளிவந்து வரவேற்பை பெற்ற இதன் 6வது சீசன் 2022 இல் வெளியானது.

இந்த க்ரைம் டிராமா தொடர், 1880கள் முதல் 1920கள் வரை பர்மிங்காம் நகரில் இயங்கிய 'பீக்கி பிளைண்டர்ஸ்' என்ற நிஜமான குற்ற கும்பலை அடிப்படையாகக் கொண்டது. தொடர் முழுவதும் சிலியன் மர்ஃபி (Cillian Murphy) டாமி ஷெல்பி கதாபாத்திரமாக வாழ்ந்திருப்பார்.

இந்நிலையில் 'பீக்கி பிளைண்டர்ஸ்' மேலும் இரண்டு புதிய சீசன்களுடன் நெட்ஃபிக்ஸ் தளத்தில் மீண்டும் வரவுள்ளது. இந்த அறிவிப்பை அத்தொடரின் அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

வரவிருக்கும் ஒவ்வொரு புதிய சீசனிலும் ஆறு எபிசோடுகள் இடம்பெறும். ஒவ்வொரு எபிசோடும் சுமார் 60 நிமிடங்கள் ஓடும்.

உலகளவில் நெட்ஃபிக்ஸ் தளத்திலும், இங்கிலாந்தில் மட்டும் பிபிசி தொலைக்காட்சியிலும் இந்தத் தொடர் வெளியாகும்.

புதிய சீசன்கள் 1953 ஆம் ஆண்டு பிரிட்டன் பின்னணியில் அமைக்கப்பட்டுள்ளது.

'பீக்கி பிளைண்டர்ஸ்' ஃபிரான்சைஸின் ஒரு பகுதியாக, 'தி இம்மோர்டல் மேன்' (The Immortal Man) என்ற புதிய திரைப்படமும் 2026 ஆம் ஆண்டு வெளியாகவுள்ளது. இதிலும் கில்லியன் மர்ஃபி, ரெபேக்கா பெர்குசன், டிம் ரோத், சோஃபி ரண்டில் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர்.



நடிகை மாளவிகா மோகனன் ரெட் ஹாட் உடையில் போஸ் கொடுத்திருக்கும் ஸ்டில்கள். Bvlgari eventல் அவர் எப்படி கவர்ச்சியாக வந்திருக்கிறார் என பாருங்க.

# பெண் குழந்தைகளை குறி வைக்கும் சைபர் க்ரைம்



குற்றம் தெருக் குற்றங்களை விடப் பெரிதாகி வருகிறது சைபர் குற்றங்கள்.

பாலிவுட் ஸ்டார் அக்ஷய் குமார் சைபர் குற்றங்கள் குறித்து பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

சில மாதங்களுக்கு முன்பு என் வீட்டில் நடந்த ஒரு சிறிய சம்பவத்தை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

என் மகள் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருந்தாள். சில வீடியோ கேம்களை நீங்கள் எதிர் திசையில் யாருடனும் விளையாடலாம். நீங்கள் தெரியாத ஒருவருடன் விளையாடுகிறீர்கள்.

நீங்கள் விளையாடும்போது, சில சமயங்களில் அங்கிருந்து ஒரு செய்தி வரும்... அப்படி என் மகளுக்கும் ஒரு குறுஞ்செய்தி வந்தது.


"நீங்கள் ஆணா பெண்ணா?" என்று கேட்கப்பட்டது. அதற்கு என் மகள் பெண் என்று பதிலளித்தாள். பின்னர் மீண்டும் ஒரு குறுஞ்செய்தி வந்தது.

அதில், உங்களுடைய நிர்வாணப் படங்களை எனக்கு அனுப்ப முடியுமா? என்று இருந்தது. இதனால் பயந்துபோன என் மகள், எல்லாவற்றையும் அணைத்துவிட்டு என் மனைவியிடம் சென்று நடந்தவை குறித்து கூறினார்.

இப்படித்தான் விஷயங்கள் தொடங்குகின்றன. இதுவும் சைபர் குற்றத்தின் ஒரு பகுதி... நமது மகாராஷ்டிரா மாநிலத்தில், ஒவ்வொரு வாரமும் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் மற்றும் பத்தாம் வகுப்புகளில், சைபர் வகுப்பு (Cyber Period) என்று ஒரு வகுப்பு இருக்க வேண்டும். அங்கு குழந்தைகளுக்கு இது குறித்து விளக்க வேண்டும் என்று நான் முதலமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குற்றம் தெருக் குற்றங்களை விடப் பெரிதாகி வருகிறது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். இந்தக் குற்றத்தைத் தடுப்பது மிகவும் முக்கியம்.

# ஜாவா சுந்தரேசன் எனப் பெயரை மாற்றிக்கொண்ட நகைச்சுவை நடிகர் சாம்ஸ்!






சிம்புதேவன் இயக்கத்தில் கடந்த 2008 ஆம் ஆண்டு திரைப்படம் அறை எண் 305-ல் கடவுள். நடிகர்கள் பிரகாஷ் ராஜ், எம். எஸ்.பாஸ்கர், சந்தானம், சாம்ஸ் உள்ளிட்டோர் நடித்த இப்படம் நல்ல வரவேற்பை பெற்றது.

இதில் நகைச்சுவை நடிகர் சாம்ஸ் ஏற்று நடித்த ஜாவா சுந்தரேசன் கதாபாத்திரம் பிற்காலத்தில் சமூக வலைத்தளங்களில் மீம் டெம்ப்லேட்டாக மாறியது.

படத்தின் தொடக்கத்தில் சிறு போர்ஷனில் வந்திருந்தாலும் ஜாவா படித்து குறுகிய காலத்தில் மிகப்பெரிய மென்பொருள் வல்லுநராக மாறியிருப்பார். 'கலக்குப்பா கலக்கு' என்று சந்தானம் கூறும் டயலாக்கும் பேமஸானது. இதனால் நடிகர் சாம்ஸ் ரசிகர்கள் மனதில் ஜாவா சுந்தரேசன் என்றே பதிந்து விட்டார்.

இந்த நிலையில், இயக்குநர் சிம்புதேவனைச் சந்தித்த நடிகர் சாம்ஸ் தன் பெயரை ஜாவா சுந்தரேசன் என மாற்றிக்கொள்ள ஒப்புதல் கேட்ட விடியோ வெளியாகியுள்ளது.

அவரும் அதற்கு ஒப்புதல் கொடுத்து வாழ்த்தியுள்ளார். 20 ஆண்டுகளுக்கும் மேலாக சினிமாவில் நடித்து வரும் சாம்ஸ் அவர் திரைவாழ்வில் முக்கியமான கதாபாத்திரமாக அமைந்த ஜாவா சுந்தரேசன் என்ற பெயரையே தனக்கு சூட்டிக் கொண்டது கவனம் பெற்றுள்ளது. செல்லும் இடமெல்லாம் தன்னை ஜாவா சுந்தரேசன் என்றே அழைப்பதால் அவர் இந்த முடிவுக்கு வந்ததாக கூறப்படுகிறது.



தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட போன்ற மொழி படங்களில் நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை ஐஸ்வர்யா மேனன். இவர் தமிழ் படம் 2, நான் சிரித்தால் உள்ளிட்ட படங்களில் ஹீரோயினாக நடித்து மக்கள் மத்தியில் தனக்கென ஒரு இடத்தை பிடித்து கொண்டார். அடிக்கடி போட்டோஷூட் நடத்தி அதை தனது இன்ஸ்டா பக்கத்தில் வெளியிடும் நடிகை ஐஸ்வர்யா தற்போது சேலையில் மிகவும் அழகாக இருக்கும் லேட்டஸ்ட் போட்டோஸ்.

# களரி கற்கிறார் இஷா தல்வார்



பிரபல இந்தி நடிகையான இஷா தல்வார், தமிழில் பத்ரி இயக்கிய 'தில்லு முல்லு', மித்ரன் ஜவஹர் இயக்கிய 'மீண்டும் ஒரு காதல் கதை', ஆர்ஜே.பாலாஜி நடித்த 'ரன் பேபி ரன்' படங்களில் நடித்துள்ளார். தெலுங்கு, மலையாளப் படங்களிலும் நடித்து வருகிறார். இவர் நடிக்க இருக்கும் புதிய படத்துக்காக, தொன்மையான தற்காப்புக் கலையான களரியைக் கேரளாவில் கற்று வருகிறார். களரியைக் கற்றுக்கொடுப்பவர்கள் மற்றும் இக்கலையை கற்கும் மாணவர்களுடன், தான் இருக்கும் புகைப்படங்களை, தனது சமூக வலைதளப்பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில், களரி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

## வெற்றிமாறன்-சிம்பு ப்ரோமோ வெளியீட்டு தேதியில் மாற்றம்



வெற்றிமாறன் இயக்கத்தில் சிம்பு நடிக்கவுள்ள படத்தின் ப்ரோமோ இன்று (அக்டோபர் 4) வெளியாவதாக இருந்தது. இதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக தயாரிப்பாளர் தாணு, "சிம்புவின் ரசிகர்களின் அன்பு வேண்டுகோளுக்கு இணங்க சிம்பு மற்றும் வெற்றிமாறன் படத்தின் முன்னோட்டம் திரையரங்கிலும் சமூக வலைதளங்களிலும் ஒரே நேரத்தில் வெளியிடுவது ரசிகர்களின் இத்தனை நாள் பொறுமைக்கு ஈடுசெய்யும் நிகழ்வாக அமையும். ஆகையால் சென்சார் பணிகள் நிறைவுற்று, விரைவில் உங்கள் கண்முன்னே அந்த மாபெரும் முன்னோட்டம் வெளிவர உள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு சிம்பு ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏன் இந்த மாற்றம் என்றால், இன்னும் இதன் பின்னணி இசைக் கோர்ப்பு பணிகளைத் தொடங்கவில்லை. இப்படத்தின் இசையமைப்பாளராக அனிருத் ஒப்பந்தமாகி உள்ளார். அவருடைய பணிகளை முடித்து தணிக்கை செய்யப்பட்டு, அக்டோபர் 16-ம் தேதி இதன் ப்ரோமோவை வெளியிட படக்குழு முடிவு செய்திருக்கிறது. அன்றைய தினம் அனிருத்தின் பிறந்த நாளாகும். அந்த ப்ரோமோ வீடியோ மூலம் இதற்கு அனிருத் தான் இசையமைப்பாளர் என்று அறிவிக்கவும் படக்குழு முடிவு செய்திருக்கிறது.

வெற்றிமாறன் சிம்பு அனிருத் மூவரும் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கி இருக்கிறார்கள். இதற்கு பெரும் எதிர்பார்ப்பு உருவாகி இருக்கிறது. இப்படத்தின் கதை முழுக்க வடசென்னை பின்னணியாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரே கட்டமாக இதன் படப்பிடிப்பை முடிக்க திட்டமிட்டு இருக்கிறார்கள். இதில் சிம்புவுடன் நடிக்கவுள்ளவர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

## தம்பி ராமையா மகன் இயக்கத்தில் நட்டி



'ராஜா கிளி' என்ற படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் தம்பி ராமையாவின் மகன் உமாபதி ராமையா. தற்போது அவருடைய இயக்கத்தில் உருவாகும் 2-வது படத்தின் பணிகள் படப்பூஜையுடன் தொடங்கப்பட்டுள்ளது. இதனை கண்ணன் ரவி குரூப்ஸ் மற்றும் காந்தாரா ஸ்டுடியோஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கவுள்ளன. முழுக்க அரசியல் கலந்த நகைச்சுவை, பொழுதுபோக்காக இப்படம் உருவாகிறது.

இதில் நட்டி நாயகனாக நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அவருடன் ஷ்ரிதா ராவ், சாந்தினி தமிழரசன், விஜி சந்திரசேகர், வடிவுக்கரசி, இளவரசு, எம்.எஸ். பாஸ்கர், கிங்ஸ்லி, ஜான் விஜய், ஆடுகளம் நரேன் உள்ளிட்ட பலர் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இதன் ஒளிப்பதிவாளராக பி.ஜி.முத்தையா, இசையமைப்பாளராக தர்புகா சிவா ஆகியோர் பணிபுரியவுள்ளனர்.

இப்படம் குறித்து இயக்குநர் உமாபதி ராமையா, "திரைத்துறையின் மேல் அளவில்லாத ஆர்வமுள்ள கண்ணன் ரவி சார் உடன் இணைந்து பணியாற்றுவது எனக்கு ஒரு பெரும் பாக்கியம். நிஜத்தை அடிப்படையாகக் கொண்டு நகைச்சுவையுடன் உருவாகும் பொழுதுபோக்கு படமாக இது அமையும். நட்டி சார் ஹீரோவாக இணைந்திருப்பது மகிழ்ச்சி. சில நிமிடங்கள் கதையைச் சொன்னவுடனேயே அவர் சம்மதித்தது எனக்கு பெரும் திருப்தியையும், இந்தக் கதையை அப்படியே திரையில் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பையும் அளித்தது. இன்று படப்பிடிப்பைத் துவக்கி விட்டோம், விரைவில் ஒரே கட்டமாக முடிக்க திட்டமிட்டுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.



டிடி திவ்யதர்ஷினிக்கு அதிகம் ரசிகர்கள் இருக்கிறார்கள். அவர் தற்போது படவிழாக்கள், நிகழ்ச்சிகள் போன்றவற்றை தொகுத்து வழங்கி வருகிறார். டிடி தற்போது சிவப்பு நிற கிளாமர் உடையில் போஸ் கொடுத்து ஸ்டில்களை வெளியிட்டு இருக்கிறார்.

## நேரடியாக ஓடிடியில் வெளியாகும் அருள்நிதி படம்




முத்தையா இயக்கத்தில் அருள்நிதி புதிய படமொன்றில் நடித்து வந்தார். இந்தப் படம் முழுக்க சென்னையிலேயே படமாக்கி முடிக்கப்பட்டது. தற்போது இப்படத்துக்கு 'ராம்போ' எனப் பெயரிடப்பட்டு இருப்பதாகவும், இப்படம் நேரடியாக சன் நெக்ஸ்ட் ஓடிடி தளத்தில் வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு பலருக்கும் ஆச்சரியத்தை அளித்திருக்கிறது.


குறைந்த முதலீட்டில் ஒரே கட்டமாக இப்படம் படமாக்கப்பட்டது. சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிப்பில் உருவான இப்படத்தினை நேரடியாக ஓடிடி வெளியீடாக முடிவு செய்திருக்கிறார்கள். அக்டோபர் 10-ம் தேதி இப்படம் வெளியாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. முழுக்க குத்துச்சண்டையை மையமாக வைத்து இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

தான்யா ரவிச்சந்திரன், விடிவி கணேஷ், அபிராமி உள்ளிட்ட பலர் இப்படத்தில் அருள்நிதியுடன் நடித்திருக்கிறார்கள். ஒளிப்பதிவாளராக ஆர்.டி.ராஜசேகர், இசையமைப்பாளராக ஜிப்ரான் ஆகியோர் பணிபுரிந்து வருகிறார்கள். இதன் இறுதிகட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

## 3 காலகட்டங்களில் நடக்கும் காதல் கதை 'அமரம்'

மூன்று காலகட்டங்களில், 3 நிலப்பகுதிகளில் நடக்கும் காதல் கதையை மையமாகக் கொண்டு 'அமரம்' என்ற படம் உருவாகியுள்ளது. இதை திருஅருள்கிருஷ்ணன் இயக்கியுள்ளார். திவ்ய சேத்ரா பிலிம்ஸ் சார்பில் நிர்மலா ராஜன் வழங்க, சி.ஆர்.ராஜன் தயாரித்துள்ளார்.

இதில் ராஜன் தேஜேஸ்வர், ஐராஅகர்வால் நாயகன், நாயகியாக நடித்துள்ளனர். ஜார்ஜ், சாய் தீனா,நாகிநீடு, கல்கி ராஜன், ஹரிஷ் பெரேடி, வாசுதேவன் முரளி உள்படபலர் நடித்துள்ளனர். மிக்கி ஜெ.மேயர் இசையமைத்துள்ளார். பரத்குமார், கோபிநாத் ஒளிப்பதிவு செய்துள்ளனர். இந்தப் படம் பற்றி திரு அருள் கிருஷ்ணன் கூறும்போது, "இதுவரை திரையில் பார்த்திராத அதிரடி காட்சிகளுடன் ஆக் ஷன் விருந்தாக இந்தப்படம் இருக்கும். மிராக்கிள் மைக்கேல் புதுவிதமான பாணியில் சண்டைக் காட்சிகளை வடிவமைத்துள்ளார். இதுவரை சொல்லப்படாத, கிழக்கு காடு மக்களின் வாழ்க்கையை சொல்லும் இந்தப்படம், பார்வையாளர்களுக்கு புது அனுபவமாக இருக்கும்" என்றார்.






## இது தான் நிஜம் !

வீட்டில் சிறு மாறாமத்து
பணிக்காக பணியாளரை தேடி
முக்குக்கு சென்றேன்....

நூற்றில் 50 பேர் வட இந்திய
தொழிலாளர்கள் கையில்
கரண்டியுடன் இருந்தனர்....

அவர்களை அழைக்க
மனமில்லாமல் நம் உள்ளூர்
ஆளிடமே கேட்டேன்....
"மராமத்து வேலை கேஸா
... அதெல்லாம் ஆவாது
சார்...ஒரு நாள் கூலிக்குனா
வாரேன்...கூட ஒரு சித்தாளும்
வேணும்...நம்ம ஒருத்தரால
மண்ணு சுமக்கிறது சிமெண்ட்
அடிக்கிற வேலை பண்ண
முடியாது... சின்ன வேலை
எல்லாம் நமக்கு சரிப்பட்டும்
வராது ஒரு நாள் கூலி
ஆயிரம் குடுக்குறியா
சொல்லு..சாரு வாரேன்... !"

மீறி போனால் இரண்டு மூன்று
மணி நேரம் வேலைக்கு
ஒரு நாள் கூலி கேட்பது
அநியாயமாக தெரிய...

வடக்கத்திய
இளைஞனை
அழைத்தேன்...

"என்னாவேலை ஜி...!"



சொன்னேன்...

"நானே பாத்துக்குறேன்
சார். நீங்க ஏதோ போட்டு
கொடுங்க... !"

என் டூவீலரில் அழைத்து
வந்து... பணியை செய்ய
வைத்தேன் சரியாக மூன்று
மணி நேரத்தில் மராமத்து
பணிகள் முடிவடைந்தன....
அனைத்து வேலைகளும்
அவனாகவே இழுத்து போட்டு
செய்தான்...

ஐநூறு ரூபாய் கொடுத்ததில்
ஆனந்தம் கொண்டான்...

அவனை மீண்டும் முக்கில்
கொண்டு போய் டூவீலரில்
விட்டேன்...
என்னிடம் ஒரு நாள் கூலி
பேரம் பேசிய நம்மூர்
காரர் இன்னும் மூளையில்
அமர்ந்திருந்தார்...
அவரைப் போல் உள்ளூர்
ஆட்கள் பலரும்
அமர்ந்திருந்தனர்...
வடக்கத்திய
இளைஞர்களின்
ஆக்கிரமிப்பின் காரணம்
எனக்கு இப்போது
புரிந்தது...!

**எம்.பி.தினேஷ்**
கோவை

---

1. நூறு மரங்கள் வெட்டிய
ஒருவனுக்கு நூறாவது மரம்
நிழல் கொடுத்தது

2. பாத்திரங்களை கழுவி
ஊத்தினால் வேலைக்காரி
புருஷனை கழுவி ஊத்தினால்
அவள் பெயர் மனைவி

3. 30 வருடம் உன்னை
வளர்த்தவள் ராணி என்றால்
30 வருடம் வளர்த்தவர்களை
விட்டு விட்டு உன்னிடம்
வந்தவளும் ராணி
தானே. நேசிக்கத்
தெரிந்தால் புரியும்

4. அம்மாவின் பாசம்
அகலமானது கண்களுக்குத்
தெரியும் அப்பாவின் பாசம்
ஆழமானது கண்களுக்கு
தெரியாது

5. கவலைகளை
சிறைப்பிடித்து சில மணி
நேரங்கள் காணாமல் போகச்
செய்யும் மந்திரவாதிகள்
குழந்தைகள்

6. கோவில் ஒரு
விசித்திரமான இடம்
வெளியே ஏழையும்
உள்ளே பணக்காரனும்
பிச்சை எடுக்கிறார்கள்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

அப்பாவி தான்
அடப்பாவியானாலும்
பரவாயில்லை
கல்நெஞ்சுக்காரியே
ஒரே முறை கண்களிலாவது
காதலித்து விட்டு போ!

வெள்ளை காலம்
கருப்பு அத்தியாயங்கள்
சிவப்பு வாழ்க்கை
நிவாரண நிதியாய்
நிர்வாணம்!?

எல்லா காதலும்
ஜெயிக்க வேண்டிய
அவசியமில்லை –ஆனால்
கடைசி வரை நினைப்பதற்கு
ஒரு காதல் இருந்தால் தான்
வாழ்வு முழுமை
அடைந்ததற்கு சமம்!

**லி.நௌஷாத் கான்**

---

## இசை அருவி

" கருத்து குவிந்தது மேகம்
இருள் சூழ குளிர்ந்த காற்று
தொட்டு வருடியது
மேனியை .. "

" சில்லென சினுங்கியது
வானம் மெல்லிய
தூரலின் தோரணம்
பூக்களின் நறுமணம்
போல் மண்வாசனை ..."

வாத்தியங்கள் இசைத்தது
போல் இடியின் ஓசை ..."

கொட்டியது மழை
இசைக் கச்சேரி ஓயாமல்
இசைத்தது போல ..."

மின் விளக்கு அலங்காரம்
அகல் விளக்கு ஜொலிப்பு
போல மின்னியது
வானம் மின்னல்
அலையால்..."

குளிர்ந்தது பூமி மலர்ந்தது
மனம் இனித்தது இதயம்
பெருகியது ஆற்றில் நீர் ..."

பசுமை விரிந்தது
செடிகள் மரங்கள்
கொடிகள் துளிர்த்தது ..."

ஆனந்தம் எங்கும்
மகிழ்ச்சி மழை
என்றால்
கரையும்
குழந்தைகள்
மனம் ..."



**ஆர். சீதாராமன்**
சீர்காழி

---

கண்ணுக்கு அழகு மயில்
காதுக்கு அழகு யானை
மூக்குக்கு அழகு கிளி
செவ்விதலுக்கு அழகு
இளம் பெண் கைக்கு அழகு
தான தர்மங்களை அள்ளிக்
கொடுப்போர்
முடிக்கு அழகு கரடி
கால்களுக்கு அழகு துள்ளி
ஓடும் புள்ளிமான்
பற்களுக்கு
அழகு நிறம்
மாறும்
பச்சோந்தி
மனிதனுக்கு
அழகு
புல்லறிவாண்மை..



**உ.மு.ந.ராசன் கலாமணி**
கோபிசெட்டிபாளையம்

---

## தேன்நிலவு

இனிய இரவின்
கருஞ்சாரலில்
விண்மீன் பூக்கள் மலர
தூரம் தாண்டி வந்து
தேன்கலசம் ஏந்திய நிலவே...

வானில் மிதக்கும்
வெண்பந்தாய்
காதல் சிந்தும் ஒளியால்
மரங்களின் இலைகளிலும்
என் மனத்திலும்
இனிமை பரப்பும் நீ...

காற்றின் இனிய இசையில்
உன் ஒளித்துளிகள் சேர்ந்து,
இயற்கையோடு காதல் பாட,
இதயம் இசையால் மலர்ந்தது.

பொங்கும் குளிர் அலைமீது
உன் வட்ட வெண்முகத்தில்
பரிவுப் புன்னகை
பிரதிபலிக்க, என்னில்
நிலையான உருவமானாய்

தேன்நிலவே!
உன் மென்மைத்
தொட்டிலில்... உன் அன்பின்
அரவணைப்பில்...
இயற்கையும், என் காதலும்
இனிமையாக உறங்க...

தேன்
நனைந்த
ஒளிப்பொழிவில்
தேமதுர
தாலாட்டாய்
தழுவும்
தேன்நிலவு



**நா.பத்மாவதி,** கொரட்டூர்

---

## வனவிலங்குகளைப் பாதுகாப்போம்!

வனவிலங்கைப்பாதுகாப்போம்
வளமாக நடத்திடுவோம்!
கனிவாகச்செயல்படுத்திக்
காட்டினையும்காத்திடுவோம்!
மனமெல்லாம் விலங்குகளை
மாண்பாக எண்ணிடுவோம்!
புனிதமாக நினைத்தேதான்
பொலிவாகக்காத்திடுவோம்!

விலங்குகளின் நன்மைகளை
விரிவாக எண்ணிடுவோம்!
புலாலுக்குப்பயன்படுத்தும்
பொதுப்பண்பை
அழித்திடுவோம்!
விலைமதிப்பே இல்லாத
விலங்குநன்மை
நினைத்திடுவோம்!
நலமொன்றே
விலங்குகட்கு
நாளும்தான்
செய்திடுவோம்!



**முனைவர் இராம. வேதநாயகம்.**

---

## திகைப்பில்லா வெற்றி

தடைகள் வந்தாலும்
தளரவில்லை மனம்,
திகைப்பில்லா வெற்றி
கிடைத்ததில் மகிழ்ச்சியே ..
முயற்சி இருந்தால் மலரும்
வெற்றி, மனதில் நம்பிக்கை
என்றும் மண்வாசனை
வீசுவது உறுதி
சோர்வின்றி முயன்றால்
சிகரம் அருகில்,
சிந்தனை நேர்மறையாக
இருந்தால் ஒவ்வொரு
நொடியும் வெற்றிதான்.
அயராத உழைப்பு வழி
காட்டும் நட்சத்திரம்,
அஞ்சாத இதயம் எழுதும்
வெற்றி வரலாறு.
திகைப்பில்லா வெற்றி தான்
நிஜ ஜெயம்,
தன்னம்பிக்கை
யிலே
மலர்கிறது
வெற்றியின்
சிரிப்பு



**உஷா முத்துராமன்**

---

## காலம் உனக்கானது

" உன்னுள் தேடு
அகப்பட்டதை வெளியில்
கொண்டு வா..."

வெளியில் தெரியாதது
உன் அறிவு அதை
புதையாமல் மீட்டு வா ..."

காலம் உனக்கானது
கை விரித்து நிற்காதே
கவலையில் சுழலாதே ..."

கனவில் மிதக்காதே
அழுது புலம்பி கரையாதே ..."

உன் திறமையை
வெளிக்காட்டு சிறப்பும்
வெறுப்பும் காலம் பதில்
சொல்லட்டும் ..."

உண்மையாய் இரு
இது உன் தேசம்
தாய் வீடு தாய்மண்
என்பதை மறக்காதே ..."

நீயே ஒரு சுதர்சன சக்கரம்
தான் சகலமும் பெறும் சக்தி
உன்னிடம் உண்டு
மறவாதே ..."

சொல்லி அடி
கில்லி நீ தான்
புள்ளி வைத்து
கோலம்போடு
காலம்
உனக்கானது ..."



**ஆர். சீதாராமன்,** சீர்காழி

---

சிவப்பு கம்பளம் விரித்து
வரவேற்பதில்லை...
வாழ்க்கை..

வளர்ச்சி பரிசளித்து
மகிழ்வதில்லை... காலம்..

படிக்கற்கள் அமைத்து
ஏற்றிவிடுவதில்லை..
சமூகம்..

பரிவட்டம் கட்டி முதல்
மரியாதை... செய்வதில்லை...
உறவுகள்..

தடுமாறி விழுந்தால் தூக்கி
விடுவதில்லை...மண்..

எப்போதும்
ஒளிதருவதில்லை...
ஆகாயம்..

முதல் பார்வையில் ..
பூச்செண்டு நீட்டுவதில்லை...
காதல்...

அனைத்தும் எதிர் முகமாக
இருந்தாலும்..

நம்பிக்கையே ஊன்றுகோல்.
உழைப்பே... நாற்றங்கால்...
புறம்
தள்ளிவிட்ட
இடத்தில்...
பூரணமாய்
எழு...



**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

---

## உன்னால் பழகினேனடி !

எனக்கு தமிழ் வார்த்தைகள்
சரியாக தெரியாது.... உன்
பெயரைச் சொல்லி தமிழ்
பழகினேன்....

எனக்கு கவிதை எழுதத்
தெரியாது.... உன் பெயரை
எழுதி கவிதை எழுத
பழகினேன்....

எனக்கு அன்பு என்றால்
என்னவென்று தெரியாது....
நீ என் மீது கொண்டதும்
அன்பு கொண்ட காதல்
என்று பழகினேன்...


எனக்கு மகிழ்ச்சியென்றால்
என்னவென்று தெரியாது...
உன்னை சந்திக்கும்
ஒவ்வொரு நிமிடமும்
மகிழ்ச்சி என்று
பழகினேன்.... !

எனக்கு அழுகை
என்னவென்று தெரியாது....
நீ என்னை
பிரிந்த போது
அதுவும்
பழகி
விட்டேனடி!



**எம்.பி.தினேஷ்**
கோவை

---



## இதயம்

என் இ த ய ம்
எனக்காகத் துடிக்கும் போது
லப் டப் என்று துடிக்கிறது!
உனக்காகத்துடிக்கும் போது
லவ் டப் என்று துடிக்கிறது!

## கும்மி

உன் கண்களின்
தேடுதல் வேட்டையில்
சிக்குவேன் என்று
சிறிதும் எதிர்பார்க்கவில்லை
நான்! என்ன அதிசயம் பார்!
கும்மியடித்து மகிழ்கிறது
என் கா த ல்!

## இதயம்

நீ வந்து அமரும் வரையில்
என் இ த ய ம் நான்
வாழ்வதற்காக மட்டுமே
படைக்கப்பட்டிருப்பதாக
நினைத்துக்கொண்டிருந்தேன்!
இப்பொழுது தான் தெரிந்தது!
அது கா த லு க் கா க வு ம்
படைக்கப்பட்டிருப்பது!

## திட்டம்

நீ வந்து என் எதிரே நின்ற
வினாடியில் பார்வையால்
என்னை விழுங்குகிறாய் நீ!
உன்னைப்பெண் கர்ணனாக
மாற்றத் திட்டம் தீட்டுகிறது
என் காதல்!

## கவிதை

சேலைத் தலைப்பை
இழுத்து இடுப்பில்
சொருகுகிறாய்!
உன் அழகை
ரசித்தபடியே
ஒரு குட்டிக் கவிதை
பிரசுரமாகிறது என்
கண்களில்!

## நலம்

அள்ளி அணைத்து
நலம் விசாரிக்கிறாய்!
என்னை வாடாமல்
வைத்திருப்பது உன்
அன்பு ஒன்றுதான் என்று
தெரிந்து வைத்திருக்கும் நீ!

## கும்மாளம்

அப்படி என்னடி சொல்லி
வைத்திருக்கிறாய் என்
மனசிடம்?!
உன்னைப்பார்க்கும்
போதெல்லாம் மட்டும்
இப்படிக் கும்மியடிக்கிறது
கும்மாளம் போடுகிறது!

## யார்?

உன்னை நான்
வைத்திருப்பதாக எவர் எவரோ
சொல்கிறார்கள்!
யாருக்கும் தெரியாமல்
உன்னை நான் என்
இ த ய த் தி ல் அமர
வைத்ததை எப்பொழுது
எப்படி யார்
கண்டுபிடித்திருப்பார்கள்?!


## காதல்

நாம் சந்திக்க
வரும்போதெல்லாம் உன்
கண்களில் கா த ல்
வழிகிறது!
ஆனால் ஊர் உலகம்
எனக்குக்கா த ல்
தா ச ன் என்ற
முத்திரையைக்
குத்தியிருக்கிறது!



**முத்து ஆனந்த்** வேலூர்

---



சில கடந்த கால காதலை
பின்னோக்கி சென்று
திரும்பி பார்க்கும் போது
அழகிய நினைவுகளாக
ஞாபகங்களில் இருக்கலாம்
சில காதல் வடு
நினைக்க நினைக்க
இரணம் –வலி இருந்து
கொண்டே இருக்கும்
இதயத்துடிப்பு நிற்கும் வரை
இப்பிரபஞ்சத்தில்
முள்ளாய் குத்தி கொண்டே
இருக்கும் காதலிப்பது
சொர்க்கம் தான் ...
காதலிக்கப்படாமல்
இருப்பது நரகம் !!
வாழ்க்கை எது தந்தால்
என்ன ? உன்னை
காதலிப்பதை ஒரு போதும்
நிறுத்தப்போவதில்லை !!

இறைவியே நீ
ஆக்ஸிஜனாய் மாறி
விடு அனுதினமும்
சுவாசித்து கொண்டே
இருக்கிறேன்
காதலோடு!

இரக்கமற்ற
இப்பிரபஞ்சத்தில்
உன்னை தவிர வேறெங்கும்
இல்லை? காதல்!

கடவுள் எங்கிருக்கிறார்
என்பது எனக்கு தெரியாது?
காதல் உன் கண்களில்
இருக்கிறது!

உறங்கும் வேளையில்
சிணுங்கும் ஜிமிக்கியின்
ஓசையில் தோற்றுப்
போகிறது?
ஒரு ஜிப்ரானின் இசை!


கரங்களில்
மருதாணியிட்டேன்
சிவந்தது உன் வெட்கங்கள்!

அப்பாவி தான்
அடப்பாவியானாலும்
பரவாயில்லை
கல்நெஞ்சுக்காரியே
ஒரே முறை
கண்களிலாவது
காதலித்து விட்டு போ!



**லி.நௌஷாத் கான்**

---




# நூல் விமர்சனம்

நூல். : இலக்கிய இணையர் படைப்புலகம்
நூல் மதிப்புரை
காவல் உதவி ஆணையர் முனைவர் கவிஞர் ஆ மணிவண்ணன்
நூலாசிரியர். : ஹைக்கூ திலகம் கவிஞர இரா.இரவி
வெளியீடு : வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை–600 017.
தொலைபேசி : 044 24342810, 24310769 மின்னஞ்சல் : vanathipathippakam@gmail.com
பக்கம் : 230 விலை : ரூ. 175

சமீபத்தில் நம்மை விட்டுப் பிரிந்த தமிழ்த் தேனீ பேரா. இரா.மோகன் அவர்களும் அவர்களது இணையர் பேரா.நிர்மலா மோகன் அவர்களும் தமிழுக்கு ஆற்றியத் தொண்டினை இத் தமிழ்கூறு நல்லுலகம் நன்கறியும்.

தமிழாகவே வாழ்ந்த அய்யா அவர்களுக்கு அருந்துணையாக இருந்து இல்லத்திலும் இனியத் தமிழ்ச்சேவையிலும் உடனிருந்து உயர்த்திய அம்மா அவர்களும் பல நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கு அணி சேர்த்தவர்கள்.

பூக்கடைக்கு விளம்பரம் தேவையில்லை.இருப்பினும் அந்த இணையருக்கு இலக்கியத்தில் அணுக்கத் தொண்டராக இருந்து பெருமை சேர்ப்பவர் இந்த நூலாசிரியர் .

அவ்வப்போது தான் அவர்களது நூல்களை முதல் ரசிகனாய்,முதல் மாணவனாய் இருந்து ருசித்திட்ட அனுபவத்தை அச்சில் பதிவிட்டு வாழ்த்துவதை வழக்கமாக கொண்டிருப்பார்.

மேலும் நூலாசிரியரிடம் பாராட்டத்தக்கது குணங்களில் நான் முதன்மையாகக் கருதுவது தான் ரசித்த அனைத்து இலக்கிய மற்றும் பொது நூல்களுக்கு மதிப்புரை வழங்குவது ஆகும்.

அந்த வரிசையில் இலக்கிய ஆணையர் அவர்களின் அவர்கள் எழுதிய 50 நூல்களுக்குத் தான் எழுதிய மதிப்புரைகளை புகழ்பெற்ற வானதி பதிப்பகம் மூலம் புதிய நூலாக வெளியிட்டு தன் நன்றியைச் சமர்பித்துள்ளார்.

தான் ரசித்து மனமகிழ்ந்த அனைத்து வகை இலக்கியத் தேனை ஒருங்கிணைத்து வழங்கியுள்ளது பாராட்டிற்குரியது.

வாங்கிப் படித்தால் 50 நூல்களை ஒரே நேரத்தில் படித்த திருப்தி ஏற்படுகின்றது. நன்றி.வாழ்த்துக்கள்.






அன்று. பிள்ளைகளைச்
சேர்த்தபின்பு பள்ளிகளை
தொடங்கினோம்.
இன்று. பிள்ளைகளைப்
பெற்றவுடன்
பள்ளிகளைத்



தேடினோம். நாளை.
பள்ளியிலே இடம்
பிடித்தே பிள்ளைபெறப்
போகிறோம்.

**எஸ் .சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சி.



## ஆரோக்கியம்

சித்திரத்திற்கு எழில் ஊட்டும்
தேக சுவற்றை விரிசல்
விழாமல் திடமாக்கிட
பரிசுத்தம் பேணுவோம்!

புகையில்லா
பசுமை வெளியில்
காலை வேளையில்
பவனி வருகையில்
அமிழ்த காற்றை
நுரையீரல் நுகர்ந்து
ஆயுள் வளரட்டும்!

இரவின் ரம்மியம்
தாலாட்டுப்பாட
தலைசாய்த்து
நித்திரையில்
ஆழ்ந்து கண்
விழிக்கையில்
சோர்வுகள்
தெறித்தோடி



புத்துணர்வு குடிகொள்ளும்!

அறுசுவை உணவுகள்
சரிவிகிதமாய் அமையாமல்
துரித உணவகங்களில்
நாவின் சுவைகள்
மலர்வதனால் நலம்
வாடுகின்றது!

அசுத்தங்களால் உடலை
ஆக்கிரமித்து உறுப்புகளில்
ஊடுருவும் கிருமிகள்
மரணத்திற்கு
ஒத்திகைப்பார்க்கின்றன!

இயந்திர உடற்பயிற்சி
கூடங்கள் வாழைத்தண்டு
தேகங்களையும்
இரும்பாய் வார்த்தெடுக்கும்
உறுதியாய்ப்புறப்படுங்கள்
தோழர்களே!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

சொல்லத் தெரியாதொரு
அதிர்வலையை
உண்டுபண்ணுமோர்
உள்மன வெளிப்பாடு

வானமும் பூமியும்
பறவையும் சோகமாகியது..
வாய்மொழிக்கு வழியற்ற
காரணத்தாலேயே

தெளிவற்றதோர்
மனநிலையில் தீர்மானிக்க



இயல்வதில்லை
உயரப் பறக்கையில்
கண்ணுக்கெட்டும்
தொலைவினில்
துருவ நட்சத்திரம்

ஆனால்.. பூமியிலோ
காற்றாடும்
இருக்கையிலோர்
மனம் நெய்யும்
கவிதையழகு!

**கீதா கண்ணன்**
ஸ்ரீரங்கம்.



## கல்வியும் செல்வமும்..!

ஆரம்பப்பள்ளியில்
சேர்க்கைக்கு
நீண்ட வரிசையில்
காத்திருக்கவில்லை.

அம்மாவும் அப்பாவும்
அருகினில் வந்தமரவில்லை.

அரிசியில் 'அ' எழுதவுமில்லை.

ஆசிரியர் கரும்பலகையை
நிரப்ப நிரப்ப மாணவராகிய
நாங்கள் பலப்பத்தில்
இயல்பாகவே
விளம்பினோம்.

பக்குவமாய் பல
பாடங்கள்
படித்து தேர்ந்தோம்.

குறிக்கோளான
அரசுப்பணியை அடைந்தோம்.

குறிப்பிட்ட சம்பிரதாயங்கள்
செய்தால் தான் கிட்டும்
சாதனை என்பதில்லை.

தடைக்கற்கள் முட்டும்
பாதையில்லாமல்
எதுவுமில்லை.

தன்னிலையறிந்து
தன்னம்பிக்கையுடன்



தவறாமல்
முயற்சிப்போர்க்கு
சரஸ்வதியும் இலக்குமியும்
பரிபூரணமாக
அருள் பாலிப்பார்கள்..!

**ஈ.கார்த்திகேயன்,**
அறமத்தாபாளையம்.

## பேதமை !

தென்றல் வந்து அவளைத்
தழுவிச் செல்லும்போது
பொறாமைப்படுகிறது என்
மனசு !

அதே தென்றல் எனை
நோக்கி வீசும் போது
சூறைக் காற்றாய் படுகிறது
எனக்கு !

ஆணுக்கும் பெண்ணுக்கும்
பேதமை கிடையாது
தென்றலுக்கு என்பதை ஏற்க
மறுக்கிறது மனசு !

அவளைப் பற்றிய குழப்ப
எண்ணங்களே காரணம்
பேதமை தலை விரித்தாட !
சில தப்படிகள் இடைவெளி
தூரம்தான் ஒன்று
தென்றலாகவும் இன்னொன்று
சூரைக் காற்றாகவும்
வீசுவதாக ஏற்படும்
கற்பனையால் மனசு கிடந்து
தவித்து பாடாய் படுகிறது !

அவள் யாரோ நான் யாரோ
என்ற உண்மையை உணர்ந்து
கொண்டால் நான் அவள்
மீது கொண்ட அநாவசிய
ஆசை விட்டு விலகும் !



இருந்தாலும்
ஏனோ
கற்பனையை
தொடரவே
மனசு
ஏங்குகிறது
மனம் ஒரு
குரங்கு என்பது சரியே!

**வி.கே.லக்ஷ்மிநாராயணன்**
சென்னை

## குறும்பா

இரசாயன மாற்றமின்றி
துணியாடை மாறியது
சபைதோறும்
பொன்னாடையாக..!

இளமையில் இருகரங்கள்
முதுமையில் முக்கரமாக
கைத்தடி..!

அன்று பெரியவர்கள்
கரத்தில் வெற்றிலைப்
பெட்டி இன்று திறன்பேசி..!

நிறைந்து இருந்தது
அன்று சருகுகளால்
இன்று(மது புட்டி )சரக்கு
பாட்டில்களால் நிலம்..!

குளமெல்லாம் குன்றானது
மலைகளால் அல்ல
நெகிழியால்..!

**கவிஞர் மா. கணேஷ்,**
கொன்னையூர்.

## அலுவலக அவசரம்

காலை வேளை அவசரம்..
காலனும் கைகட்டி
காத்து தான் இருக்கணும்.

பிள்ளைகளை பள்ளிக்குத்
தள்ளிவிட்டு, அவரின் கோப
பார்வையை தவிர்த்து,
அத்தையின் வசவுகளை
விழுங்கி, காலை உணவை
மறந்து, ஆசையாய் எடுத்து
வைத்த பருத்திப் புடவையை
ஒதுக்கி, நெளு நெளு பூனம்
சேலையை உடுத்தி,

கைப்பையை தேடி
பேருந்துக்கு சில்லறை
எடுத்து வைக்கும் நேரத்தில்,
இடது கையால் நெற்றியில்
ஸ்டிக்கர் பொட்டை அழுத்தி


ஓட்டமும் நடையுமாக ஓடி
பேருந்து நிறுத்தத்தில்
நின்றதும், பேருந்து இன்னும்
போகவில்லை; என்ற
நற்செய்தி கேட்டதும்,
நினைவில் வந்தது;
மறந்து வைத்துவிட்டு வந்த
மதிய உணவு டப்பா!

கண்ணில் பொங்கும் நீரை
மறைக்க; கை தேடுதே ,
கருப்பு கண்ணாடியை.
எதிரே வந்த
அடுத்த வீட்டுக்காரியின்
நமட்டு பார்வையிலிருந்தும்,
உதட்டு சுழிப்பிலுமிருந்தும்,



காப்பாற்றும்
தெய்வமாக,
வந்து நின்றது;
என் பேருந்து
73/A

**சசிகலா**
**விஸ்வநாதன்**



## புன்னகை:

மனவலி தீர்க்கும் மாமருந்து

இதழ்கள் விரிப்பில்
இதயம் திறக்கும்

ஆயிரம் சொற்களின்
புரிதலை ஒரு நொடியில் தரும்

அறிமுகம்
இல்லாதவர்களின்
புன்னகையில்
அழகான உறவுகள்
மலரும்

மொழி அறியாப்



புன்னகை
பொருள் காணவியலா
அகராதி

நெஞ்சுக் கூட்டின் வலி
நிமிடத்தில் மறையும்

கவலை மறந்து
கண நேரத்தில்
மகிழ்ச்சியூட்டும்

தாயின் புன்னகை ஆறுதல்

தந்தையின் புன்னகை
தைரியம்

மழலையின் புன்னகை
மனதிற்கு இதம்

காதலில் புன்னகை
கவலை மறையும்

மூப்பில் புன்னகை
அனுபவ முதிர்ச்சி

ஆயுள் கூட்டும் புன்னகை
அனுதினமும் அகம் மகிழும்

விழி விரிய இதழ் மலர
புன்னகை .........
விலையில்லாப் புதையல்.

**தமிழ்நிலா**

## நல்லார் ஒருவர் உளரேல்....!

நேரிசை வெண்பா!

பண்புக் குணத்தோடு
பாசமாய்க்காண்கின்ற
கண்ணியம்மிக்கார்
கனிவாக... மண்ணில்
இருந்தாலே என்றும்
மழைபொழியும் என்போம்

அருமைக்குணத்தார் அழகு!
அறச்செயல்மிக்கார்
அகிலத்தில் வாழ்ந்தால்
திறமுடன் ஊர்வளமும்
தேர்ந்து... சிறப்பாய்
வளம்பெருகும் வாழ்வும்
பெருகுமே கண்ணாய்க்
களிப்பும் பெருகுமே காண்!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்.**

## ஒளி விளக்கு

எங்கெங்கும் வித்தைக்காரர்கள் மறைந்து இருக்கிறார்கள்.
நாம் பேசுவது, நாம் நடப்பது, நாம் முடிவெடுப்பது —
அவர்கள் விரல் நுனியில் வைத்து ஆட்டுவிக்க முயல்கிறார்கள்.

நாம் அவர்கள் நினைப்பதுபோல் நடந்துகொள்கிறோம்
என்று தோன்றினாலும், அது உண்மை அல்ல — அவர்கள்
ஆட்டத்துக்குள் நம்மை நாமே இழந்துவிடவில்லை.
நம்முள் இருக்கும் நம்பிக்கை எனும் ஒளி விளக்கு எப்போதும்
விழித்திருக்கிறது.

"இது எங்களால் முடிவு செய்யப்பட்டது",
"இது எங்களால் வழிநடத்தப்பட்டது" சிலரால் கைகாட்டப்படும்
பாதை அந்த பாதையை நாமே சீரமைத்து செல்கிறோம்.
நம் வாழ்க்கை பாதையை, நம்முள் இருக்கும் ஒளி தான்
சீரமைத்துக்கொண்டு செல்கிறது.

நம் வாழ்வில் சிலர் காட்டும் கவனமும், நம்பிக்கையும் —
நம்மை சரியான பாதையில் இட்டுச் செல்கிறது.
தவறிய இடங்களில் திருத்திக்கொள்ள,
குறைபட்ட இடங்களில் நிறைவு அடைய,
துன்பத்தில் இருந்து மீண்டு வர —
அந்த கவனிப்பும் உற்றுநோக்கலும் துணையாக இருக்கிறது.



எந்த மனநிலையிலும், எந்த சூழலிலும் —
நம் வளர்ச்சியை ஊக்குவிப்பவர்கள்
இருக்கிறார்கள்.
அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ நம்மை
நல்வழிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**ஜனனி அந்தோணி ராஜ்** திருச்சிராப்பள்ளி



## அறிவியலால் ஆக்கம் செய்வோம்

அறிவியலின் வளர்ச்சியாலே பெற்ற தென்ன
ஆராய்ந்து பார்த்தாலோ நன்மை யோடு
பறித்துகுழி நமக்குநாமே விழுதல் போன்று
பலவகையாய்த் தீமைகளும் வந்த திங்கே !
தறிகையால் நெய்ததுணி எந்தி ரத்தால்
தரம்மாறக் கைத்தறியோ வீழ்ந்த தின்று
பறித்துண்ட கனிதன்னைச் சாறாய் மாற்றிப்
பதப்படுத்திப் பருகியதால் கண்டோம் நோய்கள் !

மாட்டுவண்டிப் பயணமெல்லாம் பேருந்தாக
மாசாகிப் போனதுவே தூயகாற்று
நாட்டிடையே நான்குவழிச் சாலை போட்டு
நட்டமரம் சாய்த்திட்டார் மழையோ போச்சு !
தீட்டிதிட்டம் கட்டுவித்த தொழிற்சா லையால்
தீக்கழிவு கலந்தாறு பாழ்ப் போச்சு
ஊட்டமாக பயிர்வளர மருந்த டித்தே
ஊனமாகிப் போனார்கள் மனித ரெல்லாம் !



செயற்கைக்கோள் வானத்தில் பறக்க விட்டுச்
செத்தொழிய அணுக்குண்டை வெடிக்க வைத்தார்
இயற்கையாக வீசிவந்த காற்றடைத்தே
இயந்திரத்தால் அறைகளினைச் குளிரச் செய்தார் !
இயங்குதற்கு விட்டமூச்சை மீண்டும் மீண்டும்
இழுக்கவைத்து உடலில்நோய் பெருக வைத்தார்
வியக்கவைக்கும் அறிவியலை ஆக்கத்திற்கு
வினையாற்றி வளங்களினை வளர்ப்போம் வாரீர் !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

## மருத்துவ முகாம்



கொடுங்கையூர் முத்தமிழ் நகரில் டிஓய்எப்ஐ சார்பில் நடைபெறும் மருத்துவ முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியம் துவக்கி வைத்தார்.

## அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பட்டமளிப்பு விழா



சென்னை கிண்டியில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பட்டமளிப்பு விழாவில் மாணவ, மாணவியருக்கு அமைச்சர் சி.வி.கணேசன் சான்றிதழ்களை வழங்கினார்.

## நெய் காணிக்கை செலுத்துவதுக்கு சிறப்பு மையம்




திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் தீபத்திருவிழாவுக்கு பக்தர்கள் நெய் காணிக்கை செலுத்துவதுக்கு சிறப்பு மையம் திறக்கப்பட்டுள்ளது.

## 'நலம் காக்கும் ஸ்டாலின்'



அம்பலூர் அரசுமேல்நிலை பள்ளியில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாமில் ஒரு பயனாளிக்கு நலத்திட்ட உதவியை கலெக்டர் சிவசவுந்திரவல்லி, தேவராஜ் எம்எல்ஏ வழங்கினர்.

## மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல்



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்ததால், போலீசார் சோதனை நடத்தினர்.

## வேலூர் திருப்பதி தேவஸ்தான தகவல் மையத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கல்!



**வேலூர், அக். 5:** வேலூர் சங்கரன்பாளையம் மாப்பிள்ளை ஓட்டல் உரிமையாளர் ராஜகுரு குடும்பத்தினர் மூன்றாம் சனிக்கிழமையை முன்னிட்டு வேலூர், திருப்பதி தேவஸ்தான தகவல் மையத்தில் பக்தர்களுக்கு தயிர் சாதம் வழங்கி மகிழ்ந்தார். ராஜகுரு குடும்பத்தினர் அவருக்கு உதவியாக செயல்பட்டனர். திருப்பதி தேவஸ்தான தகவல் மையத்திற்கு வருகை தந்த பக்தர்கள் ராஜகுரு குடும்பத்தினர் அளித்த தயிர் சாதத்தை வாங்கி உண்டு தங்களது பசியை போக்கி கொண்டனர்.

# வாசகர் கடிதம்

கட்சி பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டங்களுக்கு நெறிமுறை கொண்டுவரப்படும் என முதல்வர் அறிவிப்பு. தங்கம் விலை ஏறிக்கொண்டே செல்கிறது. இதற்கு மாற்று உலோகம் ஏதேனும் கண்டுபிடித்தால் பயனுள்ளதாக அமையும். உள்ளூர் செய்திகள் அனைத்தையும் தொகுத்து வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. காலாண்டு தேர்வு விடுமுறையில் சிறப்பு வகுப்புகள் நடத்தக்கூடாது கல்வித்துறை எச்சரிக்கை. விஜய் பேசிய போது மின்தடை ஏற்பட்டதா என தலைமை பொறியாளர் விளக்கம் அளித்துள்ளார். கரூர் சம்பவத்தில் யாரும் அரசியல் செய்ய வேண்டாம் என கனிமொழி அறிக்கை. சனிக்கிழமை விஜய் கூட்டம் வைத்தது தவறு என பிரேமலதா ஆவேசம். சோட்டானிக்கரை பகவதி அம்மன் கோவில் கட்டுரை பிரமாதம். புதுக்கவிதைகள் அனைத்தும் அபாரமாக உள்ளது. முத்து ஆனந்த் அவர்களின் காதல் கவிதை மிகச் சிறந்த காவியம். ஒவ்வொரு வரியும் தேன் அமுதம் படைத்தது. நெல்லை குரலோன் எழுதிய கவிதை கரூர் சம்பவத்திற்கு சரியான சம்மட்டி அடியாக இருந்தது சமையலறை டிப்ஸ் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. ஆன்மீக செய்திகள் அனைத்தும் தேன் அமுதம். விஜய் போலீசார் மீது குற்றம் சுமத்துவது தவறு என திருமாவளவன் விளக்கம். தமிழகத்தில் அக்டோபர் நாலு வரை கனமழைக்கு வாய்ப்பு. பீகார் தேர்தல் வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெற்று வருகிறது. மும்பை எக்ஸ்பிரஸ் ரயில் பெட்டிகள் இரண்டு முறை தடம் புரண்டது. வெளிநாட்டில் தயாரிக்கப்படும் படங்களுக்கு நூறு சதவீத வரி விதிக்கப்படும் என ட்ரம்பு அறிவிப்பு. சீனாவில் மிக உயரமான பாலம் திறக்கப்பட்டது. தன்னலம் கருதாமல் செயல்படும் தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தை ஆதரிப்பது நம் அனைவரின் கடமையாகும். ஒவ்வொரு வாசகரும் தங்களால் முடிந்த அளவு தெய்வம் இதழுக்கு சந்தா கட்டியும் உறுப்பினர்களை அதிக அளவு சேர்த்தும் ஆதரவு அளிக்க வேண்டும். தன்னலம் கருதாத தமிழ்நாடு இ பேப்பர் குடும்பத்தினர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த . வாழ்த்துக்கள்



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

---

ராமநாதபுரத்தில் 176 கோடி நிறைவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்தார் #முதல்வர் ஸ்டாலின் ஐஜி அஸ்ரா கர்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு #உயர் நீதி மன்றம் அமைத்தது நான் என்ன தவெக வின் மார்க்கெட்டிங் ஆபீஸரா? #அண்ணாமலை ஆவேசம் ஈரோடு மாவட்டத்தில் 81792 பேருக்கு வீடு தேடி ரேஷன் பொருட்கள் விநியோகம் பயனர்களின் உரையாடலை ஒட்டுக் கேட்கிறதா இன்ஸ்டாகிராம் #மெட்டா அதிகாரி விளக்கம் மூன்று ஓய்வூதியத் திட்டங்களை விரிவாகப் பரிசீலித்தது சுகன்சிங் பேடி குழு#அரசுக்கு இடைக்கால அறிக்கை சிறப்பு கண்காணிப்பு குழுக்களை அமைத்து உர விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு நடத்துங்கள்#அலுவலர்களுக்கு உத்தரவு புதுக் கவிதைகள் களை கட்டின நூல் விமர்சனம் பிரமிப்பு வாசகர் கடிதங்கள் அற்புதம் தினமும் பத்து நிமிடங்கள் ஓடுவதால் கிடைக்கும் அளவற்ற நன்மைகள் ரத்த அழுத்தம் நீரிழிவு நோயைக் கட்டுப் படுத்தும் வெண்டைக் காய் 61 வயது விவசாயி மூளைச் சாவு அடைந்ததில் உறுப்பு தானத்தால் ஐந்து பேருக்கு மறு வாழ்வு இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.80 லட்சம் பீடி இலைகள் பறிமுதல்#இருவர் கைது இந்திய ஜனநாயக கட்டமைப்பை முழுமையாக தாக்கி வருகிறது பாஜக#கொலம்பியாவில் ராகுல் காந்தி வேதனை குஜராத்தின் சர் கிரீக் எல்லையில் பாக். ராணுவ கட்டமைப்புகள் அதிகரிப்பு#ராஜ்நாத் சிங் எச்சரிக்கை கட்டாய விடுப்பில் அமெரிக்காவின் அரசு ஊழியர்கள் #முடங்கியது அரசு நிர்வாகம் நின்று கொண்டிருந்த விமானம் மீது மோதிய மற்றொரு விமானம்#அமெரிக்காவில் பரபரப்பு எத்தியோப்பியா தேவாலயத்தில் கட்டிடம் இடிந்து விழுந்து விபத்து #36 பேர் பலி கடல் வழியாக நிவாரண பொருட்கள் கொண்டு சென்ற கிரேட்டாதன்பெர்க் தடுத்து நிறுத்தம் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக மக்கள் பேயாட்டம்#12 பேர் சுட்டுக் கொலை சீன அதிபரை நான்கு வாரங்களில் சந்தித்துப் பேசுவேன் #அமெரிக்க அதிபர் டிரம்ப்



**-பி. சுரேகா**
சென்னை

---

வணக்கம். 4.10. 25 அன்றைய தமிழ்நாடு இ பேப்பரின் முதல் பக்கத்தில் ராமநாதபுரத்தில் ரூபாய் 176 கோடி முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் என்ற படமும் செய்தியும் மிக அருமை. பாராட்டுக்கள். இன்றைய பஞ்சாங்கம் மிக அற்புத நாளாக அமைய எனக்கு உதவியது. திருக்குறளை மிகத் தெளிவான பொருளுடன் படித்து மகிழ்ந்தேன். குலசை கடற்கரையில் தசரா திருவிழா காட்சிகள் படமும் செய்தியும் மிகவும் அருமை பாராட்டுக்கள். நலம் தரும் மருத்துவம் பகுதியில் தினமும் காலையில் எழுந்ததும் ஒரு டம்ளர் தண்ணீர் போதும் எடை குறைந்து நம் வதனம் பளபளக்கும் என்று செய்தி எளிய முறையில் ஆரோக்கியமாக வாழ உதவியது மனம் நிறைந்த பாராட்டுக்கள். சிறப்பு கண்காணிப்பு குழுக்களை அமைத்து உர விற்பனை செய்து நிலையங்களில் திடீர் ஆய்வு நடத்துங்கள் என்று அலுவலர்களுக்கு உத்தரவு பிறப்பித்தது மிகவும் நல்ல தகவல்..

தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் சரத் சந்திர போஸ் வரலாறு மிகவும் அருமை அவருடைய கருப்பு வெள்ளை படத்துடன் தகவலை படிக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது. பாராட்டுக்கள். துர்கா பூஜா என்று ஒரு பக்கம் முழுவதும் துர்க்கை அம்மன் படமும் மிக மகிழ்ச்சியுடன் பார்த்து ரசித்து பரவசப்பட வைத்தது. பல்சுவைக் களஞ்சியம் பக்கத்தில் வந்த அனைத்து தகவல்களும் மிகவும் அருமை ஜோக்ஸ் ரசித்து சிரித்தேன். வாழ்வு தரும் ஆரோக்கியம் பகுதியில் வந்த எல்லா தகவலும் நாம் எப்படி இருந்தால் ஆரோக்கியமாக வாழலாம் என்ன சாப்பிட வேண்டும் என்று பல தகவல்களை மிக அருமையாக கொடுத்தது பாராட்டுக்கள். நவராத்திரி உற்சவத்தின் நிறைவாக வன்னி மர பார்வேட்டை உற்சவம் என்று மிக அருமையான படம் பார்க்கும்போது புல்லரித்தது. முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் 150 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் என்ற செய்தியும் நல்ல தகவலாக இருந்தது.

சுற்றுலா பக்கத்தில் வந்த எத்தினபுஜா மலைக்கு ஒரு சாகச பயணம் செல்வோமா என்ற செய்தியை படித்த உடனே நிச்சயம் இதுபோன்ற ஒரு சாகச பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆவல் வந்தது.

திருச்சி விமான நிலையத்தில் புதிய வசதி திருச்சி எம்பி துரை வைகோ நேரில் ஆய்வு செய்தது மிகவும் அருமை. இதுபோன்ற நல்ல வசதிகள் செய்து கொடுக்கும் போது பயணிகளுக்கு மிக அற்புதமான பயணமாக அமைவது உறுதி. தபால்தலையும் நூறு ரூபாய் நாணயம் வெளியிட்ட செய்தி மிகவும் அருமை பாராட்டுக்கள். கட்டாய விடுப்பில் அமெரிக்க அரசு ஊழியர்கள் இதனால் அமெரிக்காவின் அரசு நிர்வாகம் முடங்கியது என்ற செய்தி வெள்ளை மாளிகைக்கு நுழைந்து நேரில் பார்ப்பது போல ஒரு பிரமிப்பு ஏற்பட்டது. 20 பக்கங்களிலும் அருமையான செய்திகளை கொடுத்து அழகான விடியலை எங்களுக்கு தினம் தினம் உருவாக்கிக் கொடுக்கும் தமிழ்நாடு இ பேப்பரின் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.



**-உஷா முத்துராமன்**

---

தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் வாசக சொந்தங்கள் அனைவருக்கும் அன்பான வணக்கம். 14 வாசகர்களிடம் ஒரு விளையாட்டாக அலைபேசியில் எடுத்த மினி சர்வே பற்றிய முன்னோட்டத்தை நேற்றைய வாசகர் கடிதத்தில் படித்து விட்டு, பாராட்டி மகிழ்ந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்! உள்ளன்போடு செய்யும் எதுவும் வீண் போகாது என்பதற்கு இந்த மினி சர்வே சரியான சாட்சி என்றே கூறலாம். அலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு இது பற்றிப் பேசியவர்கள் தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் மீது அபரிமிதமான பிரியம் வைத்துள்ளனர் என்பதை நினைக்கும் போது பெரு மகிழ்ச்சி யும் பெருமிதமும் அள்ளுகிறது. இந்த குழுமத்தின் நிர்வாகப் பொறுப்பாளரும் சீப் எடிட்டரும் ஒருவரே என்றறியும் போது நெகிழ்ந்ததை விட அவர்கள் தம் குடும்பத்தினரும் இந்த ப் பணியில் முழுமையான ஈடுபாட்டுடன் இயங்கி வருகின்றனர் என்று அறிந்து அதிசயித்து நெகிழ்ந்தது குறிப்பிடத் தக்கது. இந்தக் குறுகிய காலத்தில் தமிழ் நாடு இ பேப்பர் குழுமம் பெற்றிருக்கும் இமாலய வெற்றிக்குப் பின்னால், பருவம் உயர்த்த வைக்கும் உன்னதமான உழைப்பு, சத்தம் இல்லாத மவுனத்தில் ஒளிர்ந்து மின்னுவதை நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இதையெல்லாம் நமது வாசக சொந்தங்கள் துல்லியமாகப் புரிந்து கொண்டு, பயணம் செய்கிறார்கள் என்பது ஆறுதலான ஆனந்தம். சரி, சர்வே மேட்டருக்கு வருவோம். மீண்டும் நினைவுப் படுத்துகிறோம். இது விளையாட்டாக என்னுள் திடீரென மின்னிய ஐடியா பிரவசத்தால் எடுத்த பெர்சனல் மினி சர்வே. யாரும் இதை தங்களுக்குள் எதையாவது இணைத்து எதையும் கற்பிதம் செய்ய முனைய வேண்டாம் என்று அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மனதில் முதலில் உதித்த கேள்வி தான் முதன்மையானதாக சர்வேயில் விஸ்வரூபம் எடுத்தது. தமிழ் நாடு இ பேப்பரில் எது டாப்? இந்தக் கேள்வியை மையமாக வைத்துத் தான் சர்வே, தொடக்கம் முதல் இறுதி வரை ஒடியது. 14 ல் 5 பேர்கள் 'தினம் ஒரு தலைவர்கள் ' பகுதியைச் சொல்லிச் சொல்லி வாய் மலர்ந்து மகிழ்ந்தனர் என்று தான் சொல்ல வேண்டும். ( வாரம் ஒரு தலைவர் என்பது தானே சரி... அப்படி இருக்கும் போது வாரம் ஒரு தலைவர்கள் என்று ஏன் குறிப்பிடப் படுகிறது என்று கேட்டு நம்மைத் திக்கு முக்காட வைத்தனர். இதற்கு ஆசிரியர் குழுமத்தினர் தான் பதில் தர வேண்டும்! காரணம் இல்லாமல் அப்படி தலைப்பு போட மாட்டார்கள் அல்லவா? மீதி 9 வாசக சொந்தங்கள் என்ன சொன்னார்கள் என்று நீங்கள் கேட்பது புரிகிறது... புரிகிறது! இரண்டு பேர்கள் புதுக்கவிதை பகுதிக்கு ஓட்டு போட்டனர். ஒருவர் புத்தக மதிப்புரைப் பகுதிக்கு ஆதரவு காட்டினார். இன்னும் இருவர செய்திகளின் கனகச்சித கட்டமைக்கு ஆதரவு காட்டினார். இருவர் நலம் தரும் மருத்துவம் டாப் டாப் என்று பயங்கர குஷியில் கூறினர். இன்னொருவர் எல்லா அம்சங்களும் குறை எதுவும் சொல்ல முடியாத அளவுக்கு நிறைவு நிறைவு... குறிப்பிட்டு சொல்ல இயலாது ' என்று பவ்யமாக சொல்லி பண்பாடு காட்டினார்! அதிகாலையில் வந்து ஆஜர் ஆவதை சிந்தை சிலிர்க்க சொல்லி சந்தோஷப் பட்டார் 14ல் ஆகக் குறைந்த வயதுள்ள இளைய தம்பி! இந்த மினி சர்வே, பானை சோற்றுக்கு 14 சோறு பதம் என்று எடுத்துக் கொள்ளலாமா? பதில் சொல்லத் தெரியவில்லை எனக்கு. மீண்டும் சொல்கிறேன். ஒன்று மட்டும் உறுதி. வாசக சொந்தங்கள் மத்தியில் தமிழ் நாடு இ பேப்பர் குழுமத்தின் ஆரோக்கிய தாக்கம் அற்புதம்... அற்புதம்... ஆச்சரியம்... ஆச்சரியம்... ஆனந்தம்... ஆனந்தம்.




**-பி.சிவசங்கர்**
கோவை


HAPPY
Birthday
ஆனந்தன் அருணாச்சலம்


ஆனந்த பாஸ்கர்
செய்தியாளர்கள் தேவை
சென்னையிலிருந்து நாள்தோறும் தமிழில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'ஆனந்த பாஸ்கர்' நடுநிலை நாளிதழுக்கு ஆர்வமும், துடிப்பும், ஈடுபாடும் கொண்ட மாவட்ட / தாலுகா செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், விளம்பர முகவர்கள் தேவை.
Call: 933 750 1889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/ மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


Happy Birthday
MOHANRAJ


K-LINE Seating
Manufacturers of Executive Chairs & Sofa Sets
Best Quality! Factory Manufacturing Price!
Prop. B.GAJENDRA KUMAR MEHTA
Email: dgpmehta007@gmail.com
Ph: 9940097560 / 9840551775
No.57/68, Seniamman Kovil St., Tondiarpet, Chennai-81. TN


அடமான கடன்
ரூ.10 லட்சம் முதல் ரூ.10 கோடி வரை
வீடு கட்ட, வீடு வாங்க கடன் வழங்கப்படும்.
வீடு மற்றும் நிலத்தின் மீது அடமான கடன் வழங்கப்படும்.
வேறு நிறுவனத்தில் அடமானத்தில் உள்ள கடனை மாற்றி குறைந்த வட்டிக்கு,கூடுதல் தொகைக்கு அடமான கடன் வழங்கப்படும்.
தொடர்புக்கு:-
J.இளங்கோவன்
Ph: 99419 20502


ONEPATH
BUILDERS & DEVELOPERS
ஆட்கள் தேவை
சென்னையில் இயங்கி வரும் பிரபல ரியல் எஸ்டேட் நிறுவனத்திற்கு, ஆண்கள்/பெண்கள் தேவை
வயது வரம்பு அனுபவம் தேவை இல்லை
மாதம் ரூ.30000 முதல் 1 லட்சம் வரை பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது
எங்கள் நிறுவனத்தில் CMDA, DTCP, RERA APPROVED
பகுதி நேரம் (Part Time) / முழு நேரம் (Full Time)
Cell: 89392 01422


இடம் விற்பனைக்கு
அரசூர் பவுண்டரி யூனிட் அருகில் பச்சாபாளையத்தில்
1 ஏக்கர் இடம் விற்பனைக்கு
CNC MACHINE SHOP, INDUSTRY மற்றும் முதலீட்டிற்கு ஏற்றது.
77089 84140


M2
Civil & Interior
HIRING
ADMIN STAFF
SITE SUPERVISOR
Address: No.1, Elango Salai, Teynampet, Chennai-600018.
Ct: 8220177658, 7358584657


GSK CONSTRUCTION
அனைத்து வித கட்டுமான பணிகளும் லேபர் காண்ட்ரக்ட் & மெட்டீரியல் காண்ட்ரக்ட் அடிப்படையில் சிறந்த முறையில் தரமாக கட்டித்தரப்படும்.
Prop. G.சசிக்குமார்
Ph: 9962053955
No.2/28, தண்டையார் நகர், 1 வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை-81


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.


Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


வரதமான்
தங்க நகை மாளிகை
916 KDM, (22 CT) GOLD & SILVER DEALERS
New No.1151, Old No. 392, T.H.Road, Washermenpet, Chennai-600021.
Ph: 044 - 42699873


5K CAR CARE
@ TONDIARPET
Combo Offer
Do Teflon Coating & get Full Interior Enrichment & Odour Removal
Combo 1
Combo 2
Do Rubbing Polish & get & Odour Removal
We offer the Following Professional Services
Eco Car Spa
Sanitizer Foam Car Spa
Interior Enrichment
Interior Foam Enrichment
Manual Polish(UV)
Teflon Coating Silver
Teflon Coating Gold
Teflon Coating Platinum
Teflon Coating Titanium
Engine Room Coating
Electrical Contact Cleaner
Rat Repellent
Odour Removal Treatment
Car Engine Carbon Cleaner
Wiper Smoothner Solution
Front Glass Vision Improver
Salt Water / Stain Remover
Fog Remover/ Ac Disinfectant
Air Aroma Therapy
Battery Terminal Coating
Organic Foam Wash
Interior Seat & Floor Vacum spa
Engine Room Enrichment
Door Pad Cleaning and Enrichment
Most Trusted CAR CARE
Alloy & Tire Cleaning Spa
Automatic under Chassic Spa
Interior Floor Vacum Spa
Lacto Calamine Treatment and Enrichment
Make Your Car Glow With 5K CARE CARE
Ph: 70944 85309 / 70944 85310
No.12C,Jeeva Nagar, Cross Road, Tondiarpet, Chennai-600081. Near MPT Ground


WE'RE HIRING!
A Passionate Content Creator
94386 10756

## FOR SALE
2BHK FLAT
K.K. PUDUR.P.O.
SAIBABA COLONY
96009 22463

## குடோன் LEASE/ வாடகைக்கு
Industrial / Prime area-வில் Industrial குடோன் with (EB-Power) சகல வசதிகளுடன் வாடகைக்கு உள்ளது. (For all kind of Manufacturing, warehousing and Logistics use)
Ph: 85269 25168

## குடோன் வாடகைக்கு
900 sqft
- GODOWN
- OFFICE ROOM
- WORKSHOP

with 10HP Line
Near Singanallur ESI
98420 44110

## WANTED
Kasturi ITI in Kuniamuthur requires
TEACHING STAFF
Qualification: B.E. (Mech) / Dip. in Automobile Engg / Mechanical Engg
Apply with resume to: cmdcorpoff@yahoo.in
94422 77777

## தி புரொபஷனல் கூரியர்ஸ்
கோவை
டிரைவர்கள் தேவை
லைட் / EV
காலை 8.00 - 8.00
3 or 4 சக்கர வாகனம்
ரூ.20,000/-
காலை: 9.30 - 6.30
3 or 4 சக்கர வாகனத்தில் டெலிவரி மட்டும் செய்ய
ரூ.17,500/-
தங்கும் வசதி இலவசம்
ஒரிஜினல் லைசென்ஸ், ஆதார் நகல் போட்டோவுடன் நேரில் அணுகவும்
தலைமை அலுவலகம்
56/2, சுங்கம் பை-பாஸ் ரோடு, சுங்கம், கோவை-45
89393 77709
98433 21677

## இடம் விற்பனைக்கு
ஈச்சனாரி பொள்ளாச்சி சாலை
மிக அருகில் 50செண்ட் வடக்கு 30அடி தார்ரோட்டின் மேல் அமைந்துள்ளது.
L&T Bye Pass
கற்பகம் யுனிவர்சிட்டி மற்றும் L&T Tech Park அருகில்
மிக குறைந்த விலையில் விற்பனைக்குள்ளது.
98422 14096
SAA

## குடோன் வாடகைக்கு
காளப்பட்டி ரோடு
Tax Park அருகில்
30 அடி ரோட்டில்
கிழக்கு பார்த்த
1800 Sq Feet-ல்
குடோன் வாடகைக்கு
98942 21416

## ஏர்போர்ட் அருகில் வீடு விற்பனைக்கு
கோவை Airport பின்புறம்
இருகூரில் 4 செண்ட் மேற்கு சைட்
வடக்கு வாசல் 3200 ச.அடி
3 போர்சன் புதிய வீடு 1.50 Cr
வாடகை வருமானத்துக்கு உகந்தது
மொத்த வாடகை வருமானம் 60,000
gated community
Ph: 88705 21041

## Aachi
The Mother of Good Taste
நிறுவனத்திற்கு டிரைவர்கள் தேவை
நல்ல சம்பளம்
உணவு, தங்குமிடம்
சீருடை, காப்பீடு இலவசம்
எண்.1, காமராஜ் தெரு, பொன்னியம்மன் நகர், கீழ் அயனம்பாக்கம், சென்னை - 95
99410 12110

## FOR SALE
INDUSTRIAL LAND
3.42 ACRES
@SRIPERUMBUDUR
- IDEAL FOR FACTORY SETUP
- CLEAR TITLE

JBM HOMES
INDUSTRIAL | RESIDENTIAL | PLOTS | VILLAS
6369521526/ 8883042819

## DTCP Sites For Sale
@ KALAPATTY
North Facing Sites
5.5Cent
Direct Sale !!!
90471 87197
SAA

## பாப்பம்பட்டியில் இடம் விற்பனைக்கு
பாப்பம்பட்டி ஸ்ரீ கிருஷ்ணா கார்டனில் வீட்டுமனைகள் விற்பனைக்கு
வடக்கு பார்த்த 3.5செண்ட் DTCP வீட்டுமனைகள் விற்பனைக்கு
1செண்ட் 7.80 லட்சம்
Ph: 88705 21041

## WANTED
TELECALLERS
Female 4 nos
Sidco
Attractive Salary + incentive
Ph: 99527 35557
SAA

## செக்யூரிட்டிகள் தேவை
செக்யூரிட்டிகள் அதிக அளவில் உடனடி தேவை
சம்பளம்: ரூ.14,000 to 18,000
வாரம் அட்வான்ஸ் உண்டு
கணபதி, சரவணம்பட்டி, சீரநாயக்கன் பாளையம், காளப்பட்டி
செக்யூரிட்டி – 25 நபர்கள்
ASO – 5 நபர்கள்
உணவு, தங்குமிடம் சலுகை விலையில் வழங்கப்படும்
63802 81047
63699 77639

## ஹோட்டல்/ லாட்ஜ் விற்பனைக்கு
திருச்சி மாவட்டம் சமயபுரம் மாரி அம்மன் கோவில் தேரடி வீதியில்
8500 சதுர அடி
26 ரூம்ஸ் கொண்ட
10 கார் பார்க்கிங் வசதி உள்ளது.
பத்திர பதிவு செய்யும்போது உடனடி பணம்.
Clear Title with Bank Loan.
No Brokers.
Call: 99945 62553, 99945 62554, 90032 30032

## ராணிப்பேட்டை-ல்
100 ஏக்கர் மாந்தோட்டம் நீச்சல் குளத்துடன் கெஸ்ட் ஹவுஸ் விற்பனைக்கு
புரோக்கர்கள் தவிர்க்கவும்
73972 73555 / 73973 69555
73396 49555

## பூமி லீசுக்கு தேவை
அன்னூர் (ஓதிமலை, ரங்கம்பாளையம் புளியம்பட்டி, இரும்பொறை) சுற்றுவட்டாரத்தில்
CT: 81229 93179

## OFFICE SPACE FOR RENT
TRICHY ROAD
(Near Nanjappa Nagar)
Ground Floor: 1750 Sqft.
Prime Location with all amenities
98422 22725

## REQD ENGINEERS
B.E. / D.M.E, - Mech., Elect., ECE (Freshers/1-3yrs Exp.) for Engineering Company Tiruvanmiyur Chennai.
CTC: 2.5 to 3 Lakhs p.a with Accommodation,
Basic Computer knowledge.
vtc600041@gmail.com
Mob: 9444296562

## மகாராணி தியேட்டர் அருகில்
2 கடை வாடகைக்கு உள்ளது
94444 13395
044-48609138

## நிலம் விற்பனைக்கு
கோவை to பொள்ளாச்சி (ஆச்சிப்பட்டி) மெயின் ரோட்டில் இருந்து 700 மீட்டர் தொலைவில் மேற்கு பார்த்த
3½ Cent DTCP நிலம் அவசர விற்பனைக்கு
மொத்தம் விலை 12.5 லட்சம் மட்டுமே.
95788 16871

## தென்னந்தோப்பு விற்பனைக்கு
கிணத்துகடவு செட்டிகாபாளையத்தில் பஸ் ரோடு மேல்
1 ஏக்கர்
தென்னந்தோப்பு விற்பனைக்கு
போர் 3A1 அக்ரிசர்வீஸ் உண்டு.
முழுவதும் சொட்டுநீர் பாசனம்
நல்ல காய்ப்பு 80 மரங்கள்,
பஸ்ரோடு 221 அடி,
இரு வழிபாதை உள்ளது.
விலை 1.5Cr.
99949 27777
98411 58008

## BAKERS
The Dairy & Spice People
Magic in your Cuisine
bakersspicesindia@gmail.com www.bakersspices.in
We are Hiring!
DTP / GRAPHIC DESIGNER
with working Knowledge in CorelDRAW, Photoshop etc.
CALL
+91 9363210849
+91 9585159864

## டிரைவர் தேவை
வீட்டு டிரைவர் ஆக முன் அனுபவம் கொண்ட 40 வயதிற்குக் குறையாத நபர்கள் அணுகவும்
திருச்சி ரோடு சுங்கம் அருகில் வேலை
வேலை நேரம் :
காலை 8 மணியிலிருந்து மாலை 8 மணி வரை
நேரில் வர அழைக்கவும்:
99 44 44 75 67

## ஏத்தர் பைக் ஷோரூம் இடம் தேவை
தரை மட்டும் பில்ட் ஏரியா: 2500 சதுரடி அடி
ஷோரூம்: 1000 சதுர அடி
சர்வீஸ் சென்டர்: 1500 சதுர அடி
தேவையான வசதிகள்:
மெயின் ரோடு நேர் முன், குறைந்தபட்சம் 20அடி முன்புறம் கார்/பைக் பார்கிங் வசதி அவசியம்.
விருப்ப இடங்கள்:
சோழிங்கநல்லூர், கூடுவாஞ்சேரி, திருவொற்றியூர், வாசர்மேன் பேட்டை
Contact: 87126 00676



# பல்சுவை களஞ்சியம்




# இதமான வார்த்தைகள்

பல நேரங்களில் நல்லதாக, ஆதரவாக சொல்லப்படும் நான்கு வார்த்தைகள் ஏற்படுத்தும் தாக்கத்தை, பணத்தாலும், பொருளாலும் ஏற்படுத்த முடிவது இல்லை.

அதுவும் துன்பக் காலங்களில் ஒருவன் சிக்கித் தவிக்கும் போது அவனிடம் அன்பாகவும், ஆறுதலாகவும், நம்பிக்கை ஊட்டும்படியாகவும் சொல்லப்படும் வார்த்தைகள் ஏற்படுத்தும் நன்மைகளுக்கு அளவே இல்லை.

தண்ணீரில் மூழ்கித் தத்தளிக்கும் நீந்தத் தெரியாத மனிதனுக்குக் கிடைக்கும் கட்டையை பிடித்து மிதக்க உதவுவதைப் போல அந்த அன்பான நல்ல வார்த்தைகள் துன்பக் காலத்தில் தாக்குப் பிடிக்க ஒருவனுக்கு உதவுகின்றன.

மிகவும் தன்னம்பிக்கை உடையவர்கள், தைரியசாலிகள் கூட சில சமயங்களில் தங்கள் தன்னம்பிக்கையையும், தைரியத்தையும் இழந்து விடுவதை நாம் பார்த்து இருக்கின்றோம்.

அவர்களே தங்களுக்குள் அவற்றை இழந்து நிற்கும் அந்தக் குறுகிய காலத்தில் அடுத்தவரிடமிருந்து வரும் நம்பிக்கை வார்த்தைகள் எப்படிப்பட்ட ஊக்க மருந்தாக வேலை செய்கிறது என்பதைக் கண்கூடாகக் கண்டு இருக்கிக்கிறோம்.

இன்றைய நாட்களில் ஆதரவான நான்கு வார்த்தைகள் கேட்பது உண்மையில் அரிதாக இருக்கிறது.

எத்தனையோ வசதிகளும், வாய்ப்புகளும் பெருகி இருந்தாலும் மனப்பற்றக் குறையாலும், நேரப் பற்றாக்குறையாலும் நல்ல நம்பிக்கை, ஆறுதல் ஊட்டும் வார்த்தைகள் கேட்பது அபூர்வமாகவே இருக்கிறது.

இந்தச் சிறிய குறைபாட்டின் விளைவுகள் வார்த்தைகளில் அடங்காதவை. பூதாகாரமானவை "கல்கத்தா வீதிகளில் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்த தொழு நோயாளி ஒருவரது உடல் நிலை மிகவும் மோசமாகி விட, அவர் அன்னை தெரசாவின் கருணை இல்லம் ஒன்றில் அடைக்கலம் புகுந்தார்.

சில இடங்களில் அழுகிய நிலையில் இருந்த அவர் உடலைச் சுத்தம் செய்து கொண்டு இருந்த சேவகர் ஒருவர்,ஒரு கட்டத்தில் அந்த நெடியைத் தாங்க முடியாமல் பின் வாங்க, அன்னை தெரசா அந்த வேலையைத் தானே மேற்கொண்டு தொடர்ந்தார்.

சிறிதும் முகம் சுளிக்காமல், கெட்ட நெடியைப் பொருட்படுத்தாமல் அன்னை தொடர்ந்து செய்த அந்தப் பணி அந்தத் தொழு நோயாளியின் கண்களில் கண்ணீரை வரவழைத்து விட்டது.

"அம்மா இது போன்ற அறுவருக்க வைக்கும் வேலையை செய்ய உங்களுக்கு சிரமமாகத் தோன்றவில்லையா?" என்று அவர் கேட்டார்.
"சகோதரரே!

நீங்கள் அனுபவிக்கும் இந்த வேதனையை ஒப்பிடும் போது நான் செய்வது ஒரு சொல்லத்தக்க செயலே இல்லை" என்று அன்புடன் பதிலளித்தார் அன்னை தெரசா.

அன்னையுடைய அந்தத் தன்னலம் இல்லாத சேவைக்கு இணையாக அந்தத் தொழு நோயாளியின் இதயத்தைத் தொட்டது அந்த அன்பான வார்த்தைகள்..

ஆம்.,அன்புச் நண்பர்களே..,

சொற்கள் சக்தி வாய்ந்தவை. அவை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை படைத்தவை. அவைகளை ஆக்கத்திற்கே பயன்படுத்துங்கள்.

சந்திக்கும் மனிதர்களிடம் உள்ள நல்லதைக் கண்டு பிடித்துப் பாராட்டுங்கள்.
அப்படி நல்லதைப் பாராட்டும் போது அவர்கள் மேலும் நல்லதைச் செய்ய நீங்கள் அவர்களை ஊக்கப்படுத்துகிறீர்கள்.



மற்றவர்கள் வருத்தத்தில் மூழ்கி இருக்கையில் ஆத்மார்த்தமாய் ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுங்கள்.

வருத்தங்களும், தோல்விகளும் சகஜமானவை என்பதையும் அதைத் தாண்டாமல் யாரும் பெரிய வெற்றிகளை அடைந்ததில்லை என்பதை நினைவூட்டுங்கள்.

உங்களுக்குத் தெரிந்து அதே போன்ற நிலைகளில் இருந்து விடுபட்டு மேலே வந்தவர்கள் பற்றி எடுத்துச் சொல்லி தைரியப்படுத்துங்கள்.

அதன் மூலம் அதிலிருந்து மீண்டு வர அவர்களுக்கு நீங்கள் உதவுகிறீர்கள்.

காணும் ஒவ்வொரு திறமையையும் சுட்டிக் காட்டி வாழ்த்தத் தயங்காதீர்கள்.

பிறையாகத் தோன்றும் எல்லாமே முழு நிலவாகிப் பிரகாசிப்பதில்லை. எத்தனையோ பிறைகள் அலட்சியத்தாலும், கடுமையான விமரிசனங்களாலும் அமாவாசை இருட்டாய் தொலைந்து போய் இருக்கின்றன.

ஒரு திறமை வெளிப்படுகையில் அடையாளம் காணப்பட்டு பாராட்டப்படும் போது அந்தத் திறமை வேரூன்ற உதவுகிறீர்கள்.

தங்கள் திறமைகள் மீது உண்மையில் நம்பிக்கை ஏற்படும் வரை எல்லாத் திறமையாளர்களுக்கும் ஆரம்பத்தில் இது போன்ற நல்ல வார்த்தைகள் தேவைப்படுகின்றன.

அந்த நல்ல வார்த்தைகளைச் சொல்ல என்றுமே தயக்கம் கொள்ளாதீர்கள்.

அன்னை தெரசாவைப் போல் தன்னலம் இல்லாத சேவைகளை செய்ய நமக்கு முடியாமல் இருக்கலாம்.

ஆனால் ,அன்பாய் நான்கு வார்த்தைகள் சொல்லலாம் இல்லையா?

அதற்கு என்ன செலவாகப் இருக்கிறது? அதில் என்ன சிரமம் இருக்கப் போகிறது?

இந்தக் கணத்திலிருந்து சிரமமில்லாத, செலவில்லாத அந்த நல்ல செயலை நாம் செய்ய ஆரம்பிப்போமா?

# பெப்பர் காளான்....எப்படி?



**தேவையான பொருட்கள்:**

எண்ணெய்
தேவையான அளவு
கடுகு, உளுந்து, கருவேப்பிலை
தேவையான அளவு
பெரிய வெங்காயம்
இரண்டு (பொடியாக நறுக்கியது)
1
பச்சை மிளகாய்
நறுக்கியது
மஞ்சள் தூள்
அரை ஸ்பூன்
மிளகு தூள்
இரண்டு ஸ்பூன்
காளான்
250 கிராம் (நறுக்கியது)
உப்பு
தேவையான அளவு

**செய்முறை:**

1 கடாயில் நான்கு ஸ்பூன் எண்ணெய் விட்டு காய விடவும். பின்பு கடுகு, உளுந்து, கருவேப்பிலை போட்டு தாளித்து கொள்ளவும்

2 பொடியாக நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய் போட்டு வதக்கவும்


3 நறுக்கிய காளானை இதோடு சேர்த்து வதக்கவும்

4 இரண்டு நிமிடம் கழித்து காளான் நன்றாக தண்ணீர் விடும். இப்பொழுது மஞ்சள் தூள், உப்பு சேர்த்து கிளறி, மூடி விடவும்

5 ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை காளானை நன்கு கிளறி விடவும். 15 நிமிடத்தில் தண்ணீர் முற்றிலும் வற்றி விடும். இப்போது அடுப்பை அணைத்து விட்டு மிளகு தூளை சேர்த்து நன்கு கிளறி விட்டால் தயார்.

# மீம்ஸ்







# விடுகதை

| | |
|---|---|
| நாலு மூளைக்கிணறு, நாகரத்தினக்கிணறு, எட்டிப் பார்த்தால் சொட்டுத தண்ணீர் இல்லை அது என்ன? | அச்சு வெல்லம் |
| அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன? | மிருதங்கம் |
| கை பட்டால் சிணுங்கும் கன்னிப் பெண், கூச்சல் போட்டு கதவை திறக்க வைப்பவள் அவள் யார்? | காலிங்பெல் |
| பகலிலே வெறுங்காடு, இரவெல்லாம் பூக்காடு. அது என்ன? | வானம் |



# ஜோக்ஸ்

நோயாளியை கூட்டிட்டு வரலாமா ?
மருத்துவர் ; கூட்டிட்டு வாங்க ! தூக்கிட்டுப் போங்க !
-------------------------
சாப்பிட முடியாத பன் எது ?
ரிப்பன் .
-------------------------
உங்க அப்பா தினமும் சீனி டப்பாவை ஏன் திறந்து பார்க்கிறார் ?
மருத்துவர் தினமும் சுகர் செக் பண்ண சொல்லி இருந்தார் .
---------------------
கணவன் ; சாமிகிட்ட என்ன வேண்டினாய்?
மனைவி ; அடுத்த பிறவியிலும் நீங்கதான் எனக்கு கணவராக வர வேண்டினேன் .
மனைவி ;சாமிகிட்ட நீங்க என்ன வேண்டினீர்கள் .
கணவன் ; எனக்கு அடுத்த பிறவியே இருக்கக் கூடாது என்று வேண்டினேன் .
-------------------------
சொர்க்கத்தில் கணவனையும் ,மனைவியையும் பிரித்து வைத்து இருப்பார்களாமே .



அதுனாலதான் அதன் பெயர் சொர்க்கம் என்கின்றனர் .
-------------------------
மண்டை உடையாம இருக்க தலைக்கவசம் போடுகின்றனர் .
தலைக்கவசம் உடையாம இருக்க யாரவது மண்டையைப் போடுறாங்களா ?
-------------------------
உங்க ஊரில் யாரவது பெரிய மனிதர்கள் பிறந்து இருக்கிறார்களா ?
எங்க ஊரில் யாருமே பெரிய மனிதராகப் பிறப்பதில்லை .எல்லோரும் குழந்தையாகவே பிறக்கின்றனர் .
---------------------
- கோழிக்கு முந்திரிப் பருப்புப் போட்டு வளர்த்தாலும் அது முட்டைதான் போடும் . 100 மதிப்பெண் போடாது .
-------------------------
-------------------------
-------
என் மனைவி மாதிரி யாரும் தொலைக்காட்சித் தொடர்கள் பார்க்க முடியாது .
தொலைக்காட்சியைக் கட்டிப் பிடித்து அழுது கிட்டே பார்ப்பாள் .
-------------------------
கிளி ஏன் பச்சையா இருக்கு ?
அது பச்சைக்கிளி அதுதான் பச்சையா இருக்கு .
-------------------------



# ஜோதிடம் அறிவோம்



## திதி என்பது....



திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே உள்ள தூரம். அமாவாசை அன்று சூரியனும் சந்திரனும் சேர்ந்திருப்பார்கள். அதன் பின் சந்திரன் சூரியனிடம் இருந்து விலகி செல்வார். திதி எனப்படுவது பஞ்சாங்கத்தின் ஒரு முக்கிய பகுதியாகும்.


இந்துக்களின் தமிழ் நாட்காட்டியின்படி ஒவ்வொரு மாதமும் 30 திதிகள் கடைபிடிக்கப்படுகின்றன. அதில் இரண்டு பட்சங்கள் உள்ளன. அவை கிருஷ்ண பட்சம் அல்லது தேய்பிறை மற்றும் சுக்கில பட்சம் அல்லது வளர்பிறை ஆகும்.

வளர்பிறைத் திதிகள்

அமாவாசை நாளன்று சூரியனும் சந்திரனும் 0˚ (0 பாகையில்) காணப்படுவார்கள். அதனால் பூமியில் இருப்போருக்கு சந்திரனைப் பார்க்கமுடியாது. அதற்குப்பின் சந்திரன் தினமும் ஏறத்தாழ 12˚ சூரியனின் பார்வையில் இருந்து விலகிச் சென்று கொண்டிருக்கும். 15 ஆம் நாளான பௌர்ணமி அன்று சூரியனில் இருந்து 180˚ தூரத்தில் இருக்கும். அப்போது சூரியனின் முழுப்பார்வையும் சந்திரனின் மேல் விழுகின்றது. அதாவது இராசிச் சக்கரத்தில் சூரியனில் இருந்து 7-வது ராசியில் இருக்கும்.

## சூரியனுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அக்னி நட்சத்திரம்





தமிழ் பஞ்சாங்கப்படி சூரியன் மேஷ ராசியில் உலவும் வெயில் காலமாக அக்னி நட்சத்திரம் கருதப்படுகிறது. சூரியன் பரணி நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் தொடங்கி கார்த்திகை நட்சத்திரம் முழுவதும் வலம் வரும் காலகட்டமாக இது அமைகிறது. அறிவியல்படி சூரியன் ஒரு கோளாகக் கருதப்பட்டாலும், அதுவும் ஒரு விண்மீன் தான்.

அக்னி நட்சத்திர காலத்தில் சந்திரன், பூமி ஆகியன சூரியனுக்கு அருகில் இருக்கும். பரணி நட்சத்திரம் 3-ம் பாதத்துக்கு சூரியன் வரும்போது அதிக வெப்பத்தைத் தருகிறது. பிறகு படிப்படியாக நகர்ந்து கார்த்திகை நட்சத்திரத்தில் உலா வரும்.

## ரிஷ்ய சிருங்கர் வழிபட்ட ரிஷப வாகனன்!

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களுள் ஒன்று, திருவூர்.

திரு என்பது செல்வத்தைக் குறிக்கும். ஊர்ப்பெயரின் முன் திரு என்ற அடைமொழி அமைந்திருப்பதைப் பல இடங்களில் காணலாம். இங்கோ செல்வமே ஊரின் பெயராக இருப்பதால், ஒரு காலத்தில் செல்வச்செழிப்போடு இவ்வூர் திகழ்ந்திருப்பதை அறிய முடிகிறது.

இங்குள்ள லிங்கத்தை ராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மகரிஷி ரிஷ்ய சிருங்கர் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்பதால், அவர் ரிஷ்ய சிருங்கேசுவரர் என்று வழங்கப்பட்டு நாளடைவில் சிங்காண்டீசுவரர் என்று மருவி அழைக்கப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைமையான இக்கோயில் சோழ, பல்லவ, பிற்காலப் பாண்டிய மற்றும் விஜயநகர மன்னர்களால் பராமரிக்கப்பட்ட பெருமையுடையது.

தெற்கு நோக்கிய மூன்று நிலை ராஜகோபுரம் வழியாக நுழைந்து கருவறையை அடைகிறோம்.

அங்கே மூலவர் சிங்காண்டீசுவரர் லிங்க ரூபமாய் அருள்கிறார். ஆவுடையார் சதுர வடிவமாகவும், பாணலிங்கம் எப்பொழுதும் குளிர்ச்சிப் பொருந்திய தன்மையுடையதாகவும் விளங்குகிறது. மூலவருக்கு வலப்புறம் பாலவிநாயகரும் இடப்புறம் பாலமுருகனும் அர்த்தமண்டபத்தில் வீற்றிருக்கின்றனர்.

அவர்களை தரிசித்து விட்டு தெற்கு நோக்கிய கருவறையில் அருள்பாலிக்கும் உத்பலாம்பாளை தரிசிக்கிறோம். சோழர் காலப் பாணியில் கலை அம்சத்துடன் அகிலாண்ட நாயகியாக அனுதினமும் நம்மை நாடிவரும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் தேவியாகக் காட்சி தருகிறாள் அன்னை.

மூலவர் சந்நிதிக்கு வெளியே மகாமண்டபத்தில் நடராஜர் } சிவகாமி அம்மை, நந்தீஸ்வரர் } சுயசாம்பிகை ஆகியோர் சுதைச்சிற்பங்களாகவும், அருகில் லிங்க வடிவில் ஆதி சிங்காண்டீசுவரரும் அருள்கிறார்கள். மகாமண்டபத்தின் மேற்புறத்தில் எண் கோண



வடிவத்தை நான்குத் தூண்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன.

ராமர் வழிபட்ட ராமேசுவரம், நாகர் வழிபட்ட திருநாகேஸ்வரம், யானை வழிபட்ட ஜம்புகேஸ்வரம் மற்றும் ஜம்பு மாமுனிவர் வழிபட்ட ஜம்புகேஸ்வரம் இவை அனைத்தும் ஒரே தூணில் புடைப்புச் சிற்பங்களாக நிறுத்தியும், மற்ற தூண்களில் மாணிக்கவாசகர், புத்தி பலம் தரும் ஆஞ்சநேயர், வீரஆஞ்சநேயர், மகாலட்சுமி, காமாட்சி அம்மை, விஷ்ணு முதலான தெய்வங்கள் சிவனை வணங்கும் காட்சிகளையும் படைத்துள்ளனர்.

இந்த நான்குத் தூண்களையும் வலம் வந்து வழிபட்டு மகாமண்டபத்தில் அமர்ந்து சிவனையும் சக்தியும் ஒருசேர தரிசித்து தியானித்தால் ஞானம் பெருகும், வாழ்வில் வளம் அனைத்தும் தேடி வரும், எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும் என்கின்றனர். மணிமண்டபத் தூண்களில் நர்த்தன விநாயகர், முருகன், துர்கை, துவாரபாலர்கள் காணப்படுகின்றனர்.

பிரகார வலம் வரும்போது அத்திமுக விநாயகரை தனி சந்நிதியில் தரிசிக்கிறோம். அடுத்து வள்ளி, தெய்வானை சமேத வள்ளல் குமரன் தனியாகக் கோயில் கொண்டுள்ளார். அர்த்தமண்டபத்தில் வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் கண்ணாடியில் ஆறுமுகக் கடவுளை தரிசித்த காட்சி அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலைச் சுற்றியுள்ள மாடங்களில் அறுபடை வீடுகளில் அமைந்திருக்கும் மூலவர்களின் உருவங்கள் நிறுத்தப்பட்டு ஒரே நேரத்தில் அறுபடை வீடுகளையும் தரிசிக்கும் அற்புதமான காட்சியை நம் கண் முன்னே கொண்டு வந்துள்ளனர்.

கோயிலின் காவல் தெய்வம் சண்டிகேஸ்வரர். மூர்த்தி சிறியவர் என்றாலும், இவருடைய கீர்த்தி பெரியது. வடமேற்கு மூலையில் தலவிருட்சமான வில்வ மரத்தின் கீழ் விசேஷமாக அமைந்துள்ளார் நாகேஸ்வரர். அடுத்து சப்தகன்னியர், காலபைரவர், சூரியன், சந்திரன் ஆகியோரையும் தரிசிக்கலாம்.

மகா சிவராத்திரி உள்பட சிவாலயத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களும் இங்கு நடைபெறுகின்றன. பிரதோஷம் வெகு பிரசித்தம். திருமணம் கூடி வராத பெண்கள் பிரதோஷ நாளன்று கோயிலில் தரப்படும் கலசத்தை ஏந்தியவாறு மூன்று முறை ஆலய வலம் வந்து, அதை பிரதோஷ நந்திக்கு அபிஷேகம் செய்தால் அவர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடி வருகிறதாம். மேலும் குழந்தை பாக்கியம், கல்வி, வேலைவாய்ப்பு, செல்வ வளம், உடல் நலம் போன்றவற்றிற்காகவும் இந்த பிரார்த்தனை செய்யப்படுகிறது.

சென்னை பூந்தமல்லியில் இருந்து திருத்தணி செல்லும் பேருந்து மூலமாக அரன்வாயல் பேருந்து நிறுத்தத்தில் இறங்கி, திருவூரை அடையலாம். சென்னை } அரக்கோணம் ரயில் மார்க்கத்தில் செவ்வாய்பேட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் இத்தலம் உள்ளது.

## பிரம்மன் முடிவு செய்த சரஸ்வதி சிலை



ஸ்ரீவரசித்தி வல்லப விநாயகர் கோயிலில் சரஸ்வதி

தேவிக்கென பிரத்யேகமாக தனி சந்நிதி அமைக்கப்பட்டிருக்கிறது. அண்மையில்தான் இதற்கான கும்பாபிஷேக விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

கோயிலுக்குள் நுழைந்ததுமே வலது பக்கமாக கிழக்குப் பார்த்தபடி அமைக்கப்பட்டுள்ள இந்தச் சந்நிதி, தனிக் கோயில் போன்றே கம்பீரத் தோற்றத்தில் மிளிர்கிறது. ""சரஸ்வதிதேவிக்கென இப்படிப்பட்டதொரு தனி சந்நிதியை அமைக்கும் எண்ணம் எப்படி வந்தது?" என்று ஆலயத்தின் அறங்காவலர்களிடம் கேட்டோம்.

""இந்த ஆலயத்தில் வரசித்தி விநாயகரின் தேர் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் வராஹிதேவிக்கென சிலை அமைக்க விரும்பி, சிருங்கேரி சாரதாபீட மகாசுவாமிகளிடம் நேரில் சென்று ஆலோசனை கேட்டோம். அவர் அந்த இடத்தில் சரஸ்வதி சிலையை பிரதிஷ்டை செய்ய அறிவுறுத்தினார். தேர் நிறுத்துவதற்கான இடத்தை, கலைநிகழ்ச்சிகள் நடைபெறும் மேடையருகே மாற்றினோம். முன்பு தேர் நிறுத்தி இருந்த இடத்தில் சரஸ்வதி சிலையை நிறுவ முடிவுசெய்தோம். என்னுடைய கல்குவாரியிலிருந்தே தரமான கல்லைத் தேர்ந்தெடுத்து சரஸ்வதி சிலை வடிக்கக் கொடுத்தோம். இதில் ஒரு

சிறப்பு என்னவென்றால், சரஸ்வதி சிலை அமைக்க முடிவுசெய்தவுடன், அந்த இடத்தின் மேலே தகரத்தால் மூடப்பட்டிருந்த மேற்கூரையை நீக்கி செப்பனிட முடிவுசெய்தோம். அதை நீக்கியவுடன், எங்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை விவரிக்க வார்த்தைகளே கிடையாது. மேற்கூரையில் இரண்டு குதிரைகள் பூட்டிய தேரை பிரம்மா ஓட்டுவது போன்ற சிற்பம் இருக்கக் கண்டு சிலிர்த்துப்போனோம். தன் மனைவியான சரஸ்வதிதேவியின் சிலை, தனக்குக் கீழே அமையவேண்டும் என்பதை பிரம்மதேவனே முடிவுசெய்துவிட்டாரோ என்றுதான் நினைக்கத்தோன்றியது" என்று மெய்சிலிர்க்கக் கூறினர் ஸ்ரீவரசித்தி விநாயகர் சத்சங்கக் குழுத்

தலைவர் என்.வி.எஸ். ராமகிருஷ்ணன், செயலர் ஜெ.வி. கே.ஸ்ரீதர் மற்றும் உறுப்பினர் கே.நாராயணன்.

அதற்குப் பிறகு ஏற்பாடுகள் துரிதமாக நடந்து, பத்தே மாதங்களில் சரஸ்வதி சிலை தயாராகி, ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. கையில் வீணையுடன்

அமர்ந்த நிலையில், கருணை பொங்கும் முகத்துடன் காட்சியளிக்கிறார் சரஸ்வதிதேவி. மற்ற இரண்டு கரங்களிலும் ஜபமாலையும், புத்தகமும் இடம்பெற்றுள்ளன. அன்னையின் இதழ்களில் தவழும் புன்னகை பக்தர்களின் நெஞ்சங்களை நெகிழச் செய்கிறது.

சரஸ்வதிக்கென தனி சந்நிதி அமைக்க முடிவுசெய்தவுடன், ஆலய அறங்காவலர்களும், வரசித்தி விநாயகரை தம் உள்ளத்தில் வைத்து பூஜிக்கும் பக்தர்களும் தங்களால் இயன்ற நன்கொடைகளை அளித்திருக்கிறார்கள். அதனால் உடனடியாகப் பணிகள் நடந்தேறி, கும்பாபிஷேகமும் சிறப்பாக நிறைவடைந்திருக்கிறது. வரவிருக்கும் நவராத்திரி,

சரஸ்வதிபூஜையின்போது சரஸ்வதிதேவிக்கு சிறப்பு பூஜைகளும், ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

""கல்வி, கலைகளில் சிறப்பிடம் பெறவிரும்பும் பக்தர்களும், மாணவர்களும் இந்த சரஸ்வதி

தேவியை வணங்கி வழிபட்டு, வாழ்வில் அனைத்து நலன்களையும் பெறவேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம்!" என்றார்,

## புண்ணியம் கிடைக்கனுமா? இதை பண்ணுங்க!

ஆடி அமாவாசையன்று மூதாதையர்களை வரவேற்கவேண்டும் எனவும், புரட்டாசி மகாளய அமாவாசையில் அவர்களை பூஜிக்கவேண்டும் என்றும், தை அமாவாசை அன்று மூதாதையர்களுக்கு விடை கொடுத்து அனுப்ப வேண்டும் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

தை அமாவாசை என்பது சூரியனின் முக்கிய நாள். சூரியன் தை மாதத்தில் மகர ராசியில் சஞ்சரிக்கின்றார். சனியின் வீடான மகரத்தில் அவரது தந்தையான சூரியன் பிரவேசிக்கின்றார்.

சூரியனை பிதுர்காரகன் என்றும் சந்திரனை மாதுர்காரகன் என்றும் முன்னோர்கள் கூறுகின்றனர். சூரியனும், சந்திரனும் சனியின் வீட்டில் சஞ்சரிப்பதால் தை அமாவாசை சிறப்புக்கு உரியதாகிறது. இதை புண்ணிய காலம் என்பார்கள்.

உத்தராயண புண்ணிய காலமான தை அமாவாசை அன்று பித்ருக்கள் தங்களின் உலகத்துக்கு புறப்படுகிறார்கள். நம் வீடுகளுக்கு வந்து தங்கி இருந்து கிளம்பும் உறவினர்களை எப்படி நாம் நல்ல முறையில் வழி அனுப்பி வைப்போமோ, அப்படி பித்ருக்களுக்கு தை அமாவாசை நாளில் தர்ப்பணம் முதலிய வழிபாடுகளை செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

அவ்வாறு செய்தால் அவர்களின் ஆசீர்வாதம் நமக்கு பூரணமாகக் கிடைக்கும். தை அமாவாசை அன்று அவர்கள் மீண்டும் தங்களின் உலகத்துக்குப் புறப்படுவதாகக் கூறப்படுகிறது.-

நாம் இன்று அனுபவிக்கும் நற்பலன்களுக்கு காரணம் நம் முன்னோர்கள் சேர்த்து வைத்துள்ள புண்ணியம்தான். அதை நம் பிள்ளைகளும் பெற்று பயனடைய அதை தொடர வேண்டும்.

பெற்றோர்கள் செய்யும்





நற்செயல்கள் பிள்ளைகளுக்கு கட்டாயம் போய் சேரும். எனவே நீத்தார் கடன் செய்வது என்பது மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய கடமை ஆகும்.

## எந்த திசையில் துளசி செடி நடவேண்டும்

துளசி செடி இந்து மதத்தில் புனிதமானது மற்றும் போற்றப்படுகிறது. துளசி லட்சுமி தேவியின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. வீட்டில் துளசி செடியை நடுவது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நிதி நல்வாழ்வைத் தரும் என்று நம்பப்படுகிறது.

வீட்டின் பிரதான வாசலில் துளசி செடியை நடலாமா?

வாஸ்து சாஸ்திரத்தின்படி, ஒரு வீட்டின் பிரதான வாசல் என்பது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் தெய்வங்கள் வீட்டிற்குள் நுழையும் இடமாகும். அத்தகைய சூழ்நிலையில், நேர்மறை ஆற்றலை கடத்தும் பொருட்களை நம் வீட்டின் பிரதான நுழைவாயிலில் வைக்க வேண்டும். துளசி செடி இந்து மதத்தில் புனிதமானது மற்றும் போற்றப்படுகிறது. துளசி லட்சுமி தேவியின் ஒரு வடிவமாகக் கருதப்படுகிறது. வீட்டில் துளசி செடியை நடுவது மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நிதி நல்வாழ்வைத் தரும் என்று நம்பப்படுகிறது. வீட்டின் பிரதான நுழைவாயிலில் துளசி செடியை நடலாமா என்று மக்கள் அடிக்கடி யோசிப்பார்கள். வாஸ்து சாஸ்திரம் என்ன சொல்கிறது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

**துளசி தொடர்பான வாஸ்து வைத்தியம்**

பிரதான நுழைவாயிலில் ஒரு துளசி செடியையும் நடலாம். ஆனால் வீட்டின் பிரதான நுழைவாயிலில் காற்று, சூரிய ஒளி மற்றும் தண்ணீர் இல்லையென்றால், துளசி செடி கூட வாடிவிடும். எனவே, அத்தகைய வீடுகளின் பால்கனிகளில் துளசி செடிகளை நட வேண்டும். வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசியை வீட்டின் முற்றத்திலும் நடலாம்.

**லட்சுமி தேவி மகிழ்ச்சியடைகிறாள்**

வீட்டில் துளசி செடியை வைத்திருப்பது வாழ்க்கையில் மகிழ்ச்சி, அமைதி மற்றும் செழிப்பைத் தரும் என்று நம்பப்படுகிறது. துளசி செடி வீட்டில் நல்ல அதிர்ஷ்டத்தை அதிகரிக்கிறது, அதனால்தான் இது ஸ்ரீ துளசி என்று அழைக்கப்படுகிறது. பிரதான நுழைவாயிலில் துளசி செடி இருந்தால், லட்சுமி தேவி மகிழ்ச்சி அடைவாள்.

**எந்த திசையில் துளசி செடி நடவேண்டும்**

இந்த திசையில் துளசியை நடுவது மங்களகரமானதாகக் கருதப்படுகிறது வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசியை பால்கனியின் வடக்கு அல்லது கிழக்கு திசையில் நட வேண்டும். வடக்கு திசை குபேர பகவானின்



வசிப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்த திசையில் துளசி செடியை நடுவது லட்சுமி தேவியைப் பிரியப்படுத்தும் என்று நம்பப்படுகிறது.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, வீட்டின் தெற்கு திசையில் துளசி செடிகளை நடக்கூடாது. இந்த திசை முன்னோர்களின் வசிப்பிடமாகக் கருதப்படுகிறது. இந்த திசையில் துளசி செடியை நடுவதால் லட்சுமி தேவி கோபமடைவதாக நம்பப்படுகிறது.

**துளசி நடுவதற்கு உகந்த நாள் எது?**

வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் துளசி செடிகளை நடுவது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. வியாழக்கிழமை விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது, மேலும் வெள்ளிக்கிழமை லட்சுமி தேவியின் மிகவும் விருப்பமான நாளாகக் கருதப்படுகிறது.

**பொறுப்புத் துறப்பு:**

இந்தக் கட்டுரையில் உள்ள எந்தவொரு தகவல்/பொருள்/கணக்கீட்டின் துல்லியம் அல்லது நம்பகத்தன்மைக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லை. இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் பல்வேறு ஊடகங்கள் / ஜோதிடர்கள் / பஞ்சாங்கங்கள் / சொற்பொழிவுகள் / நம்பிக்கைகள் / வேதங்களில் இருந்து சேகரித்து உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எங்கள் நோக்கம் தகவல்களை வழங்குவது மட்டுமே. இதிலிருந்து வெறும் தகவல்களை மட்டுமே பயனாளர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றபடி இதிலிருந்து பயன்படுத்திக்கொள்வது பயனாளரின் பொறுப்பாகும்.

## திருவத்திமலை வெங்கடாஜலபதி கோவில் சிறப்பு அபிஷேகம்





**விழுப்புரம், அக். 5:** திருவத்திமலை வெங்கடாஜலபதி கோவில் சிறப்பு அபிஷேகம் நடந்தது.

விழுப்புரம் மாவட்டம் திருவத்தி மலை வெங்கடாஜலபதி திருக்கோவில் புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

**அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## சீதளாதேவி மகா மாரியம்மன் ஆலயத்தில் நவராத்திரி திருவிழாவில் 11-ம்நாள் ஸ்ரீஅம்மன் ஊஞ்சல் உற்சவம்



**திருவாரூர், அக்.5:** வலங்கைமான் செட்டித் தெரு ஸ்ரீ வேம்படி சீதளாதேவி மகா மாரியம்மன் ஆலயத்தில் நவராத்திரி திருவிழாவில் 11-ம்நாள் விழாவில் ஸ்ரீஅம்மன் ஊஞ்சல் உற்சவம் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் செட்டித்தெரு ஸ்ரீ வேம்படி சீதளாதேவி மகா மாரியம்மன் ஆலயத்தில் நவராத்திரி திருவிழாவில் 11-ஆம் நாள் 03- ந்தேதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீஅம்மன் ஊஞ்சல் உற்சவத்தில் காட்சி அளித்தார்.

இரவு 7 மணிக்கு சமய சொற்பொழிவு நடைபெற்றது, இரவு 8 மணிக்கு சிறப்பு பூஜைகள், தீபாராதனை நடைபெற்று பக்தர்களுக்கும், பொது மக்களுக்கும் அருட்பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. 11-ம்நாள் மண்டகப்படி உபயதாரர்கள் வலங்கைமான் இரெ.பன்னீர்செல்வம்உடையார், இரெ.இராஜப்பா உடையார், இரெ.பாண்டியன் உடையார், இரெ.காமராஜ் உடையார் குடும்பத்தினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

நிகழ்வில் பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். நேற்றுடன் நவராத்திரி திருவிழா இனிதே நிறைவுற்றது.

நவராத்திரி திருவிழா ஏற்பாடுகளை ஆலய செயல் அலுவலர்/ தக்கார் கோ.கிருஷ்ணகுமார், ஆய்வாளர் க.மும்மூர்த்தி, மண்டகப்படி உபயதாரர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் சிறப்பாக செய்து இருந்தனர்.

## செய்யாறு அருள்மிகு எத்திராஜிவள்ளி சமேத ஸ்ரீஆதிகேசவபெருமாள் கோயிலில் சிறப்பு உற்சவம்



**செய்யாறு அக். 5:** செய்யாறு டவுன் அருள்மிகு எத்திராஜிவள்ளி சமேத ஸ்ரீ ஆதிகேசவ பெருமாள் கோயிலில் புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு நேற்று சிறப்பு அபிஷேகம் ஆராதனை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் சிறப்பு அலங்காரத்தில் கண்ணாடி சேவை உற்சவத்தில் எழுந்தருளினர். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## பெருமாளை தரிசனம் செய்ய காத்திருந்த பக்தர்கள்



கிருஷ்ணகிரி அருகே கணவாய்பட்டி வெங்கட்ரமண சுவாமி கோயிலில் பெருமாளை தரிசனம் செய்ய நீண்ட வரிசையில் காத்திருந்த பக்தர்கள்.

## வள்ளலார் இராமலிங்க அடிகள் அவதார திருநாள்



வள்ளலார் எனப்படும் இராமலிங்க அடிகளார் 1823 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி கடலூர் மாவட்டத்தில் உள்ள மருதூரில் ராமையா பிள்ளை சின்னம்மையார் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். 1850ஆம் ஆண்டு ராமலிங்க அடிகளாரருக்கு அவரது மூத்த சகோதரியின் மகளான தனக்கொடி எனும் பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். எனினும் திருமணம் முடித்த அன்று இரவே திருமண வாழ்க்கையை துறந்து, துறவு வாழ்க்கை மேற்கொண்டு உலக மக்கள் மற்றும் இன்ன பிற உயிரினங்களின் துயர் போக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்.

1858 ஆம் ஆண்டு சென்னையிலிருந்து கடலூர் சென்ற இராமலிங்க அடிகளார், அங்கு 1865 ஆம் ஆண்டு "சமரச சன்மார்க்க சபை" என்கிற அமைப்பை ஏற்படுத்தினார். இதன் மூலம் மக்களுக்கு கடவுள் ஒருவரே, அவர் ஜோதி வடிவானவர், ஜீவகாருண்யம், பிற உயிர்களின் பசி போக்குதல், சாதி சமய வேறுபாடுகள் அற்ற சமுதாயத்தை உருவாக்குவதுப் போன்ற கொள்கைகளை பரப்பி வந்தார்.

ஒரு முறை தனது ஆன்மீக சிந்தனை கருத்துக்களை எழுதிக் கொண்டிருந்த பொழுது இரவுவேளை ஆகிவிட்டதால் தீபத்தை வைத்துக் கொண்டு வள்ளலார் எழுதிக் கொண்டிருந்தார். அப்பொழுது தீபத்தில் எண்ணெய் குறைந்து தீபம் அணைய தொடங்கிய பொழுது வள்ளலார் அந்த தீபத்தில் எண்ணையை ஊற்றுவதற்கு பதிலாக தண்ணீரை ஊற்றி விட்டார். இருந்தும் அந்த தீபம் அணையாமல் எண்ணெயை ஊற்றியது போல சுடர்விட்டு எரிந்தது. இந்த காட்சியை அங்கிருந்த மக்கள் பலரும் கண்டு வள்ளலாரின் யோக ஆற்றலை எண்ணி வியந்தனர்.


தன் வாழ்நாளில் சாதி சமய வேறுபாடுகளற்ற சமுதாய உருவாக்க அரும்பாடுபட்டவரும், மக்களுக்கு மெய்யான இறைவழியை காட்டி அவர்களை இறைநிலையை அடைய தொடர்ந்து முயற்சித்தவருமான வள்ளலார் அவர்கள் 1874 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் தேதி தைப்பூச திருநாள் அன்று வடலூரில் உள்ள சித்தி வளாகத்தில் ஒரு தனி அறைகுள் சென்று தாழிட்டுக் கொண்டார். தான் தாளிட்டுக் கொண்ட அறையை யாரும் ஒரு வருட காலத்திற்குள்ளாக திறக்க கூடாது என தன் சீடர்களுக்கு கட்டளை இட்டார்.

அதன்படியே ஒரு வருட காலம் கழித்து வள்ளலார் தாளிட்ட அறையை திறந்து பார்த்த பொழுது அங்கு வள்ளலார் இருந்ததற்கான அடையாளம் ஏதுமே இல்லை என்பதை கண்டு அவரது சீடர்கள் வியப்புற்றனர். ஈடுயிணையில்லா தவ யோகியாக திகழ்ந்த வள்ளலார் ஒளியுடல் பெற்றவர் என்றும், எனவே ஜோதி வடிவான இறைவனுடன் தன்னுடைய தேகத்தை ஒளி வடிவாக கலந்து விட்டார் என அவரது சீடர்கள் நம்புகின்றனர். அதன்படியே இன்றும் தைப்பூசத் திருநாள் அன்று சித்தி வளாகத்தில் வள்ளலார் ஜோதி நிலை அடைந்த அறையில் ஜோதி தரிசனம் பக்தர்களுக்கு காட்டப்படுகிறது.



**தொகுப்பு: பா. சீனிவாசன், வந்தவாசி.**

## கூழமந்தல் அருள்மிகு ஸ்ரீபேசும் பெருமாள் கோயிலில் சிறப்பு தரிசனம்



**செய்யாறு அக். 5:** செய்யாறு அடுத்த கூழ்மந்தல் அருள்மிகு ஸ்ரீபேசும் பெருமாள் கோயிலில் புரட்டாசி மாதம் மூன்றாவது சனிக்கிழமை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம், ஆராதனை வழிபாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ பேசும் பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்தனர்.

## பெருமாள் கோவிலில் திருக்கல்யாண நிகழ்ச்சி



ஊட்டி சீனிவாச பெருமாள் கோவிலில் நேற்று திருக்கல்யாண நிகழ்ச்சி நடந்தது.

## நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம்



கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்குவாரி கொள்ளையை கண்டித்து சித்தரங்கோட்டில் நாம் தமிழர் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

## சிதம்பரம் நடராஜர் கோவில் ஆக்கிரமிப்பு அகற்றம்



சிதம்பரம் நடராஜர் கோவில் கீழ சன்னதியில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு விசாலமாக காட்சி அளிக்கிறது.

## நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்



நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியம் திருக்குவளை அஞ்சுகம் முத்துவேலர் அரசு மேல்நிலைப் பள்ளியில், நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் நேற்று நடந்தது. கலெக்டர் ஆகாஷ், இந்த முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## ரவுசு மணி

நல்லா இருக்கியா என்று கேட்பதற்கும் நல்லா இருக்கபோல என சொல்வதற்கும் உள்ள இடைவெளி தான் வயிற்றேரிச்சல்



ராஜகோபாலன்.J
சென்னை 18

## வலங்கைமானில் ஸ்ரீபெரியநாயகி சமேத ஸ்ரீகைலாசநாதர் ஆலயத்தில் பிரதோஷ விழா

**திருவாரூர், அக். 5:** வலங்கைமானில் ஸ்ரீபெரியநாயகி சமேத ஸ்ரீகைலாசநாதர் ஆலயத்தில் பிரதோஷ விழா நடைபெற்றது.

அமாவாசை மற்றும் பௌர்ணமி தினத்திற்கு முன்பாக மூன்றாவது நாளில் வரும் பிரதோஷ நாளில், பொதுமக்கள் விரதம் இருந்து அன்று மாலை சிவன் ஆலயங்களில் நந்தி பெருமானுக்கு நடைபெறும் அபிஷேகத்தில் கலந்துகொண்டு தரிசனம் செய்வது வழக்கமாக இருந்து வருகிறது.


மேலும் இந்தப் பிரதோஷம் என்பது மற்ற தினங்களை விட சனிக்கிழமைகளில் வரும் பிரதோஷம் மிகவும் சிறப்புடையதாக கருதப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற பிரதோஷ தினத்தில் திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் ஸ்ரீ பெரிய நாயகி சமேத ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் பிரதோஷ வழிபாடு நடைபெற்றது.

அதனை ஒட்டி ஆலயத்தில் உள்ள நந்தி பெருமானுக்கு பால், சந்தனம் மற்றும் மஞ்சள் தூள், திரவியப்பொடி உள்ளிட்ட பல்வேறு பூஜை பொருட்கள் கொண்டு சிறப்பு அபிஷேகங்கள் தீபாராதனை நடைபெற்றது.

பக்தர்களுக்கு அருட் பிரசாதமும், அன்ன தானமும் வழங்கப்பட்டது.

அபிஷேக ஆராதனைகளை ஆலய அர்ச்சகர் ராஜகுரு, ஜெகன் ஆகியோர் சிறப் பாக செய்திருந்தனர்.இதில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



## ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் 3 ஆம் சனிக்கிழமை கொண்டாட்டம்

**வாணியம்பாடி, அக்.5:** நேற்று (04.10.2025) வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு கிராமத்தில் 3 ஆம் சனிக்கிழமை ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் ஆலயத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. கோயிலில் உள்ள உயரமான கல் தூணில் விளக்கு ஏற்றப்பட்டது. ஊர் பெரியவர்கள் கலந்துகொண்டு வணங்கி சென்றனர்.

தகவல் M. ராதா கிருஷ்ணன் அஞ்சல் துறை (ஓய்வு) வளையாம்பட்டு போஸ்ட் வாணியம்பாடி



# சுற்றுலா: ஆந்திராவின் பறவைகள் சொர்க்கம் - நெலபட்டு சரணாலயம் ஒரு பயணம்!



நெலப்பட்டு பறவைகள் சரணாலயம் (NELAPATTU BIRD SANCTUARY) ஆந்திரப் பிரதேசத்தின் மையப்பகுதியில் மறைந்திருக்கும் இயற்கை எழில் கொஞ்சும் சோலையாகும். பறவைகள் மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு இது ஒரு சொர்க்கம் என்றே கூறலாம். தமிழக வடக்கு எல்லையிலிருந்து நாம் பயணிக்கும் தூரத்தில்தான் இந்த பறவைகள் சரணாலயம் அமைந்துள்ளது. இயற்கை நிறைந்த சூழலுக்கு மத்தியில் இதம் காண விரும்புபவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாகும். இந்த அழகிய பறவைகள் சரணாலயத்தின் அதிசயங்களைத் தெரிந்துகொள்ள தமிழ்நாட்டில் இருந்து நெலப்பட்டுக்கு செல்லும் பயணத்தில், என்னுடன் நீங்களும் இணையுங்கள்.

**நெலப்பட்டு பயணம்:**

நமது பயணம் துடிப்பான வட தமிழகத்திலிருந்து தொடங்குகிறது. (ஏனென்றால் நான் அங்குதான் வசிக்கிறேன்!) நெலப்பட்டு பறவைகள் சரணாலயத்திற்கு செல்ல சாலை வழி பயணம்தான் பெஸ்ட். ஏனெனில் செல்லும் வழியில் இருக்கும் அழகிய நிலப்பரப்புகளை ரசித்துக்கொண்டே பயணிக்கலாம். இந்த சரணாலயம் சென்னைக்கு வடக்கே சுமார் 100 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

சென்னையில் இருந்து அங்கு செல்ல இரண்டரை மணிநேரம் ஆகும். சாலையைப் பொறுத்தவரை நன்கு பராமரிக்கப்பட்டு ஒரு மென்மையான சுவாரஸ்ய அனுபவத்தை உங்களுக்குக் கொடுக்கும். இந்த பயணத்தை வெற்றிகரமாக முடித்து நெலப்பட்டு வந்து சேர்ந்தவுடன், நகரின் சலசலப்பிலிருந்து விலகி புத்துணர்ச்சி கிடைத்தது. அமைதியான சுற்றுச்சூழல் என்னை பச்சைக்கம்பளம் விரித்து வரவேற்றது.

**சரணாலயம்**

458 சதுர கிலோமீட்டரில் பறந்து விரிந்துள்ள நெலப்பட்டு சரணாலயம், பல்வேறு வகையான பறவை இனங்களின் முக்கிய வாழ்விடமாகத் திகழ்கிறது. இந்த சரணாலயத்தின் இதயமே நெலப்பட்டு ஏரிதான். இது பறவைகள் செழித்து வளர்வதற்கான உயிர் நாடியாக உள்ளது. இந்த ஆழமற்ற ஏரியில் வளர்ந்துள்ள நாணல்கள் எண்ணற்ற பறவைகளுக்கு சிறந்த தங்குமிடமாக விளங்கி, இனப்பெருக்கத்துக்கு உதவுகிறது.

**வெளிநாட்டு பறவைகள்**

இந்த சரணாலயத்தின் சிறப்பம்சமே அங்கு வரும் வெளிநாட்டு பறவைகள்தான் எனக் கூறுகிறார்கள். இது பல்வேறு வகையான புலம்பெயர் பறவைகளின் வசிப்பிடமாக உள்ளது. எனவே, பறவை ஆர்வலர்கள் இந்த இடத்தை ஒருபோதும் தவற விடக்கூடாது. இங்கே என்னென்ன பறவைகள் அதிகமாக இருக்கும் என விசாரித்தபோது பிளமிங்கோ, பெலிக்கன், நாரைகள், ஹராக்கண் மற்றும் பல வகையான வெளிநாட்டு வாத்துகள் வரும் எனக் கூறினார்கள்.

நான் சென்றதோ வெயில் காலம் என்பதால் அந்த அளவுக்கு பறவைகள் இல்லை. ஆனால், மழைக் காலம் முடிந்து, குளிர்கால தொடக்கத்தில் இந்த சரணாலயம் பரபரப்பாக இருக்குமாம். வெளிநாடுகளில் இருந்து பல பறவை இனங்கள் அந்நாட்களில் இங்கு அதிக அளவில் வரும் எனச் சொல்கிறார்கள். இந்த சரணாலயத்தைச் சுற்றிப்பார்ப்பதற்கு சிறந்த நேரம் எதுவென்றால் அதிகாலை மற்றும் பிற்பகல்தான். இந்த நேரத்தில் அங்குள்ள பறவைகளையும் அவற்றின் இயற்கையான வாழ்விடத்தையும் சிறப்பாகக் காண முடியும். இவற்றைக் காண்பதற்கு தொலைநோக்கி (BINOCULARS) மற்றும் கேமராவை எடுத்துச் செல்ல தவறாதீர்கள்.

**இயற்கை பாதைகள்**

எதைப் பற்றியும் சிந்திக்காமல் ஜாலியாக இயற்கை எழில் மிகுந்த சோலையில் நடக்க விரும்புபவர்களுக்கு நெலப்பட்டு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. சுற்றிலும் சதுப்பு நிலங்கள், ஆழமற்ற நீர்நிலை வழியாக வளைந்து செல்லும் அழகிய நடைபாதைகள் என சிறப்பான அனுபவத்தை இந்த இடம் கொடுக்கும். பறவைகளின் அழகை ரசிக்கவும், அவற்றின் வசிப்பிடங்களை கண்காணிக்கவும், அமைதியான சூழ்நிலையில் உங்களை மூழ்கடிக்கவும் இந்த பாதைகள் உங்களுக்கு உதவும்.

நீங்கள் ஒரு இயற்கை ஆர்வலராக இருந்தாலும் சரி இல்லை என்றாலும் சரி நெலப்பட்டு பறவைகள் சரணாலயத்திற்கு கட்டாயம் ஒரு முறையாவது செல்ல வேண்டும். இது உங்களுக்கு ஒரு வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத அனுபவத்தைக் கொடுக்கும். எனவே உடனடியாக உங்கள் பொருட்களை மூட்டை கட்டிக் கொண்டு, இந்த சரணாலயத்திற்கு ஒரு ட்ரிப் ஷெட்யூல் செய்துவிடுங்கள். ஆந்திரப் பிரதேச எல்லையில் அமைந்திருக்கும் இந்த பறவைகளின் சொர்க்கத்தில் நீங்களும் கொஞ்சம் இளைப்பாரிவிட்டு வாருங்கள்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## காவல்துறையில் வெடிகுண்டு கண்டறிதல் பிரிவு காலிப் பணியிடங்கள்

தமிழ்நாடு காவல்துறைக்காக வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்கச் செய்யும் திறன் கொண்ட முன்னாள் இராணுவ வீரர்கள் / முன்னாள் துணை இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறன. இது தொடர்பான முழு விபரமும் பின்வருமாறு;

தமிழ்நாடு காவல்துறையின் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்க பிரிவுகளில் பின்வரும் பதவிகளில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் (தேவைப்பட்டால் நீட்டிக்கப்படலாம்) பணிபுரிய முன்னாள் இராணுவ வீரர்கள் / முன்னாள் துணை இராணுவப்படை வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:-

(i) ஆய்வாளர் (BDDS) - முன்னாள் சுபேதார்/ சுபேதார் மேஜர் 2 காலியிடங்கள் ஊதிய அளவு - 37,700-1,19,500

(ii) உதவி ஆய்வாளர் (BDDS) - முன்னாள் நாயிப் சுபேதார் 14 காலியிடங்கள் ஊதிய அளவு - 36,900-1,16,600

(iii) தலைமை காவலர் (BDDS) - முன்னாள் ஹவில்தார்/ நாயக் - 43 காலியிடங்கள் ஊதிய அளவு - 20,600-65,500

விண்ணப்பதாரர்கள் பின்வரும் அளவுகோல்களைக் கொண்டிருக்க வேண்டும்:- வயது - 01.07.2025 நாளன்று 50 வயதுக்குக் கீழுள்ளவர்கள், கல்வித் தகுதி - குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி அல்லது அதற்கு சமமான தேர்ச்சி, தொழில்நுட்ப தகுதி - CME, புனே அல்லது NSG அல்லது BCAS ஆல் நடத்தப்படும், குறைந்தபட்சம், 6 வார BDD படிப்பில் தகுதி பெற்றிருக்க வேண்டும்

தகுதியான விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சுயவிவரங்கள் (Bio data) மற்றும் கல்விச் சான்றிதழ்கள், டிஸ்சார்ஜ் புத்தகத்தின் தேவையான பக்கங்கள், ஓய்வூதிய ஆணை, BDD தொடர்பான படிப்பு/ அனுபவச் சான்றிதழ்கள் ஆகியவற்றின் நகல்களுடன் கூடுதல் காவல்துறை இயக்குநர், செயலாக்கம், மருதம், எண்.17, போட் கிளப் சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028 என்ற முகவரிக்கு 31.10.2025 க்கு முன் தபால் மூலம் அனுப்ப வேண்டும். தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே தனிப்பட்ட அழைப்பு கடிதங்கள் மூலம் தேர்வு சோதனைகளுக்கு (சான்றிதழ் சரிபார்ப்பு, எழுத்து மற்றும் நடைமுறை தேர்வுகள் போன்றவை) அழைக்கப்படுவார்கள். இந்த ஆட்சேர்ப்பு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

# அக்டோபர் மாத வார ராசிபலன்

## 05.10.2025 முதல் 11.10.2025 வரை

### மேஷம்

இந்த வாரம் வாக்கு வன்மையால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். உங்களது செயல்களுக்கு முட்டுக் கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். முயற்சிகள் சாதகமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சனைகள் சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள். குடும்பாதிபதி சுக்கிரனின் சஞ்சாரத்தால் குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சனைகள் நீங்கி அமைதி ஏற்படும். பெண்களுக்கு புத்தி சாதுரியம் அதிகரிக்கும்.

கலைத்துறையினருக்கு நிதானமாக இருப்பது நல்லது.

அரசியல் துறையினருக்கு சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கும். திறமை வெளிப்படும்.

### ரிஷபம்

இந்த வாரம் பண வரவு அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான பணிகளில் சாதகமான பலன் கிடைக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும் சூழ்நிலை உருவாகும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் பணிச்சுமை குறைந்து காணப்படும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன் மதிப்பை பெறுவீர்கள். கணவன் மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். கலைத்துறையினருக்கு பாராட்டு கிடைக்கலாம். அரசியல்துறையினருக்கு காரியங்களில் தடை நீங்கும்.

மாணவர்களுக்கு தேவையற்ற எண்ணங்களை விட்டு விட்டு மனதை ஒருமுகப்படுத்தி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

### மிதுனம்

இந்த வாரம் திட்டமிட்டு வெற்றி பெறுவீர்கள். ராசிக்கு 5ல் சஞ்சரிக்கும் ராசியாதிபதி புதன் மனதில் இருந்த கவலையை போக்கி நிம்மதி தருவார். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். அவர்களை அனுசரித்து செல்வது நன்மையைத் தரும். கணவன், மனைவிக்கு இடையே அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம்.

பெண்களுக்கு எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. கலைத்துறையினருக்கு போட்டிகள் நீங்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் தேவை.

### கடகம்

இந்த வாரம் முன்னேற்றம் காணப்படும். விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். வீண் ஆசைகள் மனதில் தோன்றும். கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம்.

உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்து செல்வது நல்லது. பெண்களுக்கு எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவதும் நன்மை தரும்.

கலைத்துறையினருக்கு மனத் துணிவு அதிகரிக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற திட்டமிட்டு பாடங்களை படிப்பதும் தேவையற்ற பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

### சிம்மம்

இந்த வாரம் எல்லா காரியங்களிலும் சாதகமான பலன் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

கடன் பிரச்சனைகள் குறையும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள் மிகவும் கவனமுடன் செயல்படுவது நல்லது. மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும்.

மன வலிமை அதிகரிக்கும். பெண்களுக்கு நட்பு வட்டத்தில் நிதானமாக பழகுவது நல்லது. கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும்.

### கன்னி

இந்த வாரம் புத்தி சாதுரியமும் அறிவு திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பண வரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். அடுத்தவரிடம் உங்களது செயல் திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

உத்தியோகஸ்தர்கள் மேல் அதிகாரிகள் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையலாம்.

குடும்பத்தில் நடைபெறும் சில விஷயங்கள் உங்கள் கோபத்தை தூண்டலாம். பெண்களுக்கு மன தடுமாற்றம் நீங்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

அரசியலில் உள்ளவர்களுக்கு மேல் மட்டத்தில் உள்ளவர்களுடன் வாக்கு வாதங்கள் ஏற்படலாம். மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள்.

எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம்.

மன திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். புத்தி சாதுரியம் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதன் மூலம் மற்றவர்களிடம் மதிப்பு கூடும்.

### துலாம்

இந்த வாரம் எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். இக்கட்டான சூழ்நிலையில் சாமர்த்தியமாக செயல்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள்.

செயல் திறன் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். சில நேரங்களில் முக்கிய முடிவு எடுப்பதில் தயக்கம் காட்டுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயல்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்க பெறுவார்கள். கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்க மனம் விட்டு பேசுவது நன்மை தரும். பெண்களுக்கு எதிலும் சாமர்த்தியமாக செயல்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள்.

கலைத்துறையினருக்கு வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு முயற்சிகள் பலிதமாகும். மாணவர்களுக்கு செயல் திறமை அதிகரிக்கும். உயர்கல்வி கற்பவர்கள் கூடுதல் கவனத்துடன் பாடங்களை படிப்பது நல்லது.

உங்களுக்கு பதவி உயர்வு மற்றும் வெற்றியைத் தேடித் தரும். எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு நெடுநாளைய ஆசைகள் நிறைவேறும். லட்சியங்கள் கைகூடும். மனதிற்கு நெகிழ்ச்சியான சம்பவங்கள் நடக்கும். நிதானம் தேவை.

### விருச்சிகம்

இந்த வாரம் வாக்கு வன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். எல்லா விதத்திலும் நன்மையை தரும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். பண வரத்து கூடும். எதிர்பாலினத்தாருடன் பழகும் போது கவனம் தேவை. எதிர்ப்புகள் குறையும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும்.

பெண்களுக்கு எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள். கலைத்துறையினருக்கு எதிர்ப்புகள் குறையும். அரசியல்துறையினருக்கு பண வரத்து கூடும். மாணவர்களுக்கு பாடங்களை படிப்பதில் ஆர்வம் உண்டாகும்..

### தனுசு

இந்த வாரம் இழுபறியாக இருந்த ஒரு காரியங்கள் வேகம் எடுக்கும். முன் கோபம் குறையும்.

பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பண வரத்து அதிகரிக்கும். மனதில் புது தெம்பும் உற்சாகமும் தோன்றும். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பண வரத்து திருப்தியாக இருக்கும். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். கணவர், மனைவிக்கு இடையே ஒற்றுமை உண்டாகும்.

பெண்களுக்கு மனதில் புது தெம்பும் உற்சாகமும் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத செலவுகள் உண்டாகும்.

அரசியலில் உள்ளவர்களுக்கு மற்றவர்களால் மன கஷ்டம் ஏற்படும். மாணவர்களுக்கு பாதியில் நிறுத்திய கல்வி தொடர்பான விஷயங்களை மீண்டும் தொடர்வீர்கள்..

### மகரம்

இந்த வாரம் பிரச்சனைகள் அகலும். பண வரத்து எதிர்பார்த்த நேரத்தை விட தாமதமாக வந்து சேரும். ஆனால் பூர்வீக சொத்துக்களில் இருந்து பிரச்சனைகள் தீரும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும்.

தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக தங்களது வேலைகளை செய்வது நல்லது.

கணவன், மனைவிக்கு இடையே அனுசரித்து செல்வதன் மூலம் அமைதி ஏற்படும். பெண்களுக்கு எந்த ஒரு விஷயத்திலும் முடிவு எடுப்பதில் தாமதம் உண்டாகும். கலைத்துறையினருக்கு நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும்.

அரசியல் துறையினருக்கு அடுத்தவர்களிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்களுக்கு கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது வெற்றிக்கு உதவும். சக மாணவர், நண்பர்கள் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

தொழிற்சாலைகள் வைத்திருப்போருக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவான விஷயங்களில் தலையிடுவோருக்கு உங்கள் கருத்துக்களை மற்றவர்கள் ஆமோதிப்பார்கள். வியாபார போட்டிகள் சாதகமான முடிவினைத் தேடித் தரும். கவலை வேண்டாம்.

### கும்பம்

இந்த வாரம் இடமாற்றம் உண்டாகும். காரியங்கள் முடிவதில் தாமத போக்கு காணப்படும். தேவையற்ற மன சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பண வரவு இருக்கும். புதிய வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி வியாபாரம் செய்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். பெண்களுக்கு யாரையும் எதிர்த்துக் கொள்ளாமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். கலைத்துறையினர் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

அரசியல்துறையினருக்கு மேலிடத்துடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. பாடங்களை படிப்பதில் கூடுதல் கவனமும், ஆசிரியர்களிடத்தில் பேசும்போது நிதானமும் தேவை..

### மீனம்

இந்த வாரம் எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். பண வரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவி சாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொலை தூரத்தில் இருந்து நல்ல தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். வாகனம் வாங்கும் அல்லது புதுப்பிக்கும் பணியில் ஈடுபடுவீர்கள். பெண்களுக்கு உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கலைத்துறையினருக்கு உடல் ஆரோக்கியம் பெறும். அரசியல்துறையினருக்கு நீண்ட நாட்களாக இழுப்பறியாக இருந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும்.

புதிய திட்டங்களை செயல்படுத்திக் கொள்ள சிறப்பான சந்தர்ப்பம் அமையும். சக வியாபாரிகளுடன் ஒத்துப்போவீர்கள். பெரிய கடன்களில் இருந்து விடுபடவும் வழி கிடைக்கும். உற்பத்தி சார்ந்த தொழிற்துறையாளர்களுக்கு தொய்வு இன்றி தொழில் நடைபெறும்.

# திருக்கோவில் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற 108 மாணவ, மாணவியருக்கு சான்றிதழ்கள் - சேகர்பாபு வழங்கினார்

**சென்னை, அக்.5**




திருக்கோவில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர், ஓதுவார், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற 108 மாணவ, மாணவியருக்கான சான்றிதழ்களை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு இன்று வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;-

"தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு இன்று (03.10.2025) இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் திருக்கோவில்கள் சார்பில் நடத்தப்படும் அர்ச்சகர் பயிற்சி பள்ளிகளில் 2024- 25 ஆம் கல்வியாண்டில் ஓராண்டு அர்ச்சகர் பயிற்சி முடித்த 2 பெண்கள் உள்பட 89 மாணவர்கள், ஓதுவார் பயிற்சி பள்ளிகளில் மூன்றாண்டு ஓதுவார் பயிற்சி முடித்த 12 மாணவர்கள், தவில் மற்றும் நாதஸ்வர பயிற்சி பள்ளியில் மூன்றாண்டு பயிற்சி முடித்த 7 மாணவர்கள் என ஆக மொத்தம் 108 மாணவர்களுக்கு அதற்கான சான்றிதழ்களை வழங்கினார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;-

திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, அர்ச்சகர் பயிற்சி பள்ளி, ஓதுவார் பயிற்சி பள்ளி, தவில் மற்றும் நாதஸ்வரம் பயிற்சி பள்ளி, வேத ஆகம பாடசாலைகள், 4000 திவ்ய பிரபந்தம் பயிற்சி பள்ளிகள் என 21 பயிற்சி பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு, இந்த பயிற்சி பகுதிகளுக்கு உண்டான தகுதியுள்ள ஆசிரியர்கள் நியமிக்கபட்டு, தொடர்ந்து இந்த பயிற்சி பள்ளிகள் சிறப்போடு திராவிடமான வளர்ச்சியுடன் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த பயிற்சி பணியுடைய ஆரம்பகால ஊக்கத் தொகை ரூ.500 என்று 2007 ஆம் ஆண்டில் இருந்ததை, 2021 ஆம் ஆண்டு வரை வெறும் ரூ.1,000 என்ற அளவில்தான் வழங்கியிருந்தது. தமிழக முதல்-அமைச்சர் பொறுப்பேற்றவுடன், 202122 ஆம் ஆண்டில், முழுநேர பயிற்சி பள்ளியில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு ரூ.3,000 மற்றும் பகுதிநேர பயிற்சி பள்ளியில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு ரூ.1,500 ஊக்கத் தொகையாக அறிவித்தார்.

அடுத்த ஆண்டான 2023-இல், அந்த ரூ.3000 ஊக்கத் தொகையை ரூ.4,000 ஆகவும், ரூ.1,500ஐ ரூ.2,000 ஆகவும் உயர்த்தி அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு, இந்த பயிற்சி பள்ளியில் பயில்கின்ற மாணவர்களுக்கு உணவு, சீருடை, தங்குமிட வசதியோடு, முழுநேர பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு ரூ.10,000 பகுதிநேர மாணவர்களுக்கு ரூ.5,000 அன்று வழங்கி உள்ளார். இந்த பயிற்சி பணியில் பயில்கின்ற மாணவச் செல்வங்களுக்கு இன்றுவரை வழங்கப்பட்ட சான்றிதழ்கள் எண்ணிக்கை — 2021 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 213 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதோடு மட்டுமல்லாது, ஓதுவார்கள் நியமனம் — இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரை 43 ஓதுவார்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் பெண் ஓதுவார்கள் மட்டும் 12 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த பயிற்சி பள்ளிகளை மேலும் விரிவுபடுத்தவும், மாணவச் செல்வங்களுக்கு பணியிடங்களை ஏற்படுத்தவும், பல்வேறு நீதிமன்றப் போராட்டங்களுக்கு பிறகு ஆகம திருக்கோயில்களை நிர்ணயிக்க உடைய குழுக்களின் இறுதி வடிவம் உச்சநீதிமன்ற தீர்ப்பால் கிடைத்துள்ளது. அதன் அடிப்படையில், ஆகமக் குழுவான ஐவர் குழுவின் கூட்டம், இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் அலுவலகத்தில் விரைவில் நடைபெற இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

## மனித மூளையின் நுட்பத்தை வீழ்த்துமா AI? விஞ்ஞானிகள் சொல்வதென்ன?



அகில உலகத்தையும் ஆட்டுவிக்கும் செயற்கை நுண்ணறிவு AI இப்போதைய நடப்பு பேசுபொருளாகி விட்டதில் வியப்பில்லை. ஏஐ மூலம் பாதுகாப்பிற்கு ஆபத்து என்று பலரும் கூக்குரலிடுகின்றனர். ஆனால் அதையே பாதுகாப்பைப் பலப்படுத்த உபயோகப்படுத்தலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏஐ உதவும் என்பது அவர்களின் வாதம். நியூயார்க் நகரில் மட்டும் 9000 கோடி என்ற பெரிய எண்ணிக்கையில் சைபர் நிகழ்வுகள் நடைபெறுகின்றனவாம். இவ்வளவு பெரிய எண்ணிக்கையில் உள்ள டேடாக்களை தரவுகளை சில நேரத்தில் அலசி ஆராய்ந்து உடனடி நடவடிக்கை எடுக்க செயற்கை நுண்ணறிவு உதவுகிறது.

நியூயார்க்கின் தொழில்நுட்ப ஆலோசகர் மாத்யூ ஃப்ரேஸர் ஏஐ பற்றி வெகுவாகப் புகழ்ந்து கூறுகிறார்.

மல்டிமாடல் ஏஐ என்பது இப்போதைய ட்ரெண்டாகி விட்டது. இதன் மூலம் ஏராளமான டெக்ஸ்ட் மெஸேஜஸ், வீடியோ, ஆடியோ ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு அரசு அதிகாரிகள் என்ன செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்யப்படுகிறது.

சுற்றுப்புறச் சூழலில் ஏற்படும் பாதிப்புகளை முன்னமேயே மல்டி மாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்; உடனடி நடவடிக்கைகளை எடுக்கலாம்.

DEEP LEARNING என்ற ஏஐ கருவி உலகை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகிறது. Google VEO என்பதன் மூலம் வீடியோக்களை ஏஐ எடுக்கலாம். இன்னும் மொத்தம் 45 ஏஐ கருவிகள் செயல்பாட்டிற்கு வந்து விட்டன.

Sophia என்பதை ஹான்ஸன் ரொபாடிக்ஸ் உருவாக்கி உள்ளது. இதன் மூலம் மனிதர்களின் குரல், சைகைகளை அது உணர்ந்து அப்படியே செய்து காட்டுகிறது.

ChatGPT புழக்கத்திற்கு வந்து இப்போது அனைவரும் உபயோகப்படுத்தும் ஒன்று. எழுதுவது, கற்பது, அதன் மூலம் புதிய படைப்புகளை உருவாக்குவது உள்ளிட்ட வேலைகளை இது செய்கிறது. அனைவரும் தாங்கள் இதன் மூலம் செய்த படைப்புகளைக் காண்பித்து மகிழ்ச்சி அடைகிறார்கள்.

இதனுடன் இப்போது அனைவரும் நாடும் இன்னொரு ஏஐ கருவி Google Gemini.

இப்போது நிபுணர்கள் ஏஐ கருவிகளின் ஐக்யூவை 110 முதல் 120 என்று கணக்கிட்டுள்ளனர். அடுத்து இது 150 என்ற அளவிற்கு உயரப் போகிறது. அவ்வளவு தான், அப்போது இது மனித முயற்சிகளைத் தோற்க அடிக்கும் அளவு உயர்ந்து ஒவ்வொரு துறையிலும் முன்னணியில் இருக்கப் போகிறது.

# ஆதார் அட்டை அப்டேட் செய்வதற்கான சேவை கட்டணம் உயர்வு

**சென்னை, அக்.5:**



ஆதார் அட்டை அப்டேட் செய்வதற்கான சேவை கட்டணத்தை உயர்த்தியுள்ளது இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யூஐடிஏஐ). இந்த கட்டண உயர்வு அக்டோபர் 1 முதல் அமலுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் வங்கி சேவை, அரசுத் துறை சேவைகள், தொலைபேசி இணைப்பு உட்பட பல்வேறு சேவைகளைப் பெற ஆதார் அட்டை அவசியமானதாக அமைந்துள்ளது. இந்தச் சூழலில் இதில் பயனர்கள் தங்களது தனிப்பட்ட விவரங்கள் மற்றும் பயோமெட்ரிக் விவரங்களை அப்டேட் செய்ய ஆதார் சேவை மையங்களில் கட்டணம் செலுத்த வேண்டி உள்ளது. பயனருக்கு வழங்கப்படும் சேவைக்கு ஏற்ப கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்த சேவை கட்டணத்தை யூஐடிஏஐ உயர்த்தி உள்ளது. இதன்படி தற்போது ஆதார் பயனர்கள் பயோமெட்ரிக் அப்டேட் செய்ய கட்டணமாக ரூ.125 செலுத்த வேண்டும். அதேபோல பெயர், பாலினம், பிறந்த தேதி, முகவரி, மொபைல் எண் போன்ற தனிப்பட்ட விவரங்களை ஆதாரில் அப்டேட் செய்ய ரூ.75 செலுத்த வேண்டும். இதற்கு முன்பு இந்த கட்டணம் ரூ.100 மற்றும் ரூ.50 என இருந்தது. இந்த புதிய கட்டண உயர்வு வரும் செப்டம்பர் 30, 2028 வரை அமலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் 'மை ஆதார்' போர்ட்டல் வழியாக அடையாள மற்றும் முகவரியை வரும் ஜூன் 14, 2026 வரை கட்டணமின்றி அப்டேட் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 30, 2026 வரை குழந்தைகள், சிறார்கள் பயோமெட்ரிக் விவரங்களை அப்டேட் செய்ய கட்டணம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடந்த 4 ½ ஆண்டுகளில், 66,018 இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கம் - தா.மோ.அன்பரசன்

**சென்னை, அக்.5:**

உலக புத்தொழில் மாநாடு தொடர்பாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசனின் செய்தியாளர் சந்தித்து பேசினார்.

தமிழ்நாட்டு ஸ்டார் அப் நிறுவனங்களை உலக அளவில் உயர்த்திடவும், அவற்றுக்கு தேவையான நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தவும், இந்தியாவிலேயே முதல் முதலாக வருகிற 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் உலக புத்தொழில் மாநாடு கோயம்புத்தூரில் நடைபெறுகிறது. அக்டோபர் 9 ஆம் தேதி முதல்-அமைச்சர் மாநாட்டினை தொங்கி வைக்க உள்ளார். இந்த மாநாட்டிற்கான லோகோ-வையும், இணைய தளத்தையும், துணை முதல்-அமைச்சர் 26.04.2025 அன்று தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார்கள்.

மாநாட்டில் 39 நாடுகளில் இருந்து, 264 பங்கேற்பாளர்களுடன் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழில்முனைவோர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்த மாநாட்டில் இந்திய அளவில் முன்னணியில் உள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களும், மத்திய அரசின் 10 துறைகளும், 10 மாநிலங்களின் அரசுத் துறைகள், ஸ்டார்ட் அப் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் 15 துறைகளும் பங்குபெற உள்ளனர். 1000 க்கும் மேற்பட்ட கண்காட்சி அரங்குகளுடன், 315 க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது.

கடந்த அதிமுக ஆட்சியில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிக்க எந்தவித முயற்சியும் மேற்கொள்ள வில்லை. முதல்-அமைச்சர் பொறுபேற்ற பின் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதனை ஊக்குவிக்க தலைமை செயல் அலுவலர் பதவியுடன் 70 க்கும் மேற்பட்ட பணியாளர்களை நியமித்து ஸ்டார்ட் அப் (TN) உருவாக்கப்பட்டது.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்க (TANSEED) நிதியுதவி திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ், இது வரை கடந்த 4 ஆண்டுகளில் 43 எஸ்.சி. /எஸ்.டி. ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உட்பட 212 ஸ்டார்ட் அப் நிறுவனங்களில், ரூ. 79 கோடியே 49 லட்சம் தமிழக அரசு முதலீடு செய்துள்ளது. அரசு முதலீடுடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனங்களில் 68 நிறுவனங்கள் ரூ. 554 கோடியே 49 லட்சம் மதிப்பில் வெளி முதலீட்டாளர்களிடம் இருந்து முதலீடுகளை பெற்றுள்ளது, இதன் மூலம் 1000 க்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். தனியார் முதலீட்டாளர்களையும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை இணைக்கும் (TANFUND) தளத்தின் மூலம் ரூ. 128 கோடியே 84 லட்சம் தனியார் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.

ஸ்டார்ட் அப் டி.என். மூலம் நவீன வடிவமைப்பு உதவி மையம் - டிசைன் ஸ்டுடியோ கல்வி நிறுவனங்களில் (Pre Incubation Centers) புத்தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்ட - (Mentor TN) தளம் தனியர் முதலீட்டாளர்கள் மற்றும் ஸ்டார்அப் நிறுவனங்களை இணைக்கும்- (TAN FUND) தளம் புத்தொழில் நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் (Launch pad) நிகழ்ச்சிகள் எஸ்.சி./எஸ்.டி. தொழில்முனைவோர்களை ஊக்குவிக்க பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையம், ஸ்பேஸ் டெக்ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு ரூ.10 கோடி நிதி உதவி ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீட்டில்- கிராமம் தோறும் புத்தொழில் மையம். 11 நகரங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள். என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஸ்டார் அப் நிறுவனங்களுக்கு ஏற்ற சூழலை உருவாகியதால் 2021 இல் 2032 ஆக இருந்த ஸ்டார்அப் நிறுவனங்களின் பதிவு தற்போது 12,171 ஆக உயர்ந்துள்ளது. இதில் 6063 நிறுவனங்களில் பெண்கள் நிறுவனர்களாக உள்ளனர். அதிமுக ஆட்சியில் ஸ்டார்அப் தர வரிசைப் பட்டியலில் கடைசியில் இருந்த தமிழ்நாடு 2021 இல் 3 ஆம் இடம் ஆன லீடர் விருதினை பெற்றது. 2022 ஆம் ஆண்டு சிறந்த செயல்பாட்டாளர் விருதினை பெற்று முதல் இடத்தை பெற்றது.

## க்ரைம் கார்னர்

## கரூர் சம்பவம் குறித்து மிரட்டல் விடுத்த தவெக பிரமுகர் கைது

**சென்னை, அக்.5:**

கோயம்பேடு பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள திரையரங்கில் படம் பார்த்து விட்டு வெளியே வந்த ரசிகர்களிடம் யூடியூப் சேனல்களை சேர்ந்த சிலர் பேட்டி எடுத்தனர். அப்போது கரூரில் நடிகர் விஜய் பங்கேற்ற கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாகவும் ரசிகர்களிடம் கேள்வி கேட்டுள்ளனர்.

அப்போது, அங்கு வந்த இளைஞர் ஒருவர் தவெகவுக்கு ஆதரவாக பேசியதோடு, யூடியூபர்களை ஆபாசமாக பேசி, மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து புகாரின் பேரில் கோயம்பேடு போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை செய்தனர். இதில், ஆபாசமாக பேசி மிரட்டல் விடுத்த விருகம்பாக்கம் ஆழ்வார்திருநகர் மீனாட்சியம்மன் நகரைச் சேர்ந்த தவெக பிரமுகர் கோகுல் (29) என்பவரை கைது செய்தனர்.

## வரதட்சணையாக 50 பவுன் நகை கேட்டு திருமணத்தை நிறுத்திய ஐடி ஊழியர் கைது

**சென்னை, அக்.5:**

சென்னை, முகப்பேரைச் சேர்ந்த 28 வயது பெண் ஒருவருக்கு இன்ஸ்டாகிராம் மூலம் ஐடி ஊழியரான மேற்கு முகப்பேரை சேர்ந்த ஆதித்யன் (31) என்பவருடன் அறிமுகம் ஏற்பட்டது. இதையடுத்து இருவரும் காதலித்து வந்துள்ளனர். ஒன்றரை வருடங்களாகப் பழகிய நிலையில் இருவீட்டாரும் நிச்சயம் செய்து, வரும் டிச.1-ம் தேதி திருமணம் செய்துவைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த மாதம் ஆதித்யன் மற்றும் அவரது பெற்றோர் திருமணத்துக்கு 50 பவுன் தங்க நகைகளை வரதட்சணையாக கேட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வளவு நகை போடும் அளவுக்கு வசதி இல்லை எனப் பெண்வீட்டார் தெரிவித்ததையடுத்து மாப்பிள்ளை வீட்டார் திருமணத்தை நிறுத்திவிட்டதாக கூறப்படுகிறது.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெண்ணின் குடும்பத்தினர் இந்த விவகாரம் தொடர்பாக திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தனர். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். இதில் வரதட்சணை கேட்டு திருமணத்தை நிறுத்தியது தெரியவந்தது. இதையடுத்து ஆதித்யனை போலீஸார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## சென்னையில் முதல்வர் ஸ்டாலின், நடிகை த்ரிஷா வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல்



**சென்னை, அக்.5:**

முதல்வர் ஸ்டாலின், நடிகை த்ரிஷா வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதேபோல், ஆளுநர் மாளிகை, விமான நிலையத்துக்கும் மிரட்டல் வந்தது.

நேற்று நள்ளிரவு 11.30 மணிக்கு டிஜிபி அலுவலகத்துக்கு இ-மெயில் ஒன்று வந்தது. அதில், தமிழக பாஜக தலைமை அலுவலகத்தில் வெடிகுண்டு வைத்துள்ளதாகவும், சற்று நேரத்தில் அது வெடித்து சிதறும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேபோல், இன்று அதிகாலை 4.10 மணிக்கு டிஜிபி அலுவலகத்துக்கு வந்த மற்றொரு மின்னஞ்சலில் முதல்வர் ஸ்டாலின் வீட்டில் வெடிகுண்டு வைத்துள்ளாக மிரட்டப்பட்டிருந்தது. இதேபோல், ஆளுநர் மாளிகை, நடிகை த்ரிஷா வீடு, நடிகர் எஸ்.வி.சேகர் வீடு, சென்னை விமான நிலையத்துக்கும் அடுத்தடுத்து மிரட்டல் விடுக்கப் பட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த போலீஸார், உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, போலீஸார் வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய்களுடன் சென்று ஆழ்வார்பேட்டையில் உள்ள முதல்வர் ஸ்டாலின் வீடு, அதே பகுதியில் உள்ள நடிகை த்ரிஷா வீடு, தி.நகரில் உள்ள பாஜக அலுவலகம், கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகை, மந்தைவெளியில் உள்ள நடிகர் எஸ்.வி.சேகர் வீடு மற்றும் சென்னை விமான நிலையம் என மிரட்டலுக்குள்ளான அனைத்து இடங்களிலும் சோதனை நடத்தினர்.

சோதனை முடிவில், சந்தேகப்படும்படியான எந்தப் பொருட்களும் கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து, வெடிகுண்டு மிரட்டல் தகவல் புரளி என்பது உறுதி செய்யப்பட்டது. சென்னையில் கடந்த ஓராண்டாக மின்னஞ்சல் மூலம் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள், முதல்வர் வீடு, அமைச்சர்கள் வீடு, ஆளுநர் மாளிகை உள்பட பல்வேறு இடங்களுக்கு தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருகிறது. இதில், தொடர்புடைய குற்றவாளிகளை போலீஸார் தனிப்படை அமைத்து தேடி வருகின்றனர். ஆனால், அவர்கள் இதுவரை பிடிபடவில்லை. மிரட்டல்களும் ஓய்ந்தபாடில்லை என்பது கவனிக்கத்தக்கது.

# “மாவோயிஸ்டுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த என்ன இருக்கிறது?” - அமித் ஷா கேள்வி



**பஸ்தர், அக்.5:**

சத்தீஸ்கரின் பஸ்தர் மாவட்ட தலைநகரான ஜக்தால்பூரில் நடைபெற்ற பஸ்தர் தசரா உற்சவம் மற்றும் சுதேசி மேளா நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அமித் ஷா, “மாவோயிஸ்ட் அச்சுறுத்தலுக்கு மார்ச் 31, 2026 அன்றுடன் விடை கொடுப்பது என முடிவெடுக்கப்பட்டுவிட்டது. ஆனால்,சிலர்பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ளனர். பஸ்தர் உள்பட மாவோயிஸ்ட்களால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் வளர்ச்சியை உறுதிப்படுத்த மத்திய அரசும் சத்தீஸ்கர் அரசும் உறுதிபூண்டுள்ளன. இதில், பேசுவதற்கு என்ன இருக்கிறது?

லாபகரமான சரணடைதல் மற்றும் மறுவாழ்வு கொள்கையை நாங்கள் வகுத்துள்ளோம். வாருங்கள், உங்கள் ஆயுதங்களை கீழே போடுங்கள். ஆயுதங்களை கைகளில் எடுத்து பஸ்தரின் அமைதியை சீர்குலைக்க முயன்றால், எங்கள் ஆயுதப்படைகள், துணை ராணுவப்படைகள், காவல்படைகள் பதிலடி கொடுக்கும். இங்குள்ள தண்டேஸ்வரி அம்மன் கோயிலுக்குச் சென்றபோது, அடுத்த ஆண்டு மார்ச் 31-ம் தேதிக்குள் பஸ்தர் பகுதி முழுவதையும் சிகப்பு பயங்கரவாதத்தில் இருந்து விடுவிப்பதற்கான வலிமையை பாதுகாப்புப் படையினர் பெற பிரார்த்தித்தேன். பஸ்தரின் அமைதியை ஆயுதங்களால் சீர்குலைப்பவர்களுக்கு பாதுகாப்புப் படையினர் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்.

வளர்ச்சிக்காக போராடுவதற்காகவே நக்ஸல் இயக்கம் பிறந்தது என்று டெல்லியில் சிலர் பல ஆண்டுகளாக தவறான தகவல்களைப் பரப்பி வந்தனர். ஆனால், முழு பஸ்தரும் பின்தங்கி இருப்பதற்குக் காரணமே, நக்ஸலைட் இயக்கம்தான். இன்று நாட்டின் ஒவ்வொரு கிராமத்துக்கும் மின்சாரம், குடிநீர், சாலைகள், கழிப்பறைகள், ரூ. 5 லட்சம் வரையிலான சுகாதார காப்பீடு, 5 கிலோ இலவச அரிசி போன்ற அரசின் திட்டங்கள் சென்று சேர்ந்துள்ளன. ஆனால், பஸ்தர் அத்தகைய வளர்ச்சியை இழந்துள்ளது. நரேந்திர மோடி அரசு சத்தீஸ்கருக்கு கடந்த 10 ஆண்டுகளில் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 4 லட்சம் கோடிக்கு மேல் நிதி வழங்கி உள்ளது. மார்ச் 31, 2026க்குப் பிறகு, மாவோயிஸ்ட்களால் உங்கள் வளர்ச்சியைத் தடுக்க முடியாது. மாவோயிஸத்தால் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள், முக்கிய நீரோட்டத்தில் சேரும்படி அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். மாநிலத்தில் உள்ள பழங்குடியினரை கவுரவிக்கும் வகையில் பாஜக அரசு பல்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரும் சுதேசி பொருட்களை வாங்க வேண்டும் என பிரதமர் மோடி வலியுறுத்தி வருகிறார். 140 மக்களும் சுதேசிக்கு மாறுவது என உறுதி எடுத்துக்கொண்டால், நமது நாடு உலகின் தலைசிறந்த பொருளாதாரமாக மாறுவதை யாராலும் தடுக்க முடியாது. சமீபத்தில் ஜிஎஸ்டி விகிதங்களைக் குறைத்து மிகப் பெரிய நிவாரணத்தை பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு அளித்துள்ளார். சுதேசி கலாச்சாரத்தை நாம் ஏற்றுக்கொண்டால், நாட்டின் பொருளாதாரம் மிகப்பெரிய உத்வேகத்தைப் பெறும்” என தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு செய்திகள்

### உலக பளுதூக்குதல்: மீராபாய் சானுவுக்கு வெள்ளி



**ஃபோர்டே, அக்.5:**

உலக பளுதூக்குதல் போட்டியில் இந்தியாவின் பளுதூக்குதல் வீராங்கனை மீராபாய் சானு வெள்ளிப் பதக்கம் வென்றார்.

நார்வே நாட்டின் ஃபோர்டே நகரில் நேற்று நடைபெற்ற போட்டியின் மகளிர் 48 கிலோ பிரிவில் பங்கேற்ற மீராபாய் சானு மொத்தம் 199 கிலோ (ஸ்னாட்சில் 84 கிலோ, கிளீன் அன்ட் ஜெர்க்கில் 115 கிலோ) தூக்கி 2-ம் இடம் பிடித்தார். இதன் மூலம் அவர் வெள்ளியை கைப்பற்றினார். இதே பிரிவில் வட கொரியாவின் ரி சோங்கும் முதலிடம் பிடித்து தங்கமும், தாய்லாந்தின் தான்யாத்தோன் சுக்சரோயன் 3-ம் இடம் பிடித்து வெண்கலமும் வென்றனர்.

### டி20 உலகக் கோப்பை கிரிக்கெட்: ஜிம்பாப்வே, நமீபியா அணிகள் தகுதி

**துபாய்:** 2026-ம் ஆண்டுக்கான டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியா மற்றும் இலங்கை நாடுகளில் நடைபெற உள்ளது. 2024-ம் ஆண்டு அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள் நாட்டில் நடைபெற்ற தொடர் போலவே இந்தத் தொடருக்கும் மொத்தமாக 20 அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட உள்ளன.

இந்தத் தொடருக்கு டி20 தரவரிசைப் பட்டியலில் உள்ள முதல் 8 அணிகள் நேரடியாகத் தகுதி பெற்றுவிடும். எஞ்சிய அணிகள் தகுதிச் சுற்றில் விளையாடி வெற்றி பெறும் அடிப்படையில் தகுதி பெறும்.

அதன்படி, ஜிம்பாப்வே அணி, தனது கடைசி நான்கு தகுதிச் சுற்றுப் போட்டிகளில் கென்யா, தான்சானியா ஆகிய அணிகளை வீழ்த்தி அடுத்த டி20 உலகக் கோப்பையில் விளையாடுவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது. அதேபோல, நமீபியா அணியும் உலகக் கோப்பையில் பங்கேற்க தகுதிபெற்றுள்ளது.

### டெல்லியில் வெளிநாட்டு பயிற்சியாளர்களை கடித்த தெருநாய்கள்

12-வது உலக பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்காக டெல்லிவந்த வெளிநாட்டுபயிற்சியாளர்களை தெருநாய்கள் கடித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கென்ய ஓட்டப்பந்தய பயிற்சியாளர் டென்னிஸ் மவான்சோ மற்றும் ஜப்பானைச் சேர்ந்த உதவி பயிற்சியாளர் மீகோ ஒகுமட்சு ஆகியோர் இன்று (அக்.03) காலை ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்தில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர்களை தெருநாய்கள் கடித்துள்ளன.

இதுகுறித்து கென்ய அணியின் மருத்துவர் மைக்கேல் ஒகாரோ கூறும்போது, “இந்த சம்பவம் காலை 9:30 மணியளவில் நடந்துள்ளது. டென்னிஸுக்கு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டது. உலக சாம்பியன்ஷிப் போன்ற ஒரு உலகளாவிய நிகழ்வில், இதுபோன்ற சம்பவங்கள் மிகப்பெரிய கவலைக்குரிய அறிகுறியாகும். இந்த நேரத்தில் டென்னிஸைப் பற்றி நாங்கள் கவலைப்படுகிறோம்” என்று தெரிவித்தார்.

## பிணைக் கைதிகளை விடுவிக்க ஹமாஸ் ஒப்புதல் - ட்ரம்ப் முயற்சிக்கு மோடி வரவேற்பு

**புதுடெல்லி, அக்.5:**

புதுடெல்லி: தங்கள் வசமுள்ள அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் அமைப்பினர் முன்வந்துள்ள நிலையில், இவ்விவகாரத்தில் ட்ரம்ப்பின் முயற்சிக்கு பிரதமர் நரேந்திர மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார். இது மிக முக்கியமான முன்னேற்றம் என்றும், மத்திய கிழக்கில் நீடித்த மற்றும் நியாயமான அமைதிக்கு வித்திடக்கூடிய இந்த முயற்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தாக்குதலும் இன்றுவரை தொடரும் காசா அவலமும்! கடந்த 2023 அக்டோபரில் ஹமாஸ் தீவிரவாத அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதல் மிக தீவிரமானது. அதற்கடுத்த இந்த இரண்டு ஆண்டுகளில் இஸ்ரேல் மேற்கொண்ட ராணுவ நடவடிக்கை காரணமாக 65,000-க்கும் அதிகமான காசா மக்கள் உயிரிழந்துள்ளனர்.

ட்ரம்ப் வைத்த செக்! இந்நிலையில், “மத்திய கிழக்கு பகுதியில் ஏதேனும் ஒரு வழியில் நமக்கு அமைதி ஏற்பட வேண்டும். ரத்தம் தெறிக்கும் வன்முறை முற்று பெற வேண்டும். ஹமாஸ் வசம் உள்ள அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும். அதில் உயிரிழந்தவர்களின் உடலையும் ஒப்படைக்க வேண்டும். முக்கியமாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குள் (வாஷிங்டன் நேரப்படி) அமைதி ஒப்பந்தத்துக்கு ஹமாஸ் உடன்பட வேண்டும். அந்த ஒப்பந்தம் உலகத்தின் பார்வைக்கு பகிரப்படும்.

இதுவே ஹமாஸுக்கு கடைசி வாய்ப்பு. இதற்கு உடன்படவில்லை என்றால் அவர்களுக்கு எதிராக மிக தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படும். அது இதுவரை யாரும் காணாத நரகமாக அமையும்.” என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார். அடிபணிந்த ஹமாஸ்: ட்ரம்ப்பின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து ஹமாஸ் அமைப்பானது தன் வசமுள்ள அனைத்து பிணைக் கைதிகளையும் விடுவிக்கத் தயார் என்றும், உடனடியாக அமைதிப் பேச்சுவார்த்தையை மத்தியஸ்தர்கள் மூலம் முன்னெடுக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

பிரதமர் மோடி வரவேற்பு: “காசாவில் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து வரும் நிலையில், அதற்கு தலைமை வகித்து அதிபர் ட்ரம்ப்பின் பணிகளை நாங்கள் வரவேற்கிறோம். இது மிக முக்கியமான முன்னேற்றம். மத்திய கிழக்கில் நீடித்த மற்றும் நியாயமான அமைதிக்கு வித்திடக்கூடிய இந்த முயற்சிக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும்.” என்று பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜுபின் கார்க் மர்ம மரணம்: உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் விசாரணை - அசாம் முதல்வர் அறிவிப்பு

**கவுஹாத்தி:** அசாம் பாடகர் ஜுபின் கார்க்கின் மர்ம மரணம் குறித்து குவாஹாட்டி உயர் நீதிமன்ற நீதிபதி சவுமித்ரா சைகியா தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்படும் என்று முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக நேரலையில் பேசிய ஹிமந்த பிஸ்வா சர்மா, “அசாம் மாநிலத்தின் கலாச்சார சின்னமாக இருந்த ஜுபின் கார்க்கின் மரணம் குறித்து விசாரிக்க குவாஹாட்டி உயர் நீதிமன்ற நீதிபதி சவுமித்ரா சைகியா தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் அமைக்கப்படும். ஜுபின் கார்க் மரணம் தொடர்பாக ஏதேனும் தகவல்கள் அல்லது வீடியோக்கள் எவரிடமேனும் இருந்தால், அதனை அவர்கள் ஆணையத்தின் முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஜுபின் கார்க் மரணம் தொடர்பாக பலரும் யூடியூப், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், ட்விட்டர் பக்கங்களில் பல்வேறு விதமான கருத்துகளை பகிர்கிறார்கள். விசாரணை ஆடைணயத்தின் முன் பிரமாணப் பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவர்களது கடமை. ஜுபின் கார்க் இறந்தபோது அவருடன் இருந்த அசாம் சிங்கப்பூர் சங்க உறுப்பினர்கள், தாங்களாக முன்வந்து வாக்குமூலம் அளிக்க வேண்டும். சிங்கப்பூரில் நடத்தப்பட்ட ஜுபின் கார்க்கின் பிரேதச பரிசோதனை அறிக்கையை, அவரது மனைவி கரிமாவிடம் அசாம் அரசு ஒப்படைத்துவிட்டது. குவாஹாட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செய்யப்பட்ட இரண்டாவது பிரேத பரிசோதனை அறிக்கையும் அவரிடம் வழங்கப்படும். அவற்றை வெளியிடுவதா வேண்டாமா என்ற முடிவை கரிமாவிடமே விட்டுவிடுகிறோம்.” எனத் தெரிவித்துள்ளார்.

## ம.பி.யில் குழந்தைகள் மரணத்துக்கு இருமல் சிரப் காரணமா? - 19 ஆலைகளில் ஆய்வு தீவிரம்

**ஜெய்ப்பூர், அக்.5:**

மத்தியப் பிரதேசத்தில் இருமல்சிரப் உட்கொண்டதால் குழந்தைகள் உயிரிழந்ததாக வந்த புகாரைத் தொடர்ந்து, ஆறு மாநிலங்களில் உள்ள இருமல் சிரப் மற்றும் ஆன்டிபயாட்டிக் மருந்துகள் தயாரிக்கும் 19 உற்பத்தி நிலையங்களில் மத்திய மருந்து ஒழுங்குமுறை நிறுவனமான (CDSCO) ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்தியப்பிரதேசத்தில் ஒன்பது குழந்தைகள், மகாராஷ்டிராவில் இரண்டு குழந்தைகள் மற்றும் ராஜஸ்தானில் ஒரு குழந்தை என 12 குழந்தைகள் இருமல் சிரப் உட்கொண்டதால் உயிரிழந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதனையடுத்து, மருந்துகளின் தரத்தில் குறைபாடுகளை கண்டறிந்து, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்ப்பதற்கான செயல்முறையை பரிந்துரைக்கும் நோக்கில், மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) ஆய்வுகள் நேற்று (அக்டோபர் 3) தொடங்கியது.

மேலும், மத்தியப் பிரதேசத்தின் சிந்த்வாரா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் குழந்தைகளின் இறப்புகளுக்கான காரணத்தை கண்டறிவதற்கு தேசிய வைராலஜி நிறுவனம், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம், மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு மற்றும் நாக்பூர் எய்ம்ஸ் உள்ளிட்ட பலதரப்பட்ட நிபுணர்களைக் கொண்ட குழு, பல்வேறு மாதிரிகள் மற்றும் காரணிகளை பகுப்பாய்வு செய்து வருகிறது.

மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பால் பரிசோதிக்கப்பட்ட ஆறு மருந்து மாதிரிகளிலும், மத்தியப் பிரதேச உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (MPFDA) பரிசோதிக்கப்பட்ட மூன்று மருந்து மாதிரிகளிலும் கடுமையாக சிறுநீரகத்தை பாதிக்கும் டைஎதிலீன் கிளைக்கால் (DEG) மற்றும் எத்திலீன் கிளைக்கால் (EG) மாசுபாடுகள் இல்லாதது கண்டறியப்பட்டதாக மத்திய சுகாதார அமைச்சகம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது. மத்தியப் பிரதேச அரசின் வேண்டுகோளின் பேரில், தமிழ்நாட்டின் காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரேசன் பார்மாவின் உற்பத்திப் பிரிவில் இருந்து சேகரிக்கப்பட்ட கோல்ட்ரிஃப் இருமல் சிரப்பின் மாதிரிகளை தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை சோதனை செய்தது.

‘வெள்ளிக்கிழமை மாலை தாமதமாக முடிவுகள் எங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன... மாதிரிகளில் அனுமதிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி டைஎதிலீன் கிளைக்கால் இருந்தது’ என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், உயிரிழந்த குழந்தைகள் வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், அரசு வழங்கிய மருந்துகளால் உயிரிழக்கவில்லை என்றும் ராஜஸ்தான் சுகாதார அமைச்சர் கஜேந்திர சிங் கின்ஸ்வர் தெரிவித்துள்ளார்.

ஜெய்ப்பூரில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய கின்ஸ்வர், “இறந்த குழந்தைகள் வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தனர். அரசு வழங்கிய மருந்துகளை உட்கொண்ட பிறகு இறக்கவில்லை. இருமல் மருந்துகளால் எந்தக் குழந்தையும் இறக்கவில்லை. ஒருவருக்கு மூளைக்காய்ச்சல், மற்றொருவருக்கு சுவாச தொற்று பிரச்சினை இருந்தது. குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட மருந்துகள் பரிசோதிக்கப்பட்டு அதில் பிரச்சினையில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், பெரியவர்களுக்கான மருந்துகள் சிறு குழந்தைகளுக்கு வழங்கப்பட்டால், அவை தீங்கு விளைவிக்கும். அதனால்தான் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் மருந்துகள் பொருத்தமானதா என்பதை தெளிவாகக் குறிப்பிடும் ஒரு புதிய முறையை நாங்கள் அறிமுகப்படுத்தவுள்ளோம். அரசாங்கத்தின் தரப்பில் எந்த அலட்சியமும் இல்லை. எங்கள் மருத்துவர்கள் அந்த மருந்தைபரிந்துரைக்கவில்லை. ஒரு சந்தர்ப்பத்தில், அது ஒரு செவிலியர் மற்றும் மருந்தாளரால் குழந்தைக்கு வழங்கப்பட்டது, அப்போதும் கூட அக்குழந்தை ஆரோக்கியமாக உள்ளது, உடல்நல பிரச்சினைகள் எதுவும் இல்லை. அரசாங்க இருப்பில் உள்ள மருந்துகள் நான்கு முறை சோதிக்கப்பட்டு பாதுகாப்பானவை என்று கண்டறியப்பட்டுள்ளன. இருப்பினும், சந்தேகம் உள்ள இடங்களில் நாங்கள் மீண்டும் மாதிரிகளை சேகரித்து சோதனை நடத்துகிறோம்” எனத் தெரிவித்தார்.

## பிஹார் தேர்தலை அதிகபட்சம் 2 கட்டங்களாக நடத்த அரசியல் கட்சிகள் வலியுறுத்தல்

**பாட்னா, அக்.5:**

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை அதிகபட்சம் இரண்டு கட்டங்களாக நடத்துமாறு இந்திய தேர்தல் ஆணையத்தை, அரசியல் கட்சிகள் கேட்டுக்கொண்டன.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் அடுத்த மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்ற நிலையில், தேர்தல் தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தியது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் விவேக் ஜோஷி, சுக்பீர் சிங் சந்து ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில், ஆறு தேசிய கட்சிகள், ஆறு மாநில கட்சிகள் என அங்கீகரிக்கப்பட்ட 12 கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய பிஹார் பாஜக தலைவர் திலிப் குமார் ஜெய்ஸ்வால், “தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 28 நாட்களுக்குப் பிறகு வாக்களிக்கும் தேதிகள் இருக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் பாஜக சார்பில் வலியுறுத்தினோம். ஒன்று அல்லது அதிகபட்சம் இரண்டு கட்டங்களாக தேர்தலை நடத்தி முடிக்குமாறும் கோரிக்கை வைத்துள்ளோம்.அப்போதுதான், வேட்பாளர்களின் செலவு குறையும். புர்கா அணிந்து வாக்களிக்க வருபவர்களின் முகம், பணியில் உள்ள பெண் அதிகாரிகளால் சோதிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டோம்.

மேலும், மக்களிடையே நம்பிக்கையை வளர்க்கும் நோக்கில் துணை ராணுவப் படைகளின் கொடி அணிவகுப்பை நடத்தவும் கேட்டுக்கொண்டோம். ஆற்றங்கரைப் பகுதிகளில், வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றும் வாய்ப்புகள் உள்ளதால், அத்தகைய பகுதிகளில் குதிரை ரோந்துக்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளோம்” என தெரிவித்தார்.

ஐக்கிய ஜனதா தளம் செயல் தலைவர் சஞ்சய் ஜா, “சத் பண்டிகைக்குப் பிறகு ஒரே கட்டமாக தேர்தலை நடத்த எங்கள் கட்சி சார்பில் நாங்கள் கோரிக்கை வைத்துள்ளோம். தேவை எனில், இரண்டு கட்டங்களாக நடத்தலாம்” என குறிப்பிட்டார்.

மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான ராஷ்ட்ரிய ஜனதா தளம் சார்பில் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சித்ரஞ்சன் ககன், மக்களவை உறுப்பினர் அபய் குஷ்வாஹா ஆகியோர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்டுள்ள இறுதி வாக்காளர் பட்டியலில் 3.66 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான காரணங்களை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர்.

ஆம் ஆத்மி கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, சிபிஎம், காங்கிரஸ், தேசிய மக்கள் கட்சி ஆகிய 6 தேசிய கட்சிகள், சிபிஐ(எம்எல்) விடுதலை, ஐக்கிய ஜனதா தளம், லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்), ராஷ்ட்ரிய ஜனதா தளம், ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி கட்சி, ராஷ்ட்ரிய லோக் சமதா கட்சி ஆகிய 6 மாநில கட்சிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டன.

இதையடுத்து, பிஹார் மாநில ஆணையர்கள், இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மூத்த காவல் கண்காணிப்பாளர்கள், காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தையும் தேர்தல் ஆணையம் நடத்தியது.

# நெட்ஃப்ளிக்ஸை ஆட்டம் காண வைத்த எலான் மஸ்க்! - பின்னணி?

**வாஷிங்டன், அக்.5:**

தொழிலதிபர் எலான் மஸ்க் போட்ட ஒரே ஒரு ட்வீட்டால் நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனத்தில் பங்கு தொடர்ந்து இறங்கு முகத்தில் இருந்து வருகின்றன. இது அந்த நிறுவனத்தையே ஆட்டம் காணச் செய்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே நெட்ஃப்ளிக்ஸ் தளத்தின் மீது அமெரிக்க வலதுசாரி ஆதரவாளர்கள் ஒரு குற்றச்சாட்டை வைத்து வருகின்றனர். அதாவது தனது திரைப்படங்கள், வெப் தொடர்கள் மூலம் LGBTQ கலாச்சாரத்தை நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் பார்வையாளர்களிடம் வலிந்து திணிக்கிறது என்பது அவர்களுடைய புகார்.

இந்தச் சூழலில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அமெரிக்காவில் தீவிர வலதுசாரி ஆதரவாளரான சார்லி கிர்க் கொல்லப்பட்டார். இதனையடுத்து சார்லி கிர்க் குறித்து



அனிமேஷன் பட இயக்குநரான லண்டனைச் சேர்ந்த ஹாமிஷ் ஸ்டீல் என்பவர் சர்ச்சைக்குரிய விமர்சனங்களை முன்வைத்தார். சார்லி கிர்க் ஒரு 'நாஜி' என்று அவர் கூறியது சமூக வலைதளங்களில் பெரும் சர்ச்சையை கிளப்பியது.

ஹாமிஷ் ஸ்டீல் இயக்கிய 'DEAD END: PARANORMAL PARK' என்ற அனிமேஷன் தொடர் நெட்ஃப்ளிக்ஸ் தளத்தில் கடந்த 2022ஆம் ஆண்டு வெளியானது. குழந்தைகள் பார்க்கும் இந்த அனிமேஷன் தொடரில் LGBTQ கலாச்சாரத்தை வலிந்து திணிக்கும் காட்சிகளை ஹாமிஷ் ஸ்டீல் இடம்பெறச் செய்துள்ளதாகவும் சர்ச்சை எழுந்தது.

சார்லி கிர்க் குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்ட ஒருவரை நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் பணியில் அமர்த்தியுள்ளது மட்டுமின்றி அவர் இயக்கிய தொடரில் LGBTQ கலாச்சாரத்துக்கு ஆதரவான கருத்துகள் இடம்பெற்றிருப்பதால் தனது நெட்ஃப்ளிக்ஸ் சந்தாவை ரத்து செய்வதாக பயனர் ஒருவர் எக்ஸ் தளத்தில் எழுதியிருந்தார். இந்த பதிவை ரீட்வீட் செய்திருந்த மஸ்க், தானும் நெட்ஃப்ளிக்ஸ் சந்தாவை ரத்து செய்வதை உறுதி செய்தார்.

இதனையடுத்து #CANCELNETFLIX என்ற ஹேஷ்டேக் எக்ஸ் தளத்தில் உலகம் முழுவதும் டிரெண்ட் ஆகத் தொடங்கிவிட்டது. ஆயிரக்கணக்கானோர் நெட்ஃப்ளிக்ஸ் சந்தாவை ரத்து செய்த ஸ்க்ரீன்ஷாட்களை பகிர்ந்து வருகின்றனர். எலான் மஸ்க்கும் தொடர்ந்து நெட்ஃப்ளிக்ஸை கடுமையாக விமர்சிக்கும் வகையில் பதிவிட்டு வந்தார். மேலும் பல தொடர்கள், திரைப்படங்களில் இடம்பெற்ற LGBTQ தொடர்பான காட்சிகளையும் பதிவிட்டு கடுமையான விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

இதன் எதிரொலியாக நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனத்தின் பங்குகள் கடந்த இரண்டு நாட்களாக மளமளவென சரிந்துள்ளன. இது கடந்த இரண்டு மாதங்களில் இல்லாத அளவு வீழ்ச்சி என்று கூறப்படுகிறது.

மஸ்க்கின் பதிவுகளைத் தொடர்ந்து, நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் அதன் சந்தை மூலதனத்தில் 1.05 சதவீதத்தை இழந்துள்ளது. இது $5.33 பில்லியன் டாலர்கள் ஆகும். இதனால் அந்த நிறுவனத்தின் மதிப்பு 507.25 பில்லியன் டாலர்களாகக் குறைந்துள்ளது. இதே நிலை தொடர்ந்து நீடித்தால் நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனம் கடும் இழப்பை சந்திக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், நெட்ஃப்ளிக்ஸ் பங்குகள் அதன் முதலீட்டாளர்களுக்கு 128%-க்கும் அதிகமான வருமானத்தை அளித்துள்ளன. கடந்த ஆண்டில், நெட்ஃப்ளிக்ஸ் பங்கு 61% க்கும் மேல் அதிகரித்தது. 2025-ஆம் ஆண்டில், அதன் பங்குகள் 30% க்கு மேல் அதிகரித்தன. இருப்பினும் கடந்த மாதம் 4.60% சரிவைக் கண்டன.

எலான் மஸ்க் VS நெட்ஃப்ளிக்ஸ் இடையிலான இந்த விவகாரம் சமூக வலைதளங்களில் LGBTQ, குழந்தைகளின் பாதுகாப்பு என பெரும் விவாதங்களை கிளப்பியுள்ளன. இதுகுறித்து லட்சக்கணக்கான பயனர்கள் தொடர்ந்து விவாதித்து வருகின்றனர்.

# எச்1பி விசாவுக்கான புதிய கட்டணத்தை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு




**வாஷிங்டன், அக்.5:**

எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக அறிவித்த அதிபர் டொனால்டு ட்ரம்ப்பின் முடிவை ரத்து செய்யக் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சுகாதார நிறுவனங்கள், மத நிறுவனங்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள் உள்ளிட்டோரைக் கொண்ட கூட்டமைப்பு ஒன்று, ட்ரம்ப் அறிவித்துள்ள எச்1பி விசா கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி சான்பிரான்சிஸ்கோ மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அவர்கள் தங்கள் மனுவில், "எச்1பி விசாவுக்கான புதிய விதிமுறைகளை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் கடந்த செப்டம்பர் 19-ல் வெளியிட்டார். அதில், எச்1பி விசாவுக்கான கட்டணத்தை 1 லட்சம் டாலராக அதிகரிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2,000 டாலர் என்பதிலிருந்து 5 ஆயிரம் டாலராக கட்டணத்தை அதிகரித்த ட்ரம்ப், தற்போது பன்மடங்கு உயர்த்தி இருப்பது திறமையான வெளிநாட்டு தொழிலாளர்களை நம்பியிருக்கும் அமெரிக்க நிறுவனங்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எச்1பி விசா திட்டம், வெளிநாட்டு சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கல்வியாளர்களை அமெரிக்காவில் பணியமர்த்துவதற்கான ஒரு முக்கிய திட்டம். இது அமெரிக்காவின் புதுமை மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. சிறப்புத் துறைகளில் பணியாளர்களை நிரப்ப இது அனுமதிக்கிறது.

அரசின் தற்போதைய முடிவால், மருத்துவமனைகள் மருத்துவ ஊழியர்களையும், தேவாலயங்கள், போதகர்களையும், வகுப்பறைகள் ஆசிரியர்களையும், நாடு முழுவதும் உள்ள தொழில்கள் முக்கிய கண்டுபிடிப்பாளர்களையும் இழக்கும் அபாயம் உள்ளது. எனவே, இந்த உத்தரவை தடுத்து, முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களுக்கான முன் கணிப்புத் தன்மையை மீட்டெடுக்குமாறு கோருகிறோம்" என தெரிவித்துள்ளனர்.

எச்1பி விசா திட்டம், அமெரிக்க நாடாளுமன்றத்தால் உருவாக்கப்பட்டது. அதிக திறமைகளைக் கொண்ட பணியாளர்களை ஈர்ப்பதற்காக கொண்டுவரப்பட்ட இந்த விசா மூலம் அமெரிக்காவில் இருப்போரில் மூன்றில் ஒரு பங்கு பேர், செவிலியர்களாகவும், ஆசிரியர்களாகவும், மருத்துவர்களாகவும், பாதிரியார்களாகவும், போதகர்களாகவும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடி புத்திசாலியான தலைவர்: ரஷ்ய அதிபர் புதின் பாராட்டு

**மாஸ்கோ, அக்.5:**

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு எதிராக இந்தியப் பொருட்கள் மீது அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் 50 சதவீத வரி விதித்துள்ளார். இதனால் இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் அண்மையில் பேசிய ட்ரம்ப், "ரஷ்யாவிடம் இருந்து இந்தியாவும் சீனாவும் தொடர்ந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வது, ரஷ்யாவின் உக்ரைன் போருக்கு முக்கிய நிதி ஆதாரமாக உள்ளது" என்றும் குற்றம் சாட்டினார்.



இந்நிலையில் ரஷ்யாவின் சோச்சி நகரில் ஒரு கலந்துரையாடல் கூட்டத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் பேசியதாவது: ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வது முற்றிலும் பொருளாதார நலனுக்கானது. அதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை. நமது கச்சா எண்ணெயை இந்தியா வாங்க மறுத்தால் அந்நாட்டுக்கு சில இழப்புகள் ஏற்படும். இந்திய மக்கள், அரசியல் தலைமை எடுக்கும் முடிவுகளை உன்னிப்பாக கண்காணிப்பார்கள். யாருக்கு முன்பாகவும் எந்த அவமானத்தையும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். பிரதமர் மோடியை நான் நன்கு அறிவேன்; அவர் ஒருபோதும் தவறான முடிவை எடுக்க மாட்டார். அமெரிக்க வரிவிதிப்பால் இந்தியாவுக்கு இழப்பு ஏற்படுகிறது. இது, ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதன் மூலம் ஈடு செய்யப்பட்டு விடும். மேலும் இறையாண்மை கொண்ட நாடு என்ற கவுரவத்தை இந்தியா பெறும். இந்தியாவும் ரஷ்யாவும் சிறப்புமிக்க உறவை பகிர்ந்து கொள்கின்றன. கடந்த காலங்களிலும் இந்தியாவுடன் நமக்கு எவ்வித பிரச்சினையோ, பதற்றமோ இருந்ததில்லை. பிரதமர் மோடி எனது நம்பிக்கைக்குரிய நண்பர். அவர் சமச்சீரான மனநிலை கொண்ட புத்திசாலியான தலைவர். தேசநலனுக்காக பாடுபடக்கூடியவர். இந்தியாவிடம் இருந்து கூடுதலாக வேளாண் பொருட்கள் மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்து வர்த்தகப் பற்றாக்குறையை ரஷ்யா குறைக்கும்.

வர்த்தக கூட்டாளிகள் மீதான அமெரிக்காவின் அதிக வரிவிதிப்பு, உலகளாவிய பணவீக்கத்தை அதிகரிக்கும். மேலும் அமெரிக்க ரிசர்வ் வங்கி தனது வட்டி விகிதங்களை அதிகமாக பராமரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். இவ்வாறு புதின் பேசினார்.

# ஜப்பானின் முதல் பெண் பிரதமராகிறார் சனே தகைச்சி



**டோக்கியோ, அக்.5:**

ஜப்பானின் ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவராக தேர்வாகியுள்ள சனே தகைச்சி, இம்மாத மத்தியில் அந்நாட்டின் பிரதமராக பதவியேற்க உள்ளார்.

ஜப்பானின் ஆளும் கட்சியாக லிபரல் டெமாக்ரடிக் கட்சி உள்ளது. இக்கட்சியின் தலைவராகவும் ஜப்பானின் பிரதமராகவும் இருந்த ஷிகெரு இஷிபா, ஓராண்டு பதவிக்காலத்துக்குப் பிறகு பதவி விலகப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தார். இதையடுத்து, லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் சனே தகைச்சி வெற்றி பெற்றதாக இன்று அறிவிக்கப்பட்டது.

முதல் கட்ட வாக்குப்பதிவில், மொத்தமுள்ள 589 வாக்குகளில் 183 வாக்குகளை சனே தகைச்சி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட கொய்சுமி 164 வாக்குகளைப் பெற்றார். மற்ற மூன்று போட்டியாளர்கள், போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இரண்டாவது சுற்றில் கட்சி எம்பிக்கள் வாக்களித்தனர். இதில், சனே தகைச்சியைவிட கொய்சுமி அதிக வாக்குகளைப் பெற்றார். எனினும், இரண்டாவது சுற்றுக்குப் பிறகு நடத்தப்பட்ட தீர்க்கமான சுற்று வாக்கெடுப்பில் சனே தகைச்சி வெற்றி பெற்றார். இதையடுத்து, லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவராக சனே தகைச்சி முறைப்படி பொறுப்பேற்றார். அவருக்கு கட்சியின் மூத்த தலைவர்கள், நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்தனர்.

இதையடுத்து, அவர் நாட்டின் பிரதமராக இம்மாத மத்தியில் பதவியேற்க உள்ளார். 64 வயதாகும் வலதுசாரி தலைவரான சனே தகைச்சி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டி இருக்கும். லிபரல் டெமாக்ரடிக் கட்சி தலைமையிலான கூட்டணி, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருக்கவில்லை. எனினும், நம்பிக்கை வாக்கெடுப்பில் அவர் வெற்றி பெறுவார் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 70 ஆண்டுகளாக ஜப்பானின் ஆளும் கட்சியாக லிபரல் டெமாக்ரடிக் கட்சியே பெரும்பாலும் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆய்வகத்தில் உருவான இதயம், கல்லீரல்: அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனை

**வாஷிங்டன், அக்.5:**

அமெரிக்காவின் நார்த் டெக்சாஸ் பல்கலைக்கழகம், ஸ்டான்போர்டு பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இணைந்து இதயம், கல்லீரல், ரத்த நாளங்கள் உள்ளிட்ட மனித உறுப்புகளை ஆய்வகத்தில் செயற்கையாக உருவாக்கி சாதனை படைத்து உள்ளனர்.

இதுதொடர்பான ஆய்வறிக்கை முன்னணி மருத்துவ இதழ்களில் வெளியிடப்பட்டு உள்ளது. அந்த ஆய்வறிக்கையில் கூறியிருப்பதாவது: ஆய்வகத்தில் ஸ்டெம் செல்களை பயன்படுத்தி செயற்கை இதயத்தை உருவாக்கும் ஆராய்ச்சியில் கடந்த 2017-ம் ஆண்டு முதல் ஈடுபட்டு வருகிறோம். இதன்படி 16 நாட்களில் எங்களது ஆய்வகத்தில் செயற்கை இதயம் உருவாக்கப்பட்டது. இந்த செயற்கை இதயம், மனித இதயத்தை போன்று துடிக்கிறது.

இதே போல செயற்கை கல்லீரலையும் உருவாக்கி உள்ளோம். மேலும் செயற்கை ரத்த நாளங்களையும் உருவாக்கி இருக்கிறோம். எங்களது ஆராய்ச்சியின் மூலம் லட்சக்கணக்கான மக்களை காப்பாற்ற முடியும். இவ்வாறு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# அமெரிக்க அழுத்தங்களுக்கு இந்தியா அடிபணியாது: ரஷ்ய அதிபர் புதின் உறுதி

**சோச்சி, அக்.5:**



அயலக அழுத்தங்களுக்கு இந்தியா அடிபணியாது என ரஷ்ய அதிபர் புதின் தெரிவித்துள்ளார். இந்திய பொருட்களுக்கு 50 சதவீதம் இறக்குமதி வரியை டொனால்டு ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க அரசு நிர்வாகம் விதித்துள்ள சூழலில், அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தெற்கு பகுதியில் உள்ள சோச்சி நகரில் சர்வதேச அளவிலான பாதுகாப்பு தொடர்பான நிகழ்வு நடந்தது. இந்தியா உள்ளிட்ட 140 நாடுகள் பங்கேற்ற இந்த நிகழ்வில் புதின் பேசியது: "ரஷ்யாவின் வர்த்தக ரீதியான கூட்டாளிகள் மீது அதிக வரிகள் விதிக்கப்பட்டால், அது உலக அளவில் எரிசக்தி பொருட்கள் மீதான விலையை உயர்த்தும். இதன் காரணமாக அமெரிக்க ஃபெடரல் மத்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை அதிகரிக்க வேண்டிய சூழல் ஏற்படும். மேலும், இதனால் அமெரிக்க பொருளாதாரம் மந்தமாகும்.

எனது இந்திய பயணத் திட்டத்தை எதிர்நோக்கி உள்ளேன். இந்தியாவுடன் எங்களுக்கு எப்போதும் சிக்கல் இருந்ததில்லை. நிச்சயம் அயலக அழுத்தங்களுக்கு இந்திய தேசம் அடிபணியாது. அது மாதிரியான நகர்வை பிரதமர் மோடி அனுமதிக்கமாட்டார். இந்திய தேசம் ரஷ்யாவில் இருந்து எரிசக்தி பொருட்களை வாங்குவதை நிறுத்தினால் சுமார் 9 பில்லியன் முதல் 10 பில்லியன் டாலர்கள் வரை ரஷ்யாவுக்கு இழப்பு ஏற்படும் என்றார்.

# கனடா திரையரங்குகள் மீது தாக்குதல்: இந்திய திரைப்படங்கள் திரையிடுவது நிறுத்தம்

**ஒட்டாவா, அக்.5:**

கனடாவில் இந்திய திரைப்படங்களை திரையிடுவதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அதன்தொடர்ச்சியாக, திரையரங்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் ரிஷப் ஷெட்டியின் காந்தாரா: சாப்டர் 1 உட்பட பல இந்திய திரைப்படங்களை திரையிடுவது உடனடியாக நிறுத்தப்பட்டது. இது இந்திய ரசிகர்களிடையே ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், படத்தின் வசூலும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.






இந்த தாக்குதலுக்கு காலிஸ்தான் தீவிரவாதிகள் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள திரையரங்குகள் கடந்த ஒரு வாரத்தில் இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தீவைப்பு மற்றும் துப்பாக்கி சூடு தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளது. இதையடுத்து, அந்த திரையரங்குகளில் இந்திய திரைப்படங்கள் திரையிடுவது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து காவல் துறை அதிகாரிகள் கூறியதாவது: ரிஷப் ஷெட்டியின் காந்தாரா: சாப்டர் 1 மற்றும் பவன் கல்யாணின் தே கால் ஹிம் ஓஜி உள்ளிட்ட இந்திய திரைப் படங்கள் திரையிடப்பட்டிருந்த திரையரங்குகளை குறிவைத்து செப்டம்பர் 25 மற்றும் அக்டோபர் 2 தேதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டது.

நள்ளிரவில் சொகுசுக் காரில் வந்த மர்மநபர்கள் திரையரங்குகளின் மீது தீ வைத்தும், துப்பாக்கியால் சுட்டும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பொருட்சேதம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தையடுத்து இந்திய திரைப்படங்களை திரையிடுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் அப் பகுதியில் உள்ள காலிஸ்தான் தீவிரவாதிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால், காவல் துறை தரப்பு இதுகுறித்து உறுதிப்படுத்தவில்லை. விசாரணை நடைபெற்று வருவதாக கூறப்பட்டுள்ளது.